# தமிழரசு

மலர் 4 (16—4—1974) இதழ் 20

இந்த இதழில்

முதல்வர் கலைஞர் உரை

**கலை வளர்ப்போம்!**
**களை களைவோம்!**

பாவேந்தர் பாரதிதாசன் கவிதை
பயணிகள் பார்வையில் பூம்புகார்
அமெரிக்கக் கவிஞர் ராபர்ட் ஃபிராஸ்ட்
யானைச் செல்வம்
இதயம் பேசுகிறது
போர்வை (கவிதை)
இதுதான் சென்னை !
சிறுவரைச் சீர்திருத்தும் செங்கைப் பள்ளி
திறமை வாய்ந்த தீயணைப்புத் துறை
தமிழகத்தில் கல்வி வளர்ச்சி
எண்ணூர் தரும் இந்தியத் தரமணல்

மற்றும் வழக்கமான பகுதிகள்.

அட்டையில் காட்சி தருவது

உதகமண்டலத்தில் நடைபெற்ற மலர்க்காட்சியின் ஒரு தோற்றம்.

இமரன்



குமரன்——

# கலை வளர்ப்போம்! களை களைவோம்!

ஆண்டுதோறும் தொடர்ந்து நடைபெறுகின்ற இந்த இனிய விழா நாமனைவரும் சந்தித்து இடையிடையே துவண்டு போகிற தமிழ் உணர்வையும், கலை உணர்வையும் புதுப்பித்துக் கொள்வதற்குப் பயன்படுகிற வகையில் அமைந்துள்ளது.

நாவலர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல — தமிழன் கலையை இழக்கச் சம்மதிக்க மாட்டான்; கலையை வளர்ப்பதிலும், கலையின் மூலம் கருத்துக்களை வழங்குவதிலும், சமுதாயத் தொண்டாற்றுவதிலும் இன்று தமிழ்ச் சமுதாயத்திலே ஏற்பட்டிருக்கிற மறுமலர்ச்சி, உள்ளபடியே பாராட்டத்தக்கதாக—வரவேற்கத் தக்கதாக அமைந்துள்ளது என்றாலும்—கலை இடையிடையே களை தோன்றுவதற்கும் இடம் கொடுத்து விடுகின்ற காரணத்தால், கலை கலையாகவே இருந்திட வேண்டும், களைகள் தோன்றிடாமல் கலை வளர்க்கப்பட வேண்டும் என்ற சூளுரையை இந்த விழாவில் நாமனைவரும் மனத்தில் பதிய வைத்துக் கொள்ள வேண்டுமென்ற என்னுடைய அன்பான வேண்டுகோளை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்ற ஆண்டு இந்த மாமன்றத்திலே நாமெல்லாம் கூடிய போது, சங்கீத நாடகச் சங்கம் விடுத்த அழைப்பின் பேரில் நாம் இந்த விழாவில் கலந்து கொண்டோம். இந்த ஆண்டு இயல் இசை நாடக மன்றத்தின் அழைப்பின் பேரில் கூடியிருக்கிறோம். பெயரில் மாற்றம் இருந்தாலும், இங்கே நடக்கிற நிகழ்ச்சிகளில் மாறுபாடு இல்லை; அளிக்கப்படுகிற சிறப்புக்களில் வேறுபாடு இல்லை; தேர்ந்தெடுக்கப்பட விதிக்கப்பட்டிருக்கிற தகுதிகளில் முரண்பாடில்லை. ஆனால் தமிழ் உணர்வில்—அதற்கும் இதற்கும் இடையில் மகத்தான வேறுபாடு உண்டு. அந்த வேறுபாட்டின் அடிப்படையில்தான்—கடந்த இரண்டொரு திங்களுக்கு முன்பு நடைபெற்ற வேறொரு விழாவில் நானும் நாவலரும் கலந்து கொண்ட போது—தமிழ்நாடு சங்கீத நாடகச் சங்கம் என்ற பெயரை இயல், இசை, நாடக மன்றம் என்று மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டதன் அடிப்படையில், அந்தக் கருத்தை உடனடியாக இந்த மன்றத்தினரும் அரசினரும் ஏற்றுக் கொண்டு பெயர் மாற்றப்பட்டிருக்கிறது.

பெயர் மாற்றங்கள் சிலருக்குச் சாதாரணமாகத் தோன்றலாம்; இது என்ன, பெயர் மாற்றம்தானே, இது தேவைதாஞை, என்று தோன்றலாம். சிலருக்கு, 'ஏன் மாற்ற வேண்டும்' என்று கேட்கத் தோன்றலாம். ஆனால் பெயரில் எத்தகைய உணர்வுகளை நாம் உள்ளடக்க முடியும் என்பதற்கு இந்தப் பெயர் மாற்றம் தக்க சான்றாகும்.

சங்கீத நாடகச் சங்கம் என்று விருதுகள் வழங்கும் நேரத்தில் சங்கீதத் துறையிலும் நாடகத் துறையிலும் தேர்வு பெற்றவர்கள் இந்த விருதுகளைப் பெற முடியும், ஆனால் கொஞ்சம் வரம்பு கடந்து சினிமாத் துறையிலே உள்ளவர்கள் கதை, வசனம் எழுதுபவர்கள் இவர்கள் எல்லாம்கூட அந்தப் பெயரின் வரம்பைக் கடந்து விருதுகளைப் பெற்றுக் கொண்டிருந்தார்கள். இன்று யார் விருது பெற்றாலும் அவர்கள் இயல், இசை, நாடகம் என்ற இந்த மூன்று துறையின் வட்டத்திற்குள் வருபவர்களாகத்தான் இருக்க முடியும் என்ற வகையில் இந்தப் பெயர் மாற்றம் பொருத்தமுடையதாக அமைந்திருக்கிறது.

ஒவ்வொரு ஆண்டும் நானும் நாவலரும் எங்களுடைய மாவட்டமான தஞ்சை மாவட்டத்தின் சார்பில் பெருமைப்பட்டுக் கொள்ளும் வகையில் இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன. மறைந்த ஏழு பேருடைய



படங்கள் இங்கே திறக்கப்பட்டதென்றால், அதிலே மதுரை பொன்னுசாமி அவர்களின் படத்தைத் தவிர மற்றவர்கள் எல்லாம் தஞ்சை மாவட்டத்திற்குச் சொந்தமானவர்கள் என்று சொல்வதாலோ, மேலும் இங்கே இன்று 29 பேர் கலைமாமணி விருது பெற்றார்கள் என்றால், அவர்களிலே பன்னிரண்டுக்கு மேற்பட்டவர்கள் தஞ்சை மாவட்டத்துக்காரர்கள் என்று சொல்வதாலோ, நான் மாவட்ட சுயநலத்தோடு பேசுவதாகக் கருதிக் கொள்ளக் கூடாது. தஞ்சை மாவட்டம் எப்படி நெற்களஞ்சியமாக இருக்கிறதோ அதைப் போல கலைக் களஞ்சியமாகவும் விளங்குகிறது என்பதற்கு இது ஓர் ஆதாரமே தவிர வேறல்ல.

மற்ற மாவட்டத்துக்காரர்கள் யாரும் கோபித்துக்கொள்ளக்கூடாது. தஞ்சை மாவட்டத்திலே முன்பெல்லாம் சொல்வார்கள். கிட்டப்பா போன்ற பெரிய மேதைகள், சுந்தராம்பாள் அம்மையார் போன்ற நல்ல கலை வல்லுனர்கள் எல்லாம் தஞ்சை மாவட்டத்திலே சென்று ஒரு நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு விட்டால் அதற்குப் பிறகு அவர்கள் ஏதோ விசுவாமித்திரர், வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷி பட்டம் பெற்றால் எவ்வளவு பெருமையாகக் கருதுவாரோ அதைப் போலக் கருதுகிற காலம் ஒன்று இருந்தது. இருந்தது என்று சொல்வதால் இறந்த காலம் என்று கருத வேண்டாம். இன்றைக்கும் இருக்கிறது என்ற பெருமையோடுதான் அதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அப்படிப்பட்ட கலை, தஞ்சை மாவட்டத்திலே இருந்து பிறந்து, செழித்து வளர்ந்து, இன்று தமிழகம் ஒரு கலைப்பூங்காவாகத் திகழ்கிற அளவிற்கு இருக்கிறது என்ற பெருமைக்கு எல்லாக் கலைஞர்களும் உரியவர்கள். இன்று பரிசு பெற்ற அத்தனை கலைஞர்களையும் நான் பாராட்டுகின்றேன்.

நாவலர், கலையின் பெருமையைப்பற்றிக் கூறுகிற நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட்டார்; "பண்டைக் காலத்தில் அரசர்களிடம்-ஜமீன்தார்களிடம் கலைஞர்கள் பரிசுகளைப் பெற்றார்கள்" என்று குறிப்பிட்டார். இன்றைக்குப் பரிசு கொடுத்த அரச வம்சங்கள் அழிந்துவிட்டன; ஜமீன்தார்கள் அழிக்கப்பட்டு விட்டனர். ஆனால் பரிசு பெற்ற கலைஞர்கள் வம்சம் அழியாமல் இருக்கிறது. தொடர்ந்து வளர்ந்து கொண்டும் இருக்கிறது. அதற்குக் காரணம் இதை அழிக்க முடியாது; கலை உள்ளம் உள்ளவர்களையும் சுலபத்தில் அழித்துவிட முடியாது.

பொறுப்பை ஏற்கின்றவர்களுக்கு கலையுள்ளம் இருக்கிற நேரத்தில்தான் அவர்களால் மனிதாபிமான உணர்ச்சிகளை உணர்ந்து கொள்ள முடிகிறது. கலையுள்ளம் படைத்தவர்கள் பொறுப்பேற்கும் பொழுது அவர்கள் படைத்த பாத்திரங்களை நாட்டிலே காண்கிறார்கள்.

இன்று பரிசுபெற்ற சகோதரர் அரங்கண்ணல் அவர்களாலும் மற்ற எழுத்தாளர்களாலும், பல பாத்திரங்களைப் படைக்கின்ற ஆற்றல் படைத்தவர்கள்.

ஏழையை, பிச்சைக்காரனை, தொழுநோயாளியை பாத்திரமாகப் படைக்கிறோம். அவர்களுடைய கஷ்டங்களை எல்லாம் எழுதுகிறோம். அங்கே அந்தப பாத்திரமாகவே மாறுகிறோம். ஒரு பிச்சைக்காரனைப்பற்றி எழுதுகிற நேரத்தில் எழுத்தாளர் பிச்சைக்காரனாகவே மாறினால்தான் அந்தப் பாத்திரம் ஒழுங்காக இருக்க முடியும். அப்படிப்பட்ட பாத்திரம் படைக்கப்பட்ட பிறகு எழுத்தாளனாகவே நின்று விடுவார்களானால், அந்தப் பாத்திரங்களுக்காக வாதாடுபவர்களாக இருப்பார்கள்.

ஆனால் அந்த எழுத்தாளர்கள் பொறுப்பிலே அமர்ந்து விடுவார்களானால், நாம் படைத்த பாத்திரங்கள் நாடக மேடையில் மாத்திரமல்ல, நாட்டிலும் நடமாடுகிறார்கள். ஆகவே அவர்களை வெறும் பாத்திரங்களாகப் படைப்பது மாத்திரமல்ல, அவர்களுடைய கையிலே இருக்கிற பிச்சைப் பாத்திரங்களைப் பிடுங்கி அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டும் என்கிற உணர்வு ஏற்படுகிறதென்றால் அதற்கு அடிப்படைதான் கலை உள்ளத்தோடு பிரச்சினைகளை அணுகுகின்ற தன்மையாகும். ஆகவே, கலை உள்ளம் படைத்தவர்கள் நிச்சயமாக மனிதாபிமானத்தோடு இருப்பார்கள். இது பொது இலக்கணமா என்றால், விதிவிலக்குகளும் உண்டு. இதையே பொது இலக்கணமாக எடுத்துக்கொள்ளக் கூடாது. கலையுள்ளம் படைத்தவர்கள் மனிதாபிமான உணர்ச்சியோடு இருப்பார்கள். அதைப் போல, கலையுள்ளம் படைத்தவர்கள் மனிதாபிமானம் அற்ற நிலையிலும் இருப்பார்கள். அவர்கள் எல்லாம் விதிவிலக்குகள்.

கலைஞர்கள் அந்தக் காலத்தில் எப்படிச் சிறப்பிக்கப் பட்டார்கள் என்றால் – கிள்ளிவளவன் என்ற மா மன்னனுக்கு உற்ற தோழர் நப்பசலையார் என்ற புலவர், அந்தக் கிள்ளிவளவனைப்பற்றிப் பாடுகிறார்.

கிள்ளிவளவன் இறந்து விடு

முதல்வர் கலைஞர்



கிறுன். அவர் எப்படி இறந்திருக்க முடியும் என்று கேள்வி கேட்கிறுர். அவனை யாரும் கொல்ல முடியாது.

“பொலந்தார் மண்டமர்
கடக்குந் தானைத்
திண்தேர் வளவற்
கொண்ட கூற்றே.”

அப்படிப்பட்ட மா மன்னனின் உயிரை எடுத்துவிட்ட கூற்றுவன்—எமன் எப்படி அவன் உயிரைப் பறித்திருக்க முடியும், என்று கேட்கிறுர். ஏன் எடுக்க முடியாதாம்....?

''செற்றன் ருயினும்
செயிர்த்தன் ருயினும்
உற்றன் ருயினும்
உய்வின்று மாதோ!''

எதிர்த்தோ - உறவாடியோ சண்டையிட்டோ கிள்ளிவளவனுடையஉயிரை எமனுல்பறிக்க முடியாது. பிறகு எப்படிப் பறித்திருப்பான்?

''பாடுநர் போலக்
கைதொழு தேத்தி
இரந்தன் ருகல்
வேண்டும்.''

எமன் ஒரு புலவர் போல வேடம் போட்டுக் கொண்டு போய் கிள்ளிவளவனிடத்தில் உயிரைத் 'தா' என்று கேட்டிருப்பான். கிள்ளிவளவன் கூற்றுவனைப் புலவனெனக் கருதித் தனது உயிரைக் கொடுத்திருப்பான்.

ஆக, அந்தக் காலத்தில் அரசர்கள் புலவர்கள் மீது எத்தகைய மதிப்புவைத்திருந்தார்கள் என்பதற்கு எடுத்துக் காட்டுத்தான் நப்பசலையாரின் இந்தக் கவிதையாகும்.

அப்படிப்பட்ட பெரும் புகழும் சீரும் சிறப்பும் வாய்ந்த கலை உலகப் பெருமக்களைத் தமிழக அரசு தொடர்ந்து பெருமைப்படுத்தி வருகிறது.

ஏற்கெனவே இருந்த அரசு தொடங்கிய காரியம் என்பதை நாம் மறந்துவிடவில்லை. ஆனல் நல்லவைகளைத் தொடர்ந்து செய்வதில் இந்த அரசு என்றைக்கும் பின் வாங்குவதில்லை என்பதற்கு அடையாளமாக, தொடர்ந்து செய்வது மாத்திரமல்ல, அதை விரிவாகச் செய்வது, மேலும் மணம் கமழுகின்ற அளவுக்குச் செய்வது என்பதிலே இந்த அரசு தொடர்ந்து நற்பணிகளை ஆற்றிக் கொண்டிருக்கிறது என்பதை அனைவருக்கும் எடுத்துக் காட்டி—தொடர்ந்து அதே பாதையிலே பணியாற்றும் என்பதையும் எடுத்துச் சொல்லிப் பரிசு பெற்றவர்களைப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

(30-3-74-ஆம் நாள் இயல், இசை, நாடக மன்ற விருது வழங்கு விழாவில் ஆற்றிய உரை)






# மாவலிபுரச் செலவு

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

ஒரு நாள் மாலை 4-மணிக்குச் சென்னை, பக்கிங்காம் கால்வாயில் தோணி ஏறி மறுநாள் காலை 9 மணிக்கு மாவலிபுரம் சேர்ந்தோம் நானும் என் தோழர் பலரும். வழிப் போக்கின் இடைநேரம் இனிமையாய்க் கழிந்தது. எனினும், அப்பெருந் தோணியைக் கரையோரமாக ஒரு கயிறு பற்றி ஒருவன் இழுத்துச் சென்றமையும் மற்றோர் ஆள் பின்புறமாக ஒரு நீளக் கழியால் தள்ளிச் சென்றமையும் இரங்கத் தக்க காட்சி. அதையும், ஆங்குக் கண்ணைக் கவர்ந்த மற்றும் சில காட்சிகளையும் விளக்கி அப்போது எழுதியதாகும் இப்பாட்டு.

சென்னையிலே ஒருவாய்க்கால்—புதுச்
சேரி நகர்வரை நீளும்.
அன்னதில் தோணிகள் ஓடும்—எழில்
அன்னம் மிதப்பது போலே
என்னரும் தோழரும் நானும்—ஒன்றில்
ஏறி யமர்ந்திட்ட பின்பு
சென்னையை விட்டது தோணி—பின்பு-
தீவிரப் பட்டது வேகம்.

தெற்குத் திசையினை நோக்கி—நாங்கள்
சென்றிடும் போது விசாலச்
சுற்றுப் புறத்தினில் எங்கும்—வெய்யில்
தூவிடும் பொன்னொளி கண்டோம்!
நெற்றி வளைத்து முகத்தை—நட்டு
நீரினை நோக்கிய நாங்கள்
அற்புதங் கண்டு மகிழ்ந்தோம்—புனல்
அத்தனை யும்ஒளி வானம்.

சஞ்சீவி பர்வதச் சாரல்—என்று
சாற்றும் சுவடி திறந்து
சஞ்சார வானிலும் எங்கள்—செவி
தன்னிலும் நற்றமிழ் ஏற்றி
அஞ்சாறு பக்கம் முடித்தார்—மிக்க
ஆசை யினால்ஒரு தோழர்.
செஞ்சுடர் அச்ச மயத்தில்—எம்மைச்
செய்தது தான்மிக்க மோசம்.

மிக்க முரண்கொண்ட மாடு—தன்
மூக்குக் கயிற்றையும் மீறிப்
பக்க மிருந்திடும் சேற்றில்—ஓடிப்
பாய்ச்சிடப் பட்டதோர் வண்டிச்
சக்கரம் போலிருள் வானில்—முற்றும்
சாய்ந்தது சூரிய வட்டம்!
புக்க பெருவெளி யெல்லாம்—இருள்
போர்த்தது! போனது தோணி!

வெட்ட வெளியினில் நாங்கள்—எதிர்
வேறொரு காட்சியும் கண்டோம்.
குட்டைப் பனைமரம் ஒன்றும்—எழில்
கூந்தல் சரிந்ததோர் ஈந்தும்
மட்டைக் கரங்கள் பிணைத்தே—இன்ப
வார்த்தைகள் பேசிடும் போது
கட்டுக் கடங்கா நகைப்பைப்—பனை
கலகல வென்றுகொட் டிற்றே.

எட்டிய மட்டும் கிழக்குத்—திசை
ஏற்றிய எங்கள் விழிக்குப்
பட்டது கொஞ்சம் வெளிச்சம்—அன்று
பௌர்ணமி என்பதும் கண்டோம்!
வட்டக் குளிர்மதி எங்கே—என்று
வரவு நோக்கி இருந்தோம்.
ஒட்டகம் மேல்அர சன்போல்—மதி
ஓர்மரத் தண்டையில் தோன்றும்!

முத்துச் சுடர்முகம் ஏனோ—இன்று
முற்றும் சிவந்தது சொல்வாய்
இத்தனை கோபம் நிலாவே—உனக்கு
ஏற்றிய தார்என்று கேட்டோம்
உத்தர மாகஎம் நெஞ்சில்—மதி
ஒன்று புகன்றது கண்டீர்!
சித்தம் துடித்தது நாங்கள்—பின்னால்
திரும்பிப் பார்த்திட்ட போது

தோணிக் கயிற்றினை ஓர்ஆள்—இரு
தோள்கொண் டிழுப்பது கண்டோம்.
காணச் சகித்திட வில்லை—அவன்
கரையொடு நடந்திடு கின்றான்.
கோணி முதுகினைக் கையால்—ஒரு
கோல்நுனி யால்மலை போன்ற
தோணியை வேறொரு வன்தான்--தள்ளித்
தொல்லையுற் றான்பின் புறத்தில்.

இந்த உலகினில் யாரும்—நல்
இன்ப மெனும்கரை யேறல்
சந்தத மும்தொழி லாளர்—புயம்
தரும்துணை யன்றி வேறே
எந்த விதத்திலும் இல்லை—இதை
இருபது தரம் சொன்னோம்.
சிந்தை களித்த நிலாவும்—முத்துச்
சிந்தொளி சிந்தி உயர்ந்தான்.

நீல உடையினைப் போர்த்தே—அங்கு
நின்றிருந் தாள்உயர் விண்ணாள்
வாலிப வெண்மதி கண்டான்—முத்து
மாலையைக் கையிலி ழுத்து
நாலு புரத்திலும் சிந்தி—ஒளி
நட்சத் திரக்குப்பை யாக்கிப்
பாலுடல் மறையக் காலை—நாங்கள்
பலிபு ரக்கரை சேர்ந்தோம்.

ஏப்ரல் 29— பாவேந்தர் பிறந்த நாள்.
அவரது நினைவாக அவரது கவிதை
இங்கு வெளியிடப் பெறுகிறது.





# பயணிகள் பார்வையில் பூம்புகார்

சி. நல்லரசு

*வரவேற்பு அலுவலர்*

"சேரமான் தம்பி தந்த சிலப்பதிகாரத்தை - என் தம்பி கருணாநிதி - தனது வளமிகு செழுந் தமிழ்த் திறத்தால், நாடகமாகத் தருவது பொருத்தமானதே'' என்று தம்பியின் திறன் கண்டு பெருமிதம் கொண்டார் பேரறிஞர் அண்ணா. அந்த ஆற்றல்மிகு தம்பி எழுப்பியுள்ள எழு நிலை மாடத்தின் எழில் கண்டுபோற்றிட அண்ணன் இன்றில்லை. எனினும் அண்ணாவின் சார்பில் தான் அவனியே போற்றி நிற்கிறது.

பூம்புகார் நோக்கிப் பயணிகள் தொடர்ந்து வருகின்றனர். படையெடுத்து வருவதுபோல் நூற்றுக்கணக்கிலும், ஆயிரக் கணக்கிலும் வருகின்றனர். தமிழ் மாநிலத்தாரும், பிற நாட்டாரும்கூட வந்த வண்ணம் இருக்கின்றனர். வந்து சிற்பத்தின் சிறப்பினையும், சிலைகளின் எழிலையும், எழுநிலை மாடத்தின் மாண்பினையும் வியந்து போற்றுகின்றனர். எழுநிலை மாடம் கண்ட ஏந்தலை ஏற்றிப் போற்றுகின்றனர்; வாழ்த்தி மகிழ்கின்றனர்.

தமிழுணர்வு மிக்கோர், பழம் பெருமை மீண்டும் வந்திட்டதென்று இறும்பூது எய்துகின்றனர்; இனப்பெருமை காண்கின்றனர். முத்தமிழும், முக்கொடியும், மூவேந்தர் பெரும் புகழும், தமிழகத்துக் கலைச் சிறப்பும் கற்புநெறிப் பண்பாடும் நெஞ்சை அள்ளும் சிலம்பினிலே மாணிக்கப் பரலாக - மணி முத்துக் கோவையாக இடம்பெற்று எழில்காட்டி எழுநிலை மாடமாக உருப்பெற்று, உயிர் பெற்று, உயர்வு பெற்ற காட்சி கண்டு ஊக்கம் பெறுகின்றனர். நமக்கு ஊக்கம் தருகின்றனர்.

வருகின்ற பார்வையாளர்களில் படித்தவரும், பாமரரும், புலமை மிக்கோரும், பொறியியல் வல்லாரும் எனப் பல்வேறு வகையினரும் பல்லாயிரத் தொகையினரும் உள்ளனர். பழம் பெருமையைப் புதுப்பித்துவிட்ட மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களையும், தமிழக அரசினையும் பாராட்டுவர். சிற்பிகளைப் பாராட்டுவர்; பொறியியல் மேதைகளைப் பாராட்டுவர். இடையிடையே எங்களையும் (வரவேற்பு ஊழியர்களையும்) பாராட்டுவர்.

பார்வையாளர் குறிப்பேடு ஒன்று திறந்தோம். அதற்கு முதன் முதலாக எழுதுவதற்கு ஒரு மேனாட்டார் கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்த்தோம். பிரான்சிலிருந்து ஆராய்ச்சியாளர், மியூட்டின் என்னும் பெயருடைய சிற்ப, கட்டடக் கலை வல்லார் ஒருவர் வந்தார். அரசின் விருந்தினராக வந்தார்.

கதையினை முழுக்கக் கூறி, காட்சி ஒவ்வொன்றினையும் விளக்கி, டாக்டர் கலைஞர் அவர்கள் எழுதிய சிலப்பதிகார நாடகத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பு நூலைப்பற்றியும் சொன்னேன். பார்வையாளர் புத்தகத்தில் தன் கருத்தினைக் குறிப்பிட்டார். கதையினை முழுக்கத் தெரிந்து கொண்டதால், சிலப்பதிகாரம் படம் பிடித்துக் காட்டும் கண்ணகி, மாதவி இருவரது பண்புச் சிறப்பினையும் தெரிந்து கொண்டு அதுபற்றியும் - குறிப்பேட்டில் அவர் குறிப்பிட்டார்.

அவர் ஒவ்வொரு கோயிலையும் பார்த்துச் சிற்பங்களை ஆராய்ந்து வருகிறார். சிலப்பதிகாரக் கலைக்கூடத்தில் உள்ள சிற்பங்கள் தற்காலத்தில் செய்யப்பட்டவைதான் என்பதை அவரால் நம்பக்கூட முடியவில்லை. இவை இப்போது செய்யப்பட்டவைதானா என்று இரண்டு மூன்று முறை திருப்பித் திருப்பிக் கேட்டார்.

ஒவ்வொரு காட்சியையும் பார்த்துக்கொண்டே வந்தவர், வழக்குரைக்கும் கட்டத்தினைக் கண்டவுடன் கதையின் உயிர்ப்பினையும், உச்சக் கட்டத்தையும் புரிந்து கொண்டார். உடனே மீண்டும் ஒருமுறை கொலைக்களக் காட்சியினை ஓடிப்போய்ப் பார்த்தார்.

மாதவி சிலையருகில் நின்று வியந்து பார்த்துக் கொண்டே இருந்தார். அப்போது நான் அவரிடம் ஒரு கேள்வி கேட்டேன். ''இந்தச் சிலை உயிர் பெற்று வந்தால் என்ன நடக்கும் என்று நினைக்கிறீர்கள் ?'' என்று கேட்டேன். அவர் ஒன்றுமே சொல்ல முடியாமல் சிறிது நேரம் திகைத்தார் ; பிறகு சிரித்தார். 'அந்தச் சிலை உயிருடன் இருந்தது. அதனால் என்ன நடந்தது என்பதைத்தான் இந்தக் காப்பியம் கூறுகிறது,'' என்றேன்.

கலைஞரவர்களின் சிலப்பதிகார ஆங்கில நாடக நூல் வேண்டுமென்றார். மறுநாள் தான் கிடைக்கும் என்றேன். அதனை வாங்குவதற்காகவே மறுநாள் திரும்பவும் வந்தார். என்னிடமிருந்த ஒரே ஒரு புத்தகத்தையும் கொடுத்து அனுப்பினேன். பெருமகிழ்ச்சியுடன் பெற்றுச் சென்றார்.

இந்த ஒரு பார்வையாளரைப்பற்றி விளக்கமாகக் கூறக் காரணம், ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதற்காக மட்டுமல்ல; இலக்கிய ஈடுபாடும், கலை நுணுக்கமும் தெரிந்த வல்லோரால் கலைக்கூடம் எந்த அளவுக்கு வரவேற்கப்படுகிறது, நமது இலக்கியம் எந்த அளவுக்குப் போற்றப்படுகிறது, எழுநிலை மாடத்தின் சிறப்பு எதிர்காலத்தில் எப்படி வளரும் என்பதற்குத் தக்கதோர் எடுத்துக்காட்டாகவும் அவரது குறிப்பு விளங்குகிறது என்பதைக் காட்டவே குறிப்பிடுகிறேன்.



'இவ்வளவு சிறப்பு மிக்க இலக்கியம் இருக்கிறதே! இத்தகைய கலை வளம் இருக்கிறதே! இப்படிப்பட்ட சிற்பிகள் இப்போதும் உள்ளனரே! இவர்களை இந்த அளவுக்கு ஊக்குவித்துக் காத்து வருகின்றீர்களே! புதுமையும் பழமையும் கலந்து கட்டடக் கலைக்கே ஒரு புத்தெழில் ஊட்டியிருக்கிறீர்களே!

''கற்பு நெறி போற்றவும், அரசியல் அறம் காக்கவும் உயர்தனி இலக்கியம் உள்ளதே! இவ்வுயர் பண்பு போற்றும் இலக்கியத்தினைக் கொண்ட இத் தமிழினம் எதிர்கால மனித இனத்துக்கும் தக்கவழி காட்டும் என்னும் நம்பிக்கை எனக்கு ஏற்படுகிறது''-என்றெல்லாம் தெரிவித்துள்ளார்.

எழுநிலை மாடம் கண்ட ஏந்தலின் எண்ணம் ஈடேற்றம் கண்டதற்கு இந்த ஒருவரின் வருகை,தக்கதோர் சான்றாகும்.

காலை 9 மணி முதல் இரவு 7.30 மணி வரை கலைக்கூடம் திறந்து வைக்கப்படுகிறது. ''ஓராண்டுக்கு ஓர் ஊர்தி கூட வராத இந்த ஊருக்கு இன்று நாள்தோறும் இத்தனை ஊர்திகள் வந்து ஊரையே உலுக்குகின்றனவே?'' என்று ஊரார் கூறுகின்றனர்.

பயணிகள் ஊர்தி திடீரென்று இரவு 9 மணிக்கு மேலும், காலை 6 மணிக்கும்கூட வந்து விடுவதுண்டு. எந்த நேரத்தில் வந்தாலும் அவர்கள் ஏமாற்றமடையக் கூடாது என்பதற்காக அந்த நேரங்களிலும் கலைக்கூடம் திறந்து வைக்கப்பட்டு, காட்சி விருந்து வழங்கப்படுகிறது.

முதல்வர் கலைஞர் அவர்களின் பெருமுயற்சியால் தோன்றியுள்ளது பூம்புகார் கலைக்கூடம். சென்ற ஆண்டு ஏப்ரல் திங்கள் 17, 18 ஆகிய நாட்களில் பூம்புகார், பழம்பெரும் சோழ மண்டலத்தின் தலைநகராகவே விழாக் கோலம் கொண்டிருந்தது. இந்த ஆண்டும் சித்திரை முழு நிலவு நாளான மே 6-ல் விழா சிறப்புற நடைபெறவிருக்கிறது.

வரலாற்றுப் புகழ்மிக்க இந்தக் கலைக்கூடத்தை நாள்தோறும் காண, அணி திரண்டு வரும் பயணிகளின் பார்வையில் பூம்புகார் எவ்வாறு காட்சி தருகிறது என்பதைக் கலைக் கூடத்தின் வரவேற்பு அலுவலர் திரு. சி. நல்லரசு இந்தக் கட்டுரையில் விளக்கியிருக்கிறார்.

ஒருநாள் இரவு 9.30 மணிக்கு திரு. ஆர்.வி. சாமிநாதன், எம்.பி. அவர்கள் வந்துவிட்டார்கள். கலைக்கூடம் திறக்கப்பட்டது. ஒரு மணி நேரம் செலவிட்டுச் சிற்பங்களைக் கூர்ந்து பார்த்து, மகிழ்ந்து இரவு 10 மணிக்கு மேல் உட்கார்ந்து குறிப்பேட்டில் தம் எண்ணங்களைக் குறிப்பிட்டு, ''கலைக்கூடம் கண்ட கலைஞர் வாழ்க! டாக்டர் வாழ்க! டாக்டர் கலைஞர் வாழ்க!'' என்று வாழ்த்துக்களை எழுத்தில் வடித்துத் தந்து விட்டுச் சென்றார்கள். சிலம்புச் செல்வர் மாண்புமிகு ம.பொ.சி அவர்கள், காலை 8 மணிக்குள் வந்து தன் துணைவியாருடன் அமைதியான சூழ்நிலையில் கலைக்கூடத்தைக் கண்டு களித்துச் சென்றிருக்கிறார்கள்.

கடுத்த மழையிலும் கூடத் தமது பயணத்தைக் கைவிடாமல் கலைக்கூடத்திற்கு வந்து கலைக்கூடத்தைக் கண்டு களித்து ''ஒப்பற்ற இலக்கியத்தின் ஓர் உண்மைப் பிரதிபலிப்பு'' என்று சான்று பகர்ந்துள்ளார் தமிழக ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள்.

நாள்தோறும் நூற்றுக்கணக்கில் பார்வையாளர்கள் வருகிறார்கள். சனி, ஞாயிறு நாட்களில் அதிகம்பேர் வருகிறார்கள். ஒரே நாளில் 11 ஆயிரம் பேர் வந்துள்ளனர். ஏப்ரல், மே, மாதங்களில் மிகவும் அதிகம்பேர் வந்துள்ளனர்.

பகல் 1 மணிக்கு வருகிற பயணி ஊர்திகளில் மொத்தமாக ஐம்பது, நூறு பேர் வந்து ''உடனே எங்களைப் பார்க்க விடுங்கள். நண்பகல் உணவுக்காக மாயவரம் போக வேண்டும்; சீர்காழி போக வேண்டும்'' என்பார்கள். அவர்களுக்கு இங்கேயே உணவு கிடைப்பதற்குத் தக்க விடுதிகள் இல்லாததால் இந்தத் திண்டாட்டம். இரவில் தங்குவதற்கும், உணவருந்தவும் விடுதிகள் இருந்தால் வருகிறவர்கள் ஆறுதலாக இருந்து இரண்டுமுறை வந்து பார்த்து விட்டுப் போவார்கள். அவ்வளவு ஆர்வத்துடன் வருகிறார்கள்.

மாணவர்கள், ஆசிரியர்கள் கலைக்கூடத்தினைப் பெரிதும் பாராட்டுகிறார்கள். மாணவ, மாணவியர், கையில் தாளுடன் வந்து, அவர்களுக்குப் பாடப் பகுதியில் வந்துள்ள காட்சிகளுக்கு அடியில் தரப்பட்டுள்ள வரிகளை மேற்கோளாகக் குறித்துக் கொண்டு செல்கின்றனர். கலைக்கூடம் கல்விக்கூடமாகவும் விளங்குகிறது. நாங்கள் ஆசிரியர்களாகவும் மாறி விடுகிறோம்.

'அண்ணா பயணிகள் விடுதி' கட்டப்பட்டு வருகிறது. இலஞ்சி மன்றம், நெடுங்கல் மன்றம், பாவை மன்றம் ஆகியவை கட்டி முடிக்கப்படும். அதற்காகத் தமிழக அரசு 8 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் ஒதுக்கியுள்ளது.

பயணிகள் தங்கி ஓய்வெடுத்துக் கொள்ள ஒரு பொது மண்டபம், சிறுவர் பூங்கா, படிப்பகம் ஆகியவை அமைக்கப்படவிருக்கின்றன. அத்தோடு வேறு பல மன்றங்களும் கட்டப்படவிருக்கின்றன.

கலைக்கூடம் நிலையாக வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு என்றும் ஒளி உமிழ்ந்து எழிற்கோலம் பூண்டு நிற்கும்; கடற் பயணிகளுக்கு ஒரு கலங்கரை விளக்கமாகவும் நிற்கும்.

இதுவரை ஒரு லட்சத்து 78 ஆயிரத்து 658 பேர் வருகை தந்துள்ளனர். பதினேழாயிரத்து 865 ரூபாய் வசூலாகியிருக்கிறது.



பார்வையாளர்கள் மனமுவந்து, ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக, 'இது இவ்விடம் வரும் பிற——டாரைக் கவரும் என்பதில் ஐயமில்லை'- 'இதை உருவாக்கியவர்களுக்குத் தமிழ் உலகம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளது .' -'இது தமிழறிந்த தமிழருக்குப் பெருமை; இதைக் காணும்போது என் இதயம் நிறைவெய்துகிறது'— 'சிலப்பதிகாரச் சிறப்பினை யாவரும் கண்டு மகிழும் வண்ணம் அமைத்த கலைஞர் அவர்களைப் புகழ வார்த்தைகளே இல்லை'- என்றெல்லாம் அகமகிழ்ந்து போற்றி ஆனந்தக் கூத்தாடி வாழ்த்திச் செல்கின்றனர்.

பார்வையாளர்கள் பார்த்து மகிழ்வதைக் காண்பதே எங்கள் இன்பம். வரவேற்பு அலுவலகம் திறந்த பின்னர், பேருந்துத் தொடர்பு பெருகிட வழி வகுக்கப்பட்டுள்ளது. தஞ்சையிலிருந்தும், கும்பகோணத்திலிருந்தும் நேராகப் பூம்புகாருக்குப் பேருந்துத் தொடர்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாயவரம், சீர்காழி ஆகிய இடங்களிலிருந்து அடிக்கடி பேருந்துகள் வருகின்றன. காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை போக்குவரத்து வசதி உள்ளது.

உணவு விடுதி திறப்பதற்குப் பலரையும் கேட்டுக் கொண்டிருக்கிறோம். விரைவில் உணவு விடுதி அமைக்கப்பட்டு விடும்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க பேராச் சிறப்பின் மூதூராம் பூம்புகார் புத்துயிர் பெற்று, புதுப்பொலிவு கொண்டு எழிற்கோலம் பூண்டு, ஒலி-ஒளிக் காட்சி மூலம் உலகத்தார்க்குத் தன் வரலாற்றினை உணர்த்திட அரியதோர் திட்டம் தீட்டப்பட்டு வருகிறது.

கற்புக் கூடம் பூண்ட பொற்புடைத் தெய்வம், ஒரு மாமணியாய் உலகிற்கோங்கிய திருமாமணியாம் கண்ணகிக்குக் கலைக்கூடம் கண்ட கலைஞர் அவர்களைப் பாராட்டி மகிழும் பயணிகள் 'பூம்புகார் போற்றுதும்' 'பூம்புகார் போற்றுதும்' எனப் போற்றிச் செல்கின்றனர். அதனைக் கேட்டு மகிழ்கிறோம்.

பூம்புகார் வருக! புத்துணர்வு பெறுக!

# கலைக்கூடத்திற்கு வெளிநாட்டார் தரும் பாராட்டு!

## பார்வையாளர் குறிப்பேட்டிலிருந்து...

கட்டிடக் கலையின் அழியாச் சின்னமாக விளங்கும் இக்கலைக் கூடத்தின் கவர்ச்சி, இந்தப் பக்கம் வருகிற எந்தப் பயணியையும் ஈர்த்திழுக்கிறது. இதயத்தைக் கவர்கிறது. தற்கால கட்டிடக்கலை, பழங்கால கட்டிடக் கலை ஆகிய இரண்டினையும் இணைத்து ஒரு புதுமையினை உருவாக்கும் பெருந்திறன் மிக்க கட்டிடக்கலை வித்தகர்கள் இந்தியாவில் இருப்பது கண்டு வெளிநாட்டார் ஒருவர் பெரிதும் மகிழமுடிகிறது.

கலைக்கூடத்தினுள் நுழைந்தவுடன் இந்திய மண்ணின் புகழ்மிக்க கலைச் செல்வத்தினை அழியாது, காத்திட, ஆற்றல் மிக்க கலைவல்லாரை உருவாக்கி ஊக்குவித்து, இருப்பதைக் காணவும் முடிகிறது; கலை காக்கப்படுகிறது என்பதை அறிந்து மகிழ்ச்சி பிறக்கிறது; நம்பிக்கையும் பிறக்கிறது.

எழிற் சிற்பங்கள் கூறும் கதை, மனித மாண்புகளாம், நேர்மை, கற்பு ஆகிய உயர் பண்புகளின் பெருமையைக் காட்டுகிறது. இத்தகைய பண்புகளைப் போற்றிக் காக்கும் இந்நாட்டு மக்களின் மனவளம் எதிர்காலத் திற்கும் நம்பிக்கை ஒளி ஊட்டுவதாக அமைந்துள்ளது.

இத்தோடு, இந்தக் கலைக்கூடத்தை எனக்குச் சுற்றிக்காட்டி விளக்கம் தந்து சிற்பத்தில் வடிக்கப்பட்டுள்ள கதையினை முழுக்கப் புரிந்துகொள்ளச் செய்த வரவேற்பு அலுவலர் திரு. நல்லரசுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளு கின்றேன்.

—திரு. மியூட்டின், (ஆராய்ச்சியாளர்)
9, பாரடே தெரு,
பாரிஸ்,
பிரான்ஸ்.

கலைக்கூடத்தைப் பார்க்கும்போது, சிலப்பதிகாரக் கதை கண்முன்னே வந்து நிற்கிறது. சிற்பிகள் மிகவும் சிறப்பாக அவற்றை எடுத்துக்காட்டியுள்ளனர். இது, இவ்விடம் வரும் வெளிநாட்டாரைக் கவரும் என்பதில் ஐயமில்லை.

—திரு. சி. சுந்தரேசன்,
யாழ்ப்பாணம்,
இலங்கை
10—8—73.

கண்ணகியின் எழில்மிக்க கலைக்கூடமும், மாதவியின் எழில் கொழிக்கும் சிலையும் கருத்தைக் கவர்கின்றன.

—திரு. பிரான்ஸ் ஆண்ட்ரோ,
பிரான்ஸ்
20—8—73

சிலப்பதிகாரக் கலைக்கூடத்தை என் மனைவியுடன் வந்து அமைதியான சூழ்நிலையில் கண்டேன். ஒவ்வொரு காட்சியையும் கூர்ந்து பார்த்தேன். அருமையான கலைக் கூடம். இதனை அமைத்த நல்லார் கலைஞர். அவரது அரசு தமிழரால் என் றென்றும் பாராட்டப்படும். சிலம்புச் செல்வம் வாழ்க!

—ம. பொ. சிவஞானம்,
7—9—73.

சிலப்பதிகாரக் கலைக்கூடத்தை இன்று காணும் வாய்ப்புக் கிடைத்தது. சிலப்பதிகாரக் கதையை நம் கண் முன் சிற்பங்கள் சித்திரிக்கின்றன. ஊன்றிப் பார்க்கும் போது சிற்பங்கள் வாய் திறந்து நம்முடன் பேசுகின்றன. பழங் காலச் சிற்பங்களைப் பார்க்கும்போது இத் தகைய சிற்பங்களைச் செதுக்கித் தருபவர்கள் இக்காலத்தில் கிடைப்பார்களா? என்ற ஐயம் ஏற்படும். ஆனால் இன்று பூம்புகாரில் அமைக்கப்பட்டுள்ள சிலப்பதிகாரக் கலைக்கூடச் சிற்பங்கள் நம்மைப் பிரமிக்க வைப்பதுடனில்லாது நம்பிக்கையையும் ஏற்படுத்துகிறது.

இத்தகைய கலைக்கூடத்தை யார் அமைக்க முன்வருவார்கள்? அதுவும் இந்தக் காலத்தில்! டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களின் கற்பனைத்திறன், அன்னாரின் கலை ஆர்வம், திறமை இவை களின் பிம்பமாக இந்தச் சிலப்பதிகாரக் கலைக்கூடம் அமைந்து இருக்கிறது. கலைஞர் தமிழ்நாட்டுக்குச் செய்துள்ள சிறந்த பணி களில் இதுவும் ஒன்று. டாக்டர் கலைஞரின் கலை ஆர்வம் வாழ்க, டாக்டர் வாழ்க.

—ஆர். வி. சுவாமிநாதன், எம்.பி.
நாடாளுமன்ற அங்கத்தினர்.

சிலப்பதிகாரக் கலைக்கூடத்தை இன்று முதன் முறையாகக் காணும் வாய்ப்புக் கிடைத்தது. சோழர் காலப் புகழும், இன்றைய தமிழ் நிலத்தின் புகழும் சேர்ந்து காணுகின்ற—வாய்ப்புத்தான் இந் தக் கலைக்கூடம். வேற்று மொழி பேசு வோரும் வந்து காணுகின்ற பெரும் பேற் றைக் கலைக்கூடம் பெற்றுள்ளது. வரு வோர்க்கு விளக்கமளித்தும், உபசரித்துப் போற்றியும் இங்குள்ள தனி அலுவலர் மற்றும் உதவியாளர் பணிபுரியும் பாங்கு போற்றுதற்குரியது.

—ந. தருமலிங்கம்,
தலைவர்,
தஞ்சை மாவட்ட நூலக ஆணைக்குழு,
முத்துப்பேட்டை,
29—8—73.

நாங்கள் பூம்புகார் கலைக்கூடத்தைக் கண்டு அளவில்லா ஆனந்தம் அடைந்தோம். சிலப்பதிகாரமென்னும் ஆரத்தின் அருமை பெருமைகளைக் கற்றோர்க்கேயன்றி மற்றோர்க்கும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெள்ளிதின் விளக்கும் உயிரூட்டும் சிற்பங்கள் எங்கள் உள்ளத்தில் எழிலோவியங்களாய் என்றும் காட்சியளிக்கும். கடலால் அழிந்து தன் பெருமைகள் மறக்கப்பட்ட அவ்வூர்,இன்று, தமிழர்களின் உள்ளத்தில் ஏற்றம் பெறும் வகையில் பணிபுரிந்த அனைவர்க்கும் எங்கள் அன்பு கலந்த நன்றி என்றும் உரியது.

—பா. கனகாங்கி,
இரா. அமிர்தகெளரி
தமிழாசிரியைகள்
திரு. ஆ. சுப்பராயச் செட்டியார்
பெண்கள் உயர்நிலைப் பள்ளி
பண்ணுருட்டி.

யான் பூம்புகார் கலைக்கூடத்தைப் பார்த்தேன். ஒவ்வோர் நினைவுச் சின்னமும், கலைச்சிற்பங்களும் என்னைக், கோவலன் கண்ணகியின் காலத்திற்கே சென்று திளைக்க வைத்தது. சிலம்பு தொடர்புகளுக்கு ஏற்பச் சிற்பங்களின் பாவ அமைப்பு மிகத் தெளிவாக அமைந்துள்ளது. மாதவியின் சிற்ப அமைப்பும், குழலமைப்பும் அணி வகைகளும் உள்ளத்தைக் கவரும் வகையில் அமைந்துள்ளது. மக்களுக்குச் சிலப்பதிகாரக் காலத்தை நினைவு படுத்தி இலக்கியப் பெருமையை நிலைநாட்டி வரும் தமிழக அரசைத் தமிழக முதல்வர், மாண்புமிகு முதல்வர் கலைஞர் கருணநிதி அவர்களைப் பாராட்டி மகிழ்வுறுகிறேன். தமிழ் வளர்க! தமிழ்க் கலை வளர்க! தமிழர் பண்பாடு வளர்க. மணிமேகலைக்கு ஓர் வாயிலமைத்தல் நலம்.

—சி. சுப்பிரமணியன்,
தமிழாசிரியன்,
தேசிய உயர்நிலைப் பள்ளி,
நாகப்பட்டினம்.

சிலம்பைக் கண்கூடாகக் காணும் பேரின்பம் இக் கலைக்கூடத்தைக் காணும்போது ஏற்படுகிறது. இதை உருவாக்கியவர்களுக்குத் தமிழ் உலகம் என்றென்றும் கடமைப் பட்டுள்ளது.

—அ. புனிதவதி,
தமிழாசிரியை,
என்.எல்.சி. பெண்கள் உயர்பள்ளி,
நெய்வேலி,
23—8—73.

மாணவிகள் சிலப்பதிகாரப் பாடப் பகுதியினைத் தெளிவாக அறிய இது பேருதவியாய் இருக்கிறது.

—ஆசிரியைகளும், மாணவிகளும்,
அரசு மகளிர் உயர் பள்ளி,
ஆத்தூர்,
சேலம்,
30—8—73.

சிலப்பதிகாரச் சிறப்பினை, நூல் வாயிலாகவும் நூல் கற்ற பேரறிஞர் சொற்பொழிவு வாயிலாகவும் இதுகாறும் கேட்டு மகிழ்ந்த என் போன்ற அரசு ஊழியர்களுக்கு அத்துணை இன்பத்தையும் நேரில் கண்டு பெருமகிழ்வு பெறும் பெரும் பேற்றை, இக் கலைக் கூடம் அளித்து விளக்கியது. சுவரில் பதியப்பட்டுள்ள சிலைகள் கூறும் கதையைப் பார்க்கும்போது—சிலப்பதிகார விளக்கத்தை நேரில் பெறுகிறோம். நிகழ் காலத்திலும் இத்தகைய சிறப்பு வாய்ந்த சிற்பிகள் இருக்கிறார்கள் என்பதையறிந்து பெருமகிழ்வெய்தித் தமிழர் கலைத் திறனைப் பறை சாற்றும் கலைஞர்களையும் அவர்களை ஊக்குவிக்கும் அரசையும் பாராட்டிப் போற்றிப் புகழ்ந்து இன்புறுவோம்.

—தி. இராமதாஸ்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தஞ்சை,
22—8—73.

தமிழ்த்தாயின் சிலம்பினை இளவல் சொல்லாலும், தமையன் கல்லாலும் வடித்து மகிழ்ந்து காவிய உலகு மகிழ்ந்தது போல், இன்று தமிழ்த் தாய்க்குத் தன்னிகரிலாச் சிறப்பு இக்கலைக்கூடக் காவியத்தால் எய்தியமை தமிழறிந்த தமிழருக்குப் பெருமை. இதைக் காணும் போது என் இதயம் இன்ப நிறைவெய்துகிறது.

—ப. கங்கா,
தமிழாசிரியை,
புனித சிலுவை மகளிர் உயர் நிலைப்பள்ளி,
தெப்பக்குளம், திருச்சி-2.

மண்பட்ட பூம்புகாரை மாநிலத்தே
கண்படுத்தும்
வண்கலைநற் கூடத்தை வாகாய் நம்
முன்னிறுத்தும்
எண்ணருசீர் பாட்டுரையாம் ஏற்றமிகு
சிற்பங்கள்
பண்ணுகும்! பாட்டாகும்! பாரேத்தும்
சீர்த்தியாம்!

துண்ணெனவே எஞ்சியுள்ள துய்யபணி
முற்றிடுமேல்,
நண்ணிடுவோம் முற்பெருமை! நாநிலத்தே
ஓங்குவமே!
மண்டுபுகழ் நற்கலைஞர் மாப்புகழை
நாட்டிடுமே!
கண்ணிறுத்தும் ஏழ்நிலையால் காண்மாடம்
நன்றுளதே!

—கவிஞர் கணக்காயன்,
(இடைநிலை ஆசிரியன்)
அரசினர்(கழக) உயர்நிலைப்பள்ளி,
ஆரணி,
23—11—73.

# ஐ.ஏ.எஸ் எழுத

# பிற்பட்ட மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி

பிற்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்கள், அறிவாற்றல், மதிநுட்பம், உழைக்கும் திறன் ஆகியவைகளில் மற்ற யாருக்கும் குறைந்தவர்கள் அல்ல. ஆயினும் ஐ.ஏ.எஸ் மற்றும் இதர அனைத்திந்தியப் பதவிகளுக்குத் தெரிந்தெடுக்கப்படும் பிற்பட்ட வகுப்பினர் மிகமிகக் குறைவாகவே இருக்கிறார்கள். இக்குறையை நீக்கி முன்னேற்றத்துக்கு வழி வகுக்க அமைக்கப் பட்டது தான் சிறப்புப் பயிற்சி நிறுவனம். தமிழ்நாடு பிற்பட்டோர் நலக் குழுவின் பரிந்துரைப்படி தமிழ்நாடு அரசினரால் அமைக்கப்பட்ட இந்த நிறுவனம் *1971*-ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகின்றது. ஐ.ஏ.எஸ். மற்றும் அனைத்திந்தியப் பணிகள் தேர்வுக்கு, பிற்பட்ட மாணவர்களைத் தயார் செய்வதில் வேண்டுமான எல்லாப் பயிற்சிகளையும் முறையாக அளித்து வருகின்றது இந்த அமைப்பு.

*1973*-ஆம் ஆண்டில் 50 பேர்கள் பயிற்சிக்குச் சேர்க்கப்பட்டதில் 34 பேர்கள் தேர்வு எழுதினார்கள். அவர்களில் 6 பேர்கள் எழுத்துத் தேர்வில் வெற்றி பெற்றார்கள். நேரடிப் பேட்டித் தேர்வுக்கு அவர்கள் ஆயத்தப்படுத்தப் பட்டு வருகின்றனர். அனைத்திந்தியாவிலும் இத்தேர்வுக்குச் சென்றவர்களின் மொத்த எண்ணிக்கையை வைத்துப் பார்க்கும்போது, பிற்பட்ட வகுப்பினர் சிறப்புப் பயிற்சி நிறுவனத்தின் பணி, பயன் தரத் தொடங்கிவிட்டது என்று கூறலாம்.

**தனி வரலாறு:**

நீதிக்கட்சி அரசாண்ட காலத்திலிருந்து கலைஞர் ஆட்சிக் காலம் வரையிலும், பின்னடைந்த மக்களின் முன்னேற்றத்துக்கான பணிகளையும் முயற்சிகளையும் தொகுத்தால் அதுவே தனி வரலாறு ஆகும். அந்த அளவுக்கு இலட்சிய அடிப்படையையும், இடர்பாடுகளுக்கிடையே இடைவிடாத முயற்சிகளையும் உள்ளடக்கியது இப்பணி.

''*1894*-க்கும் *1904*-க்கும் இடைப்பட்ட காலத்தில் ''மாகாண சிவில் சர்வீசஸ்'' என்று அழைக்கப்பட்ட அரசுப் பணிகளில் மொத்தம் இருந்த கெசட் பதிவு பெற்ற *16* அதிகாரிகளில் *15* பேர் பிராமணர்களாகவும், *21* உதவிப் பொறியாளர்களில் *17* பேர் பிராமணர்களாகவும், *128* மாவட்ட முன்சீப்புகளில் *93* பேர் பிராமணர்களாகவும் இருந்தனர். ஐ.சி.எஸ். போன்ற பதவிகளை அந்நாளில் பிரிட்டிஷாரே பெரும்பாலும் வகித்தனர். இதில் இந்தியர்க்குக் கிடைத்த ஒரு சில இடங்கள் பெரும்பாலும் குறிப்பிட்ட ஒரு வகுப்பினருக்கே கிடைத்து வந்தது. அது மட்டுமல்ல, குமாஸ்தாக்கள், ஆசிரியர்கள்போன்ற சாதாரண பதவிகளில் கூட, குறிப்பிட்ட வகுப்பினரே ஆதிக்கம் செலுத்தி வந்தனர். இத்தகைய நிலைமையில் தான் வாய்ப்புக் குறைந்த வகுப்பினருக்குப் பிரதிநிதித்துவம்கோரி, *1916*-ஆம் ஆண்டில் பிராமணரல்லாதார் கோரிக்கை வெளி வந்தது. அரசுப் பணிகளில் பிராமணரல்லாதாருடைய விகிதாச்சாரத்தை உயர்த்துவதற்காக அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கோரி தீர்மானம் ஒன்று *1921*-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மாகாண சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது''.

''அதன் தொடர்பாக திராவிட இயக்கமும், தேசிய இயக்கமும் மற்றும் இரண்டாம் உலகப் போருக்கு முந்திய பத்தாண்டுக் காலத்திலும் பிந்திய பத்தாண்டுக் காலத்திலும் அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளும், இத்தகைய ஏகபோக உரிமையைச் சற்றுக் குறைத்தன.''

**காரணம் என்ன?**

அரசுப் பணிகளில் எல்லா வகுப்பினர்களுக்கும் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்பது இயல்பான கோரிக்கை. சமத்துவம், சமநீதித் தத்துவம் கொடி கட்டிப் பறக்கும் இக்காலத்தில் இதற்கு விளக்கம் வேண்டியதில்லை என்றாலும் இதற்கான காரண விளக்கமும் தந்துள்ளனர் பிற்பட்டோர் நலக் குழுவினர்:

''மக்கள் தங்களுக்கு உள்ள குறைகள் அனைத்தையும் அரசியல் மட்டத்திலேயே எம்.எல்.ஏ.க்கள் மூலமாகவும், அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இதர கீழ் மட்டப் பிரதிநிதிகள் மூலமாகவும் தீர்த்துக் கொள்ள முடியாது. தங்கள் வகுப்பைச் சேர்ந்தவர்கள் பல மட்டங்களில் அரசுப் பணிகளில் இருக்கிறார்கள் என்றால் அது தங்களுடைய குறைகளுக்கு நியாயமான முறையில் தீர்வு கிடைக்கும், தாங்கள் மரியாதையுடன் நடத்தப்படுவார்கள், இவர்களைப்பற்றி அதிகம் கவலைப்பட வேண்டியதில்லை என்று எந்த ஒரு அதிகாரியும் அலட்சியப் படுத்திவிட மாட்டார்கள் என்று மக்களுக்கு நம்பிக்கை அளிப்பதாக இருக்கும்.''

''நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு, முப்பது ஆண்டுகளுக்கு

முன்புவரைகூட, 200 அல்லது 300 பேர்கள் மட்டுமே ஐ.சி.எஸ். தேர்வுக்கும் அரசு முதல்நிலை அலுவலர் தேர்வுக்கும் ஆஜராகி வந்தனர். ஆண்டு தோறும் 300 அல்லது 400 பேர்களிலிருந்து ஒரு சிலர் தெரிந்தெடுக்கப்பட்டனர். அதே வகைப் பணிகளுக்கு இப்போது, பல்லாயிரக்கணக்கான மனுதாரர்களுக்குத் தேர்வு நடத்தி 300 அல்லது 400 பேர் தெரிந் தெடுக்கப்படுகிறார்கள்.''

''இதில் வேலைகளுக்குத் தெரிந்தெடுப்பதற்குப் பொதுப் பரிட்சை என்று வரும்போது முன்னேற்றமடைந்த சாதியினர் போலவே அறிவாற்றல் வாய்ந்த பிற்பட்ட வகுப்பு இளைஞர்களும் யுவதிகளும் எழுதும் பரீட்சையிலும் நேர்முகப் பரீட்சையிலும் சுணங்கி விடுவது இயற்கையே. சுற்றுச் சூழ்நிலைக் குறைபாடுகள், கல்விப் பரம்பரைத் தொடர்பு இல்லாத குறை ஆகியவற்றை நுணுகி ஆராய்ந்தவர்களுக்கு இதன் பொருள் விளங்கும். பரீட்சையில் தோன்றும் இந்தக் குறைபாடு அறிவாற்றல் குறைவையோ தகுதிக் குறைவையோ குறிக்காது. இன்னும் சில ஆண்டுகளில் நிச்சயமாக இந்தப் படித்தவர்களின் இரண்டாம் தலைமுறையில் படித்த இளைஞர்களும், யுவதிகளும் முன்னேற்றமடைந்த சாதிகளைச் சேர்ந்த சகோதரர்களைப் போலவே சிறப்பாகத் தேறுவார்கள். சமூக நீதிக்காக, இந்தப் பிரத்யட்ச நிலை உணரப்பட வேண்டும். தற்காலிகமான குறைபாட்டைச் சரிப்படுத்த, தக்க ஏற்பாடுகளை மேற் கொள்ள வேண்டும்.''

**பதவிகள் பற்றி புள்ளி விவரம்:**

ஐ.ஏ.எஸ் போன்ற பெரும் பதவிகளில் பிற்பட்ட வகுப்பினர் எந்த அளவுக்குக் குறைவாக இருக்கின்றனர் என்பதைக் கீழ்க்கண்ட புள்ளிவிவரம் புலப்படுத்தும்.

தமிழ்நாட்டில் ஐ.ஏ.எஸ் பதவிகள் (நேரடித் தேர்வு முறை, பதவி உயர்வு முறை இருவகையிலும்)

**1969-ஆம் வருஷம் ஜனவரி மாதம் 1-ஆம் தேதி**

| | |
|---|---|
| பிராமணர் ... ... ... | 72 |
| பிராமணரல்லாதார் (முன்னேற்றமடைந்த சாதிகள்-வேறுமாநிலங்களிலிருந்து வந்துள்ளவர்கள் உள்பட ... ... ... | 30 |
| பிற்பட்ட வகுப்பினர் ... ... ... | 10 |
| மிகப் பிற்பட்ட வகுப்பினர் ... ... ... | 1 |
| ஷெட்டில் வகுப்பினர் ... ... ... | 19 |
| முஸ்லீம்கள் ... ... ... | 7 |
| கிறிஸ்தவர்கள் ... ... ... | 14 |
| | 153 |

''மத்திய அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம் (யு.பி.எஸ்ஸி) மூலம் நியமனங்கள் செய்யப்படுகின்ற பணியாளர்கள் என்ற வகையில் 20-க்கு மேற்பட்ட அனைத்திந்திய, மத்திய அரசுப் பணி வகைகள் உள்ளன. இது தவிர மத்திய அரசின் கீழ் பல்வேறு தொழில் நுட்பப் பணிப் பிரிவுகளுக்கு இஞ்சினியரிங் பட்டதாரிகளை மத்திய அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம் தெரிந்தெடுக்கிறது. இந்திய பொருளாதார சர்விஸ், புள்ளி விவர சர்விஸ் ஆகியவைகளுக்கும் சர்விஸ்கள் அமைவதையொட்டி நேரடி நியமன ஏற்பாடு மேலும் விரிவடையும்.''

**குறைந்து வரும் நிலை:**

''மத்திய அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம் நடத்துகின்ற தேர்வுகளில் வெற்றி பெறுவோர் என்ற அளவில் தமிழகம் பெறுகின்ற பங்கு, படிப்படையாகக் குறைந்து வருவதாகத் தெரிய வருகிறது. இப்படிக் குறைந்து வருவதற்கான காரணங்கள் அவ்வப்போது ஆராயப் படுகின்றன. நிலைமை நல்லபடியாக இருந்த காலத்திலேயே பொதுவான பணிகளுக்கான தேர்வுகளிலும் தொழில் நுட்பப் பணிகளுக்கான தேர்வுகளிலும் பிற்பட்ட வகுப்பினர் மிகச் சிலரே வெற்றி பெற்று வந்தனர். தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் பழங்குடியினருக்கும் செய்வதுபோல, பிற்பட்ட வகுப்பினருக்கும் இடங்கள் ஒதுக்குமாறு மத்திய அரசை மாநில அரசு கேட்க வேண்டும். இதன் மூலம் குறைகள் நீங்க ஓரளவு வழி பிறக்கும்.''

''எது எப்படி இருப்பினும் யு.பி.எஸ்.ஸி தேர்வுக்குத் தகுதி வாய்ந்த பிற்பட்ட வகுப்பு மனுதார்களைத் தயார்செய்வதற்கு மாநில அரசாங்கம் சிறப்புப் பயிற்சி நிறுவனங்களை நடத்துவது முக்கியமாகும். தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்காக அத்தகைய நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.''

பிற்பட்டோர் நலக் குழுவின் பரிந்துரைப்படி அமைக்கப்பட்ட சிறப்புப் பயிற்சி நிறுவனம், சென்னை சைதைப் பகுதியில் (3, மூன்றாவது கிராஸ் தெரு, சி.ஐ.டி. நகர் சென்னை-600035-ல்) 1971-ஆம் ஆண்டிலிருந்து ஐ.ஏ.எஸ் மற்றும் அனைத்திந்தியப் பணிகளுக்குரிய தேர்வுக்கு பிற்பட்ட வகுப்பு மாணவர்களை ஆயத்தப்படுத்தி வருகின்றது. பயிற்சியாளர்களுக்கு ஏற்ற உணவு உறைவிட வசதி இலவசமாகச் செய்து தரப்பட்டிருக்கிறது.

இந்த அனைத்திந்தியப் பணித் தேர்வுகளில் கலந்து கொள்ள, ஆங்கில மொழியில் எழுத்து, பேச்சு இரண்டிலும் நல்ல ஆற்றல் வேண்டும். நல்ல சிந்தனைத் தெளிவும், எடுத்துக்



வறுமையைப் புகழ்வது எனக்குப் பிடிக்கவில்லை. வறுமை கொடிய பகைவனாக என் கண்களில் படுகிறது. வறுமையை அழிக்கப் போராட வேண்டுவதுதான் அறமாகும்.

—பண்டித நேரு.

ஒருவனுடைய குணநலனை உள்ளபடி மதிப்பிட்டறிய வேண்டுமென்றால், அவனுக்குத் துன்பம் நேர்ந்த காலத்தில் அவனைக் கவனிக்கவேண்டும்.

—நெப்போலியன்.

கொண்ட பொருளைப் பற்றி கோர்வையாகச் சொல்லும் திறனும் இருத்தல் வேண்டும். முதல்நிலை, இரண்டாம்நிலை, மூன்றாம் நிலைப் பணிகளுக்கு ஏற்ப ஐந்து, இரண்டு அல்லது மூன்று விருப்பப் பாடங்களில் எம்.ஏ., எம்.எஸ்.ஸி., தரத்தில் புலமை பெற்றிருத்தல் வேண்டும்.

தேர்வுமுறை:

இந்த அனைத்திந்தியப் பணிகள் தேர்வு முறை வருமாறு:

எல்லா வகைப் பணிகளுக்கும் மூன்று கட்டாயப் பாடங்கள் உண்டு.

அவை: 1. கட்டுரை வரைதல், 2. ஆங்கிலம், 3. பொது அறிவு. இவை ஒவ்வொன்றுக்கும் 150 மதிப்பெண்கள். இவற்றுள் கட்டுரை, பொது அறிவு ஆகிய இரண்டினையும் ஆங்கிலத்தில் எழுதலாம். தமிழிலும் (பதினான்கு தேசிய மொழிகளில் ஒன்று)எழுதலாம்.

இத்துடன் முதல்நிலைப் பணிக்கு என்றால் 3 விருப்பப் பாடங்களை எடுத்துக் கொள்ள வேண்டும். ஆங்கில இலக்கியம், இந்திய வரலாறு, ஐரோப்பிய வரலாறு, கணிதம், பௌதிகம், இரசாயனம், தமிழ் இலக்கியம், (பதினான்கு தாய் மொழிகளில் ஒன்று) சட்டம் இவை போன்ற 25 பாடப் பிரிவுகளிலிருந்து 3 பாடங்களில் தேர்வு எழுத வேண்டும். இவற்றில் ஒவ்வொரு பாடத்துக்கும் 200 மதிப்பெண்கள்.

இது தவிர மேல்நிலைக் கணிதம், மேல் நிலைப் பொருளாதாரம், மேல் நிலை இரசாயனம், மேல்நிலை தாவர இயல், மேல்நிலை பூகோளம், ஆங்கில இலக்கியம் போன்ற 16 பாடங்களிலிருந்து 3 பாடங்கள் தேர்வு எழுதல் வேண்டும். இவை ஒவ்வொரு பாடத்துக்கும் 200 மதிப்பெண்கள்.

இந்தத் தேர்வுகள் எழுத வயது வரம்பு 26 ஆண்டுகளுக்கு உட்பட்டு இருத்தல் வேண்டும். எழுத்து மூலமான தேர்வு, பின்னர் நேரடிப் பேட்டி முறையில் தேர்வு, பின்னர் உடல் திடம் கருதி மருத்துவத் தேர்வு இம்மூன்றிலும் தேற வேண்டும்.

நூற்றுக்கு ஒருவர்:

அனைத்திந்தியாவிலுமிருந்து ஆயிரக்கணக்கானவர்கள் இந்தத் தேர்வுகளை எழுதுகிறார்கள். இவர்களில் எழுத்துத் தேர்வில் குறிப்பிட்ட தரநிலைக்கு மேல் மதிப்பெண்கள் பெற்று வெற்றி பெற்றவர்களே வாய்மொழித் தேர்வுக்கு அழைக்கப்படுகிறார்கள்.

சான்றாக நாடு முழுதிலுமாக சுமார் 20,000 பேர்கள் தேர்வு எழுதினால், சுமார் 500 பேர்கள் அதாவது 2.5 சதவிகிதம் பேர்கள் மட்டுமே ஐ.ஏ.எஸ் நேரடித் தேர்வுப் பேட்டிக்கு அழைக்கப்படுகிறார்கள். இரண்டாவது நிலை மூன்றாவது நிலைப் பணிகளுக்கு நேரடித்தேர்வுக்கு அழைக்கப் படுவோரையும் சேர்த்தால் சுமார் 1,200 என்ற அளவில் இருக்கும்.

நேரடிப் பேட்டித் தேர்வு அதாவது வாய்மொழி மூலமான தேர்வு முடிந்ததும் வாய்மொழித் தேர்வு மதிப்பெண்கள் உள்ளிட்ட மொத்த மதிப்பெண்களின் அடிப்படையில் இவர்கள், தகுதி நிலைப்படி வரிசைப்படுத்தப் படுகிறார்கள். இந்தத் தகுதி நிலைக்கு ஏற்பவும் அந்தந்தப் பணிவகைகளில் உள்ள காலி இடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்பவும் இவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்படுகிறார்கள்.

எடுத்துக்காட்டாக, 500 பேர்கள், வாய்மொழித் தேர்வுக்கு அழைக்கப்பட்டார்கள் என்றால் சுமார் 140 நபர்கள் மட்டுமே இறுதியாகத் தெரிந்தெடுக்கப்படுவார்கள். எனவே ஐ.ஏ.எஸ். தேர்வு எழுதியவர்களில் நூற்றுக்கு ஒருவர் என்ற அளவுக்கும் குறைவாகத் தான் வெற்றி பெற முடிகின்றது.

கிராமத்தில் விளைந்தவர்கள்;

இத்தகைய நிலைமையில் பிற்பட்ட மாணவர்களை வைத்துப் பார்த்தால் மிகப் பெரும்பாலான மாணவர்கள்-சுமார் 85 சதவிகிதம் பேர்கள்-படிப்பில் முதல் தலைமுறை என்ற நிலையில் இருக்கிறார்கள். தரமான பள்ளிகளில் படித்த வசதியோ, கல்வி அறிவுப் பெருக்கத்துக்குத் தேவையான சுற்றுச் சூழ்நிலைகள், தொடர்பு வசதிகளோ இல்லாத கிராமப் பகுதிகளிலிருந்து இவர்கள் வந்திருக்கிறார்கள். எழுத்து மூலமான தேர்வு எழுதச் செய்வதற்கே கூட இவர்கள் மிகக் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். முடிவான வெற்றிக்காக இவர்களை நல்ல முறையில் ஆயத்தப் படுத்தித் தயார்ப்படுத்த வேண்டியுள்ளது. குறிப்பாக நேரடிப் பேட்டித் தேர்வுக்காக ஆங்கில பேச்சுப் புலமையை நல்ல முறையில் வளர்க்க வேண்டியுள்ளது.

பிற்பட்ட வகுப்பினர் சிறப்புப் பயிற்சிக்காக எம்.எஸ்.ஸி-யில் 60 மதிப்பெண்களுக்கு மேலும் எம்.ஏ. வானால் 50 மதிப்பெண்களுக்கு மேலும் பெற்றவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். சட்டம் பயின்றவர்களுக்கும் (பி.ஜி.எல், பி.எல்.,) சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இளைஞர்களும் யுவதிகளுமாக 50 பேர் ஆண்டுதோறும் நவம்பரில் இப் பயிற்சிக்குச் சேர்க்கப்படுகிறார்கள். அடுத்த ஆண்டு செப்டம்பரில் தேர்வு எழுதும் வரை, நடுவில் விடுமுறைக் காலம் எதுவும் இல்லாமல் தொடர்ந்து பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியாளர்கள் ஏற்ற விருப்பப் பாடங்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதில் இந்த நிறுவனம் வழி காட்டுகின்றது. விருப்பப் பாடங்களுக்கு ஏற்ற முறையில் பயிற்சியாளர்கள், பல்வேறு தொகுதியினராகப் பிரிக்கப்படுகின்றனர்.

பயிற்சி தரப்படும் முறை:

ஆங்கில இலக்கணம், கட்-

டுரை வரைதல் ஆகியவைகளில் தொடக்கத்தில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. பயிற்சியாளர்கள் எழுதும் போது பிழைகள் நேர்ந்தால் கூடுமான வரை தனிப்பட்ட முறையில் அது அவர்களுக்கு எடுத்துக் கூறப்படுகிறது. ஆங்கிலக் கட்டுரைகள் எழுதுவதில் புலமை பெற்றதும், ஐ.ஏ.எஸ். தேர்வுக்கு உரிய மாதிரியில் வாரந்தோறும் கேள்விகள் கொடுத்து பதில் எழுதச் செய்கிறார்கள். ஓய்வு பெற்ற கல்லூரி முதல்வர்கள், நல்ல அனுபவம் ஆற்றல் வாய்ந்த பேராசிரியர்கள் பயிற்றுவிக்கிறார்கள். திரு. வி.எஸ். அங்கப்பன் எம்.ஏ. எம்.எஸ்.சி இந்தச் சிறப்புப் பயிற்சி நிறுவனத்தின் முழு நேர முதல்வராக ஆர்வத்தோடு பணியாற்றி வருகின்றார். அவரைத் தவிர, முழு நேரப் பேராசிரியர்கள், துணைப் பேராசிரியர்கள் நால்வரும் பகுதி நேரப் பேராசிரியர்கள் 7 பேர்களும் இதில் பணியாற்றுகின்றனர். சில குறிப்பிட்ட துறைகள் குறித்து விரிவுரையாற்ற வெளியிலிருந்து வல்லுநர்கள் வரவழைக்கப்படுகிறார்கள். பயிற்சியாளர்களுக்கு வாரந்தோறும் 'டெஸ்ட்' நடத்தப்படுகின்றது.

### ஆங்கிலத்தில் பேச....

பயிற்சிக் காலத்தில், கல்லூரி முதல்வர் தினம் ஒரு மாணவரை அழைத்து அரை மணி நேரம் பேட்டியளித்து அவர்கள் சரளமாக ஆங்கிலத்தில் உரையாட, ஊக்கமளிக்கிறார். வாராந்திர விவாதங்களின்போது பயிற்சியாளர்கள் தங்கள் பேச்சாற்றலைக் காட்ட வாய்ப்பு ஏற்படுகின்றது.

எழுத்துத் தேர்வில் வெற்றி பெற்று, நேரடிப் பேட்டித் தேர்வுக்குச் செல்லும் நிலையில் உள்ள பயிற்சியாளர்களுக்கு ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ்., அதிகாரிகளின் உதவியுடன் முனைப்பான பயிற்சி அளிக்கவும் வகை செய்யப்பட்டிருக்கிறது. நல்ல நூல்கள், கருத்திதழ்கள், செய்தி இதழ்கள் கொண்ட நூல் நிலையம், இப்பயிற்சியாளர்கள் அறிவாற்றலை வளர்த்துக் கொள்ள உதவியாக உள்ளது.

பயிற்சியாளர்களின் உடல் நல வலிமையை மேம்படுத்துவதற்காக ஒய்.எம்.சி.ஏ. உடற்பயிற்சிக் கல்லூரியில் விளையாட்டுக்களில் ஈடுபடவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

### இது ஒரு பால் உணவு

பொதுவாகக் கூறுமிடத்து, இந்த சிறப்புப் பயிற்சி நிறுவனத்தை, ஒரு பால் உணவுக்கு ஒப்பிடலாம். குழந்தைகளுக்கு எப்படி பால் உணவு தேவைப்படுகிறதோ, அதே போல, நோய் நீங்கி உடல் நலம் பெற்றுவரும் இளைத்தவர்களுக்கும் பால் உணவு தேவை. முன்னேற்றமடைந்த வலியவர்கள் இதனைப் பார்த்து எங்களுக்கும் இந்த உணவு தாருங்கள் என்பதோ அல்லது எல்லோருக்குமே இல்லை என்று சொல்லுங்கள் என்பதோ நீதியும் ஆகாது, மனிதாபிமானமும் ஆகாது.

பிற்பட்டவர்களுக்கான பயிற்சி நிறுவனம் அளிக்கும் பயிற்சி மிகப் பயன்வாய்ந்தது. ஐ.ஏ.எஸ். போன்ற தேர்வுக்கு இது மிகப் பயன்படும் என்பது மட்டுமல்ல, மற்ற எந்த உத்தியோகப் போட்டித் தேர்வுக்கும் இது மிகுந்த பயன் அளிக்க வல்லது.

**குறிப்பு:**

**இரட்டை மேற்கோள் குறிகளில் அடங்கியுள்ள பகுதிகள் தமிழ்நாடு பிற்பட்டோர் நலக் குழுவின் அறிக்கைப் பகுதிகளாகும்.**

— சி.க.ரா

---

### சிறுசேமிப்புத் திட்டத்தில் சிறந்த கிராமம் !

முகவை மாவட்டத்திலேயே சிறுசேமிப்புத் திட்டத்தில் அருப்புக்கோட்டை ஒன்றியத்தைச் சார்ந்த கோவிலான்குளம் முதலாவதாகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. அக்கிராமத்திலுள்ள மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கை 742 ஆகும். அத்தனை குடும்பங்களும் சிறுசேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து இதுவரை ரூபாய் 22,000க்கு மேல் பணம் செலுத்தியுள்ளனர். இதனைப் பாராட்டுகின்ற வகையில் 12—3—74ஆம் நாள் 'தனி விழா' ஒன்று அக்கிராமத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடத்தப் பெற்றது.



இந்தியாவிலிருந்து குரங்கு,
ஆடு, நாய், பூனை, ஆமை,
கோழி ஆகியவை அதிக
அளவில் ஏற்றுமதி செய்யப்
படுகின்றன. கடந்த ஆண்டு
ரூ 1 கோடியே 34 லட்சம்
மதிப்புள்ள பிராணிகள் ஏற்று
மதி செய்யப்பட்டுள்ளன.
இதில் குரங்கு மட்டும் ரூ. 35
லட்சத்து 20 ஆயிரத்துக்கு
ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.
ரூ. 28 லட்சம் மதிப்புள்ள
பறவைகளை இந்தியாவில்
இருந்து ஜப்பான் வாங்கி
உள்ளது.





# அமெரிக்கக் கவிஞர் ராபர்ட் ஃபிராஸ்ட்

ஜீ

அந்த அழகிய 'மினி' திரையரங்கிலே வண்ணப்படம் ஓடிக்கொண்டிருந்தது.

நம் எண்ணத்தையெல்லாம் ஈர்க்கும் எழில்மிகு காட்சிகள் கண்ணுக்கு விருந்தளிக்கின்றன.

அந்தக் காட்சி ஒரு கவிதையோடு பின்னியிருக்கிறது என்பதையும், பின்னணியில் அந்தக் கவிதைக்குரிய கவிஞரின் குரல் நம் செவிக்கு இன்பம் தருகின்றது என்பதையும் அறியும்போதுதான், அந்தப் படம் ஒரு கவிஞரைப் பற்றி எடுக்கப்பட்ட வண்ணப் படம் என்பதை உணர்கிறோம்.

இந்தக் கவிஞரின் நூறுவது பிறந்த நாளையொட்டி எடுக்கப்பட்ட விழாவை விட, இவரை வைத்து—இவர் கவிதைக்கு வடிவம் கொடுத்து ஒரு வண்ணப் படமே எடுத்திருக்கிறார்களே அதைப் பாராட்ட வேண்டும். 26 நிமிடங்கள் ஓடும் இந்தப் படம் நம் இதயத்தைத்தொடுகிறது.

சென்னை அமெரிக்கத் தகவல் நிலையம் ஏற்பாடு செய்துள்ள இந்த விழாக் கவிஞர் தான் ஜான் எஃப் கென்னடி, பண்டித நேரு முதலிய தலைவர்கள் கொண்டாடிய கவிஞர் ராபர்ட் ஃபிராஸ்ட்.

இவருடைய கவிதைகளை மக்கள் படித்தறியத் தொடங்கியபோது அவருக்கு நாற்பது வயது ஆகிவிட்டது. மறைந்த காலத்தில் அவர் உலகத்திலுள்ள சிறப்பு மிக்க கவிஞர்களில் ஒருவராக விளங்கினார். 1958 முதல் ஜனவரி 29-ம் தேதி தமது 88-வது வயதில் மறைந்ததுவரை அவர் சட்டமன்ற நூலகராக அரும்பணியாற்றினார்.

யேல் பல்கலைக் கழகம் கவிதைத் துறையில் அவருக்குப் "பாலிங்கன்" பரிசு வழங்கியது. அமெரிக்காவில் பாலிங்கன் பரிசு பெறுவது பெறற்கரும் சிறப்பாகும்.

தாம் எழுதியவை தமது காலத்திலேயே இலக்கியங்களுக்கு இணையாக விளங்கியதை ஃபிராஸ்ட் கண்டார். அது மற்றக் கவிஞர்களுக்குக் கொடுத்து வைக்காத ஒன்று. தம் வாழ்நாளிலேயே அவர் பல சிறப்புக்கள் பெற்றார். நான்கு முறை கவிதைத் துறையில் அவர் புலிட்சர் பரிசு பெற்றார்; இலக்கியத்துக்கு அமெரிக்கா வழங்கும் மிகச் சிறந்த கௌரவம் அது. அவரது 75-வது பிறந்த நாளில் அமெரிக்கச் சட்ட மன்றத்தின் மேலவை தன் அரசியல் அலுவல்களைச் சிறிது நேரம் நிறுத்தி வைத்து, அவரை ஒன்று பட்டுப் பாராட்டியது.

இவருடைய தந்தை ஒரு பத்திரிகை ஆசிரியர். தாயார் ஓர் ஆசிரியை.

தமது முதல் நூல் வெளியாவதற்கு முன் இருபது ஆண்டுகளாகத் தொழிற்சாலைத் தொழிலாளராகவும், பள்ளிக்கூட ஆசிரியராகவும், பத்திரிகை ஆசிரியராகவும் அவர் வேலை பார்த்தார். 30 ஆண்டுகளாக அவர் விவசாயியாக இருந்திருக்கிறார். பல்கலைக் கழகங்கள் பலவற்றில் ஆசிரியராகவும் பணியாற்றியிருக்கிறார்.

இன்றைய இளங் கவிஞர்களுக்கு அவர் சொல்வதென்ன?

"ஒன்றை நான் முக்கியமாகக் கருதுகிறேன். இளைஞர்களும் அதைப்பற்றி எண்ண வேண்டுமென்று நான் விரும்புகிறேன். கவி என்பது உணர்ச்சியின் சிறப்பு மிக்க வடிவம் என்பது என் எண்ணம். கவியில் அறிவு மட்டுமல்ல, உணர்ச்சியும் இருக்க வேண்டும். இளங் கவிஞர்கள் இதை மறந்து விடுகிறார்கள்!"



வாழ்க்கைக்கு
ஒரு பாடம்!
எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!
சேமிப்புப் பழக்கமே
எதிர் காலத்திற்கு ஆக்கம் தரும்
சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும் வளரும் மாதச்சேமிப்புத் திட்டமும் ஆகும்.
மாதம் செலுத்தும் தொகை
5 ஆண்டு இறுதியில் கிடைப்பது
ரெகரிங் டிபாசிட்
ரூ. 5
ரூ. 355
ரூ. 10
ரூ. 710
வளரும் மாதச் சேமிப்பு
ரூ. 5
ரூ. 337.50
ரூ. 10
ரூ. 675.00
தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது. சிறுசேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.
இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.
இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.
- சிறுசேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு



# யானைச் செல்வம்

கே. துரைராஜ்,
வனப் பாதுகாவலர்.

நிலத்திலே வாழும் குட்டியீன்று பால் கொடுக்கும் விலங்கு இனத்திலே மிகப் பெரிய உயிர்வாழ் மிருகம் யானையே. புராண இதிகாச காலங்கள் முதல், மனித சமுதாயத்தின் பழக்க வழக்கங்களோடு தொடர்பு கொண்டு மத சாத்திர சம்பிரதாயங்களிலே சிறப்பானதொரு இடத்தைப் பெற்றுத் தனிச்சலுகைகளை அனுபவித்து வருபவை யானைகள். குறிப்பாகவும் சிறப்பாகவும் இந்து சமுதாயத்தினரிடையே யானைகள், மெய்யறிவு, செல்வம் ஆகியவற்றின் சின்னமாகவும் விளங்குகிறது.

இலட்சுமி தேவதை யானைகள் புடை சூழ உருவகப்படுத்தப்பட்டிருக்கிறார். யானை முகக் கடவுளான விநாயகப்பெருமாள் மதச் சடங்கு வழிபாட்டிலே முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளார். ஐராவதம் இந்திரனின் வாகனமென்றும் மற்றும் அவனுடைய எட்டு யானைகளும் எட்டுத் திசைகளையும் காவல் புரிந்து வருவதாகவும் நம்பப்படுகிறது.

இத்தகைய ஒரு சிறப்புப் பெற்றிருப்பதால் யானைகள், கோவில்களிலே விக்கிரகங்களை சுமந்து பவனி வருவதற்கும் அலங்கார ஊர்வலங்களை நடத்திச் செல்லவும் பயன்படுத்தப்படுகின்றன. முடியுடைய மூவேந்தர்களும் மற்றும் பல இந்திய மன்னர்களும் யானைப்படைகளை வைத்துக் கொள்வதில் பெரும் ஆர்வம் காட்டினர். ஒர் அரசனிடம் உள்ள யானைகளின் எண்ணிக்கையைக் கொண்டுதான் அவனது பலம் கணக்கிடப்பட்டு வந்தது. சந்திரகுப்த மன்னர் பாடலிபுத்ராவில் 9,000 போர் யானைகள் வைத்திருந்தார். வெடி மருந்துகள் கண்டுபிடித்த பின்பு யானைப்படைகளும் குறைந்து விட்டன. 15-ஆம் நூற்றுண்டு வரை யானைப் படைகள் இருந்தனவென அறிகிறோம்.

சர்க்கஸ் வழியாகவும், மிருகக் காட்சித் தோட்டங்கள் மூலமாகவும் பல நாட்டு மக்களும் யானையைப் பார்த்திருக்கின்றனர். யானைகளில்லாத சர்க்கஸ் இல்லையென்றே சொல்லலாம். அண்மைக் காலங்களில் யானைகள் திரைப் படங்களில் கூட நடிப்பதற்கு ஆரம்பித்து விட்டன.

இக்காலத்தில் உலகில் உள்ள யானைகளெல்லாம் மூன்று இனங்களைச் சேர்ந்தவை. ஆப்பிரிக்க யானைகளில் இரண்டு வகை. மற்றொன்று ஆசிய யானை. ஆசிய யானையை இந்திய யானை என்றே பெரிதும் வழங்குவார்கள். ஆசிய யானை இந்தியா, இலங்கை, பர்மா, தாய்லாந்து, கோச்சின், சீனு, மலேயா, சுமத்திரா போர்னியோ ஆகிய பகுதிகளில் வாழ்கின்றன. ஆசிய யானை ஆணின் சராசரி உயரம் 8-9 அடி இருக்கும். பெண் 6'-8' இருக்கும். மிக உயரமான ஆசிய ஆண் 11', பெண் 9'. ஆசிய யானையில் பளபளப்பான குளம்பு போன்ற நகங்கள் முன் காலில் 5, பின் காலில் 4 உண்டு. அபூர்வமான பின்கால்களிலும் 5 இருப்பதுண்டு. ஆசிய யானையின் துதிக்கையைவிட ஆப்பிரிக்க யானையின் துதிக்கை பெரிது. ஆப்பிரிக்க யானையின் உயரம் 12 அடி இருக்கும். ஒரு யானையின் எடை சுமார் 4 டன் இருக்கும். பிறந்த குட்டியின் எடை 40 கிலோ. யானை இமயம் முதல் குமரி வரை இந்தியாவின் எல்லாப் பாகங்களிலும் காணப்படுகின்றது. ஆசிய யானை ஆப்பிரிக்க யானையைவிடச் சாதுவானது.

யானைகள் கடல் மட்டத்திற்கு 5,000 அடிக்கு மேல் சாதாரணமாகக் காணப்படுவதில்லை. ஆயினும் பர்மாவிலே 10,000 அடி உயரத்திலும் அதற்கு மேலும் உள்ள மூங்கிற் காடுகளுக்குள்ளே யானை செல்வதைப் பார்த்திருக்கின்றனர். சிக்கிம் நாட்டிலே 12,000 அடி உயரத்திலே படிந்துள்ள வெண்பனியிலே யானையின் சுவடுகளைக் கண்டிருக்கின்றனர். யானை எப்போதும் நடந்தே செல்லும். இது ஓடுவதில்லை. இதன் நடையிலே அழகும் கம்பீரமும் உண்டு. மணிக்கு 20 மைல் வரை நடக்கக்கூடும்.

டிராக்டர்களோ புல்டோசர்களோ நுழைய முடியாத அடர்ந்த காடுகளிலே, வெட்டின மரங்களைத் தள்ளிக் கொண்டு வருவதற்கு யானைகள் இந்தியா, பர்மா, மலேயா முதலிய நாடுகளில் மிகவும் உதவியாக இருக்கின்றன.

16-4-3

முதிர்ச்சியுள்ள யானை 1000 முதல் 1200 பவுண்டு பாரத்தைத் தூக்கிச் செல்லும். ஒரே சுமையாக 35 முதல் 60 கன அடி உள்ள மரத்தை இழுத்துக் கொண்டு போகும்.

இந்திய யானைகள் புத்திக் கூர்மையுடன் கூடிய திறமை மிக்க வேலைகளுக்காகவும், சொற்படி கேட்கிற தன்மைகளுக்காகவும் மிகவும் போற்றப்படுகின்றன. ஆனால் ஆப்பிரிக்காக் கண்டத்தில் வாழும் யானைகள் பெரும்பாலும் தந்தத்திற்காகவே வேட்டையாடப்படுகின்றன. இந்திய யானைகளைப்போல் அவைகளைப் பிடித்து எளிதில் பழக்கிவிட முடியாது. எனவேதான் சர்க்கஸ் கூடங்களில் நாம் இந்திய யானைகளையே காண முடிகிறது.

காட்டில் வாழும் யானையைப் பிடித்துப் பழக்கும் கலை, பண்டைக்காலம் முதல் கீழ்நாடுகளில் நடந்து வருகிறது. இந்தியாவில் காட்டு யானையைப் பிடிக்க இரண்டு முறைகள் கையாளப்படுகின்றன. இவ்விருமுறைகளில் "Khedda" என்னும் முறை மைசூர் மாநிலத்திலும் அஸ்ஸாமிலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. நம் தமிழ்நாட்டில் குழி வகைதான் பின்பற்றப்படுகிறது.

காட்டு யானைகளைப் பிடித்துப் பழக்குவதென்பது வனத்துறையினருக்குக் கை வந்த கலை. ஆனைமலைக் காடுகளிலும் ஈரோட்டைச் சேர்ந்த தலமலைக்காடுகளிலும் டிசம்பர் முதல் ஏப்ரல் வரை காட்டு யானைகளைப் பிடித்துப் பழக்குகின்றனர். ஏனெனில் இப்பருவத்தில்தான் தண்ணீர்ப் பஞ்சமும் தீனிப்பஞ்சமும் நிலவும். யானைகள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செல்லுகையில் ஒரு குறிப்பிட்ட பழக்கப்பட்ட வழியாகச் சென்று திரும்பும் பழக்கமுடையவை. அவை, தங்களுக்குப் பழக்கப்பட்ட நீர்ச்சுனைகளில்தான் நீர் பருகும்; மேயும். யானைகளின் இந்தச் சிறப்பு இயல்புகளை நன்கு புரிந்து கொண்டு அவை செல்லும் வழித்தடங்களின் ஊடே ஒரு மாதத்திற்கு முன்பே குழிகளை வெட்டி வைப்பர். குழியின் கீழ்ப்பாகம் மெத்தென்றிருக்கும். இது யானைகள் விழும்போது அடிபடாது இருக்கவும் அதிர்ச்சி மற்றும் காயங்கள் ஏற்படாதவாறும் இருப்பதற்காகும், குழிகளின் மேல் பாகத்தில் குறுக்கு மறுக்காக மூங்கில் சிராய்களை வைத்து லேசான இலைத்தழைகள் போட்டு மண்ணும் கொண்டு தந்திரமாக மூடப்படும். குழியில் வீழ்ந்த காட்டு யானையை "Kumkies" என்னும் பழக்கிய யானைகளைக் கொண்டு குழியிலிருந்து வெளியேற்றிக் கொண்டுபோய் அவைகளுக்காகத் தயாரிக்கப்பட்ட 'Kraal' என்னும் கொட்டகையில் அடைத்து வைத்துப் பின் பழக்குவர். பொதுவாகப் பெண் யானைகளும் குட்டி யானைகளும் வெளியே பழக்கப்பட்டு 2 மாத காலத்தில் மற்ற யானைகளுடன் மேய்ச்சலுக்கு அனுப்பப்பட்டு விடுகின்றன. பின்பு அவை மற்ற வேலைகளைச் செய்யவும் பயன்படுத்தப்படுகின்றன. குழி வகையில் 1 குழியில் ஒன்று அல்லது இரண்டு யானைகள் விழும்.

கூட்டமாக யானைகள் வரும்போது ஒன்றிரண்டு யானைகள் குழியில் விழுந்ததும் மற்ற யானைகள் சிதறி ஓடும். பக்கவாட்டங்களிலும் 2 குழிகள் வெட்டி வைப்பர். அங்கும் யானைகள் விழுந்து விடுவதுண்டு. குழியில் விழுந்து பிடிக்கப்படும் யானை வயதானதாக இருப்பின் அவை மனமொடிந்து இறந்து விடுவதும் உண்டு. கூட்டமாக யானைகளைப் பிடிக்கக் கையாளப்படும் மற்றொன்று "Khedda" முறையாகும்.

ஒரு பள்ளத்தாக்கான இடத்தில் சுமார் 5 ஏக்கர் நிலத்தைச் சுற்றிப் பலமான வேலிபோல் யானைகளால் தகர்க்க முடியாத பெரும் மரங்களைக் கொண்டு ஒரு பெரிய பட்டி தயாரிக்கிறார்கள். இந்தப் பட்டியைச் சுற்றி யானைகள் தாண்ட முடியாத ஆழமான அகழிகள் வெட்டி வைப்பர். யானைகள் புகுவதற்கு நுழைவாயில் தயார்ப்படுத்தப்பட்டுப் பெரும் கதவுகள் மேல்பக்கமாகக் கயிறுகளால் மரங்களின் மேலே தூக்கிக் கட்டப்பட்டிருக்கும். காட்டில் திரியும் குறிப்பிட்ட ஒரு யானைக் கூட்டத்தைச் சுமார் ஆயிரம் ஆட்களும், 30, 40 பழக்கப்பட்ட யானைகளும், தீப்பந்தங்களுடனும் கொம்புகளை ஊதியும் டமாரம் அடித்துக் கொண்டும் பெரும் கூக்குரல் ஆரவாரங்களுடனும் துரத்திக் கொண்டு வருவார். வேறு எத்திசையிலும் ஓட இயலாமல் யானைக்கூட்டம் தயாரிக்கப்பட்ட பட்டியில் நுழையும். நுழைந்ததும் உயரத்தில் உள்ள ஆட்கள் நுழைவாயில் கதவின் கயிற்றை அறுத்து வாயிலை மூடிவிடுவர்.

பிறகு 4 நாட்களுக்குள் இளம் காட்டு யானைகளைக் கயிறுகளால் பிணைத்து வெளியேற்றிப் பழக்குவர். கொம்பன் யானைகளையும் பழக்கமுடியாத வயதான யானைகளையும் திரும்பக் காட்டுக்குள் விட்டுவிடுவர். இந்த முறையில் ஒரே சமயத்தில் நூற்றுக்கணக்கான யானைகள் பிடிக்கப்படும். அஸ்ஸாமில் ஒரு முறை 392-ம் இன்னொரு முறை 437 யானைகளும் பிடித்துப் பழக்கப்பட்டு விற்கப்பட்டன. அயல்நாட்டு மன்னர்கள், பெரும் பிரமுகர்கள் இந்த யானை பிடிக்கும் காட்சியைக் காண வருவதுண்டு.

"யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன்" என்று புகழ்வர். இதற்குக் காரணம் யானையிடமுள்ள தந்தமேயாகும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு



முன்னமே யானைத் தந்தம் தென்னிந்தியாவிலிருந்து பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதென்று வரலாறு கூறுகிறது.

யானை, தனக்குத் தீங்கு இழைத்தவரை ஒரு போதும் மறவாது; பழி வாங்கும் குணமுடையது. ஆனால் தனக்கு நன்மை செய்வோரை மறக்காது. யானை மதங்கொண்டால் கட்டுக்கடங்காமல் வெறிகொண்டு திரியும். எதிர்ப்பட்ட பொருட்களையெல்லாம் தகர்த்து எறியும். யானையின் இந்த மதம் பற்றிப் பல்வேறுபட்ட கருத்துக்கள் நிலவி வருகின்றன. மதம் என்பது காம இச்சையின் மிகுதியால் " Sexual excitement " உண்டாகும் ஒரு வெறியாகும். முதிர்ச்சியுள்ள ஆண் யானைகளுக்கு அவ்வப்போது 'மதம்' என்னும் நிலை, குளிர் காலத்[illegible] மதம் பிடித்தில் உண்டாகும். [illegible] திருக்கும் சமயத்தில் யானையின் கண்ணுக்கும் காதுக்கும் இடையேயுள்ள வீக்கமாகக் காணும் பொறியிடத்தில் உள்ள ஒரு சிறு துவாரத்தின் வழியாக அங்குள்ள சுரப்பியிலிருந்து ஒரு நீர் கன்னங்களிலும் வழியும். பெண் யானைகளும் சில சமயம் இவ்வித மதங்கொள்வதுண்டு.

ஓர் ஆண்யானை காமவெறியில் கட்டவிழ்ந்துவிட்டால் யாரும் அதன் பக்கம் நெருங்க முடியாது. ஆனால், ஒரு பெண் யானை உடன் வர நாம் அதனிடம் சென்றால் எவ்வித எதிர்ப்புமின்றிப் பணிந்து விடும். யானையின் தோல் மிகவும் தடிப்பாக இருக்கும். நன்றாக வளர்ந்த ஒரு யானையின் தோல் ஒரு டன் எடையிருக்கும். யானை, மரத்தையோ வேரையோ பெயர்த்தெடுக்கவும், பகை விலங்குகளுடன் சண்டையிடவும் தனது தந்தங்களைப் பயன்படுத்தும்.

மூக்கும் மேலுதடும் இணைந்து நீளமாக வளர்ந்துள்ள உறுப்பே துதிக்கை. இது ஆறடி நீளமிருக்கும். 300 பவுண்டு எடையுமிருக்கும். இதனால் யானை 1 டன் எடையுள்ள மரத்தை எளிதாகத் தூக்கும். புலியைப் பற்றித் தூக்கிப் போடக்கூடும். துதிக்கை மூச்சு விடுவதற்கும் உதவுகிறது. யானையின் புலன்களில் எல்லாம் மோப்பமே கூர்மையானது. எந்நேரமும் யானை துதிக்கையைத் தூக்கி உயர்த்தியும், இங்குமங்கும் வளைத்து நீட்டியும் மோப்பம் அறிந்து கொண்டே இருக்கும்.

யானையின் மேல் தாடையிலேயுள்ள இரண்டு முன் பற்கள் பெரிய கொம்புகளாக வளர்ந்துள்ளன. கீழ்த்தாடையில் முன் பற்கள் இருப்பதில்லை.

இந்திய யானையின் தந்தம் சுமார் 9 அடி நீளமும் 100 பவுண்டு எடையும் இருக்கும். ஆப்பிரிக்க யானையின் தந்தம் 10' நீளமும் 220 பவுண்டு எடையும் இருக்கும். 1 கிலோ தந்தத்தின் விலை சுமார் ரூ. 220 ஆகும்.

யானைகள், அடர்ந்த காடுகளில் வாழ்பவை. யானை நீரிலும் சேற்றிலும் படுப்பதும் புரள்வதும் அதற்கு விருப்பமான விளையாட்டு. யானை மிகவும் நன்றாக நீந்தும். ஆண்டுதோறும் பிரம்மபுத்திராநதியில் யானைகளுக்கு நீச்சல் போட்டி நடக்கும் அவற்றைப் பார்த்து மக்கள் மகிழ்வர்.

யானை பகலில் வெய்யில் மிக்க [illegible] நேரத்தில், சிறிது உறங்கும். அவ்வாறே நடு இரவிலும் உறங்கும். உறங்கும்போது நின்றுகொண்டேனும் பக்கத்தில் ஒருக்கணித்துச் சாய்ந்துகொண்டேனும் குறட்டைவிட்டுக் கொண்டே உறங்கும். ஆண், பெண் யானைகள் உடலுறவு கொள்வது, நாய் முதலிய விலங்குகளைப் போலத்தான்.

யானை இரண்டரை ஆண்டுகளுக்கு ஒரு முறை கன்று போடும். கருப்பக்காலம் 19 மாதம் முதல் 24 மாதங்கள் 520 முதல் 730 நாட்கள்வரையிலும் வேறுபடுகிறது. பிறப்பது ஆண் என்றால் கருப்பக் காலம் நீண்டிருக்கும். எனினும் யானையின் கருப்பக் காலம் 645 நாட்கள் அல்லது 21 மாதம் என்பர். யானை கன்று போட வலியடையும்போது கன்னிகளல்லாத வேறு பெண்யானைகள் அதன் அருகில் வந்து துதிக்கையால் தடவிக் கொடுத்து ஆற்றுவிக்கும். மற்ற யானைகள் ஒன்று சேர்ந்து பிளிறிக் கொண்டு உற்சாகத்துடன் இரவும் பகலும் ஆர்ப்பாட்டம் செய்யும். பிற யானைகள் பிறந்த கன்றை எடுத்து உலர்த்திக் காப்பாற்றும். பால் கொடுப்பதும் உண்டு. தடவைக்கு ஒரு கன்று தான் பிறக்கும். இரட்டைகள் அபூர்வமாகப் பிறப்பதுண்டு. இரண்டு ஆண்டுகளுக்கு முன் முதுமலை வனத்துறை யானைகள் காப்பகத்திலே ஒரு யானை இரட்டைக் குட்டிகளை ஈன்றது பற்றி பத்திரிகை வாயிலாக அறிந்திருக்கலாம்.

ஆண் யானை 25 ஆண்டுகளில் முழு வளர்ச்சி அடைகிறது. பெண் யானை 15 வயதான போது சினையாக இருக்கக் கண்டிருக்கின்றனர். 7, 8 ஆண்டுகளில் பெண், ஆணோடு சேரக்கூடும். யானைக் கன்று 2 3 ஆண்டுகள் வரையில் தாயிடம் பால் குடிக்கும். கன்று 7, 8 மாதங்களில் மெதுவாகப் புல் மேயத் தொடங்கும்.

யானையின் வயதை உத்தேசமாக அதன் காதிலிருந்தும், நகத்திலிருந்தும் அறியலாம். இளைய யானையின் காது 6, 7 ஆண்டுகள் வரையில் அதன் மேல் வரம்பில் மடிந்து இருப்பதில்லை. வயது ஏற ஏற 13, 20 ஆண்டுகளில் அது முன்னுக்கு மடியும். முதிய யானையிலே மெல்லியதாக இருக்கும். கீழ் விளிம்பானது கிழிந்திருக்கும். வயதான யானைகளைக் கன்னம், காது, துதிக்கை ஆகிய இடங்களிலுள்ள வெள்ளைப் புள்ளிகளைக்கொண்டும் கண்டு பிடிக்கலாம். கன்னத்திற்கு மேல் நெற்றிப் பொட்டில் பள்ளம் [illegible]களும் விழுந்திருக்கும். கா[illegible] துதிக்கையும் சற்று மெலிந்து காணப்படும்.

யானையின் கண்கள் சிறியவை. அதன் பார்வை கூர்மையானதன்று. 50 கெஜ தூரத்திலே இருக்கும் ஒரு பொருளைப் பார்த்து அறிந்து கொள்ள முடியாது. இதன் செவிப்புலன் கூர்மையானது. சிறிய ஒலிகளையும் அறிந்துகொள்ளக் கூடும். யானை, நிலத்தில் உண்டாகும் சிறிய அதிர்ச்சியையும் தன் பாதங்களால் தெரிந்து கொள்ளும். இதன் மோப்ப உணர்ச்சி மிகக்கூர்மையானது. யானைகள் முற்றிலும் பயிர் உண்ணும் விலங்கு. மரங்களின் இலைகளையும் பட்டையையும் கொடிகளையும் கனிகளையும் தின்னும். மூங்கில் இலையும் குருத்தும் என்றால் அதற்குக் கொள்ளை ஆசை.

பழக்கப்பட்ட யானைகளை மிகுந்த கவனத்தோடு பேண வேண்டும். சராசரியாக ஒரு நாளைக்கு 15 பவுண்டு தானியமும் வைக்கோல் போன்ற உலர் உணவும், 400- 480 பவுண்டு பச்சைத் தழைகளையும், புல் முதலியவும் இரண்டு அவுன்சு உப்பும் 1 அவுன்சு எண்ணெயும் கொடுக்கின்றனர். சமைத்த சாதம், கேழ்வரகு, களி, கொள்ளு, தேங்காய் முதலியவற்றை நாள் தோறும் இரண்டு வேளை கொடுப்பதுண்டு.

யானை, மதி நுட்பமும் அறிவும் உள்ள விலங்கு. வட இந்தியா, அஸ்ஸாம் முதலிய இடங்களில் பாகன் யானையுடன் பேசிப் பழக்குவது, வடமொழியான சமஸ்கிருதமும் அதிலிருந்து உண்டான பிற மொழிகளுமே! ஆனால் கேரளம், தமிழ்நாடு, மைசூர் முதலிய மாநிலங்களில் திராவிட மொழியில் பழக்குகின்றனர்.

உயர்ந்த இன யானையின் தலையில் முத்துக்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது. 1928-ம் ஆண்டு ஒரு வன அலுவலர் ஒரு காட்டு யானையைக் கொன்றபோது அதன் தலையில் ஒரு பாகத்தில் அதன் கொம்புக்கடியில் விலையுயர்ந்த ஒரு சிறு முத்து எடுக்கப்பட்டதாம்.

அபூர்வமாகச் சில யானைகளின் தோல் முழுவதும் யாதொரு நிறப் பொருளும் (Pigment) இல்லாமல் வெண்மையாக இருக்கும். இவ்வித வெண்மையான யானைகள் வெள்ளையானைகள் (Abbino) எனப்படும். புத்தர் மனித அவதாரம் எடுப்பதற்கு முன்பு அவருடைய தாய் ராணி மாயாவின் கருவில் வெள்ளை யானையாக உருவாக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. ஆகவே புத்தமதம் வேரூன்றியுள்ள பர்மா, சயாம், இந்தோசைனா முதலிய நாடுகளில் வெள்ளை யானைக்கு மிகுந்த மரியாதையும், வணக்கமும் செலுத்தப்படுவதாகக் கருதப்படுகிறது. இப்படிப்பட்ட வெள்ளையானையை இந்தியாவில் திரிபுரா மாநிலத்தில் 1943-ஆம் ஆண்டு ஒரு சமஸ்தானத்தில் பார்த்திருக்கிறார்கள்.

சாதாரணமாக யானைக்கு 18 நகங்கள் உண்டு. 16 நகங்கள் இருந்தாலோ அல்லது நாக்கில் கறுப்புப் புள்ளிகள் இருந்தாலோ வால் மிகவும் நீண்டிருந்தாலோ அல்லது கண் வெள்ளையாக இருந்தாலோ யாரும் அதை வாங்க மாட்டார்கள். வாங்குபவர்களுக்குத் 'துரதிருஷ்டம்' என்று இருப்பதால் அப்படிப்பட்ட யானைகள் விலை போவதில்லை.

பழக்கப்பட்ட யானைகள் மனிதனைப்போன்று சராசரி 70 வயது வரை வாழும். காட்டில் இயற்கையாக வாழ்ந்து திரிபவை இன்னும் நீடித்த ஆயுளுடன் 100 முதல் 150 வயது வரை உயிருடன் இருப்பதாக நிபுணர்கள் கூறுகின்றனர்.

## பட்டு ஏற்றுமதி

ஐந்தாவது திட்ட முன் குறிப்பில், மத்திய திட்டம் ஒன்றின் வாயிலாகப் பட்டுத் தொழிலை முன்னேற்றவும், மத்திய பட்டு வாரியத்தின் நிர்வாகத்துக்காகவும் 8 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மத்திய ஒதுக்கீட்டைத் தவிர, மாநிலத் திட்டங்களில் பட்டுப் புழு வளர்ப்புத் தொழில் வளர்ச்சிக்கென 25 கோடியே 65 லட்சம் ரூபாய் ஒதுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஐந்தாவது திட்ட முடிவுக்குள் பட்டு உற்பத்தியை 46 லட்சத்து 40 ஆயிரம் கிலோ அளவுக்கு உயர்த்துவது திட்டத்தின் குறிக்கோளாகும்.

கர்நாடகத்தில் இயற்கை மல்பரி பட்டு உற்பத்தி 18 லட்சத்து 61 ஆயிரம் கிலோ கிராம் என்னும் அளவில் இருக்கிறது. இதை அடுத்த பத்து ஆண்டுகளில் 35 லட்சம் கிலோ கிராம் அளவுக்கு உயர்த்துவதற்கான முனைப்புத் திட்டம் ஒன்றையும் மைய அரசு மேற்கொண்டுள்ளது.

பட்டு ஏற்றுமதியை 87 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்புக்கு உயர்த்துவது குறிக்கோளாகும். ஏற்றுமதியை உயர்த்தும் பொருட்டுப் பட்டுத் தொழில் உற்பத்தியைப் பெருக்க வழி வகுக்கும் ஆராய்ச்சிப் பணிகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளனர். ஏற்கெனவே மேற்கொண்ட ஆராய்ச்சி முடிவுகளை எடுத்துரைக்கும் விரிவாக்கப் பணிகளை மேற்கொண்டுள்ளனர். இயற்கை மல்பரி பட்டில் தயாராகும் பொருட்களைப் பொறுத்தவரையில் தரக் கட்டுப்பாடு நடவடிக்கைகளை அறிமுகம் செய்துள்ளனர்.



காடுகளில் கணக்கற்ற யானைகள் இருப்பினும் எங்கும் அவை கண்டபடி இறந்து கிடப்பதையோ அவற்றின் எலும்புக் கூடுகளையோ பார்க்கமுடியாது. இயற்கையாகச் சாகும் யானைகள், சுனைகளுக்கருகிலோ சதுப்பு நிலங்களிலோ இறந்ததைப் பார்த்திருக்கின்றனர். இம்மாதிரி, நீருக்குப் பக்கத்தில் யானையின் எலும்புக் கூடுகளையும் கண்டிருக்கின்றனர். உயிர் விடுவதற்கென இவைகளுக்கு ஒரு இரகசிய இடமுண்டு. அவ்விடத்தைக் காவல் காத்துக் கொண்டும் சில யானைகள் இருக்குமாம். யானைகள் நாட் கணக்கில் தள்ளாடிக்கொண்டேனும் அந்த இரகசிய இடத்திலேயே சென்று உயிர் துறக்கும் என்றும் நிபுணர்கள் கூறுகின்றனர்.

பழக்கப்பட்ட யானைகளுக்கு நோய் வந்தால், மருந்து கொடுக்கவும், ஊசி போடவும், ஆகாரத்தைக் கட்டுப்படுத்தவும் ஒரு யானை மருத்துவரும் இருக்கிறார். நோய்வாய்ப்பட்ட யானைக்கும், குட்டி போட்ட யானைக்கும் அவ்வப்போது தகுந்த ஓய்வும் கொடுப்பதுண்டு.

பீகாரில் ஆண்டில் 4 யானைச் சந்தைகள் கூடும். அப்போது ஆயிரக்கணக்கான யானைகள், மாட்டுச் சந்தையில் மாடுகள் கைமாறுகிற மாதிரி கைமாறும்.

பாம்புக் கடியினால் தான் யானைகள் அதிகமாகச் சாகின்றன. யானைகளுக்குச் சாதாரணமாகச் சுகக்கேடு வருவதில்லை. ஆனால் வயிற்றில் உண்டாகும் (Ginea worm) என்னும் பூச்சியினால் அடிக்கடி சுகக்கேடு அடைவதுண்டு. அதைக் குணப்படுத்தத் தேவையான மூலிகைகளைத் தேடிச் சாப்பிட்டுக் கொள்ளும். ஒரு வகை உப்பு மண்ணைத் தேடிச் சாப்பிட்டு நோயைக் குணமாக்கிக் கொள்வதுண்டு. ஒவ்வொரு யானைக் கூட்டத்துக்கும் ஒரு கொம்பன் தலைவனாக இருந்து நடத்தும்.

கூர்மதியும், கீழ்ப்படிதலும், விலை மதிப்பும் உள்ள யானைகளைப் பேணிப் பாதுகாப்பது நமது கடமையன்றோ!

# இதயம் பேசுகிறது



இதயம் எப்படி இருக்கும்? அது எவ்வாறு இயங்குகிறது?

இப்படி எண்ணச் செய்வதே —இப்படிக் கேட்க வைப்பதே இந்த இதயம்தானே?

இதயம் இயங்கும் தன்மையும், அங்கே நடைபெறும் இரத்த ஓட்டத்தைப்பற்றியும் நாம் பாடப் புத்தகத்தில் நிறையப் படித்திருக்கிறோம்.

ஆனால், இதயம் பற்றிய சில விந்தை மருத்துவச் செய்திகளை மட்டுமே இப்போது தெரிந்து கொள்ளப் போகிறோம்.

**மாரடைப்பும் கதிரியக்கப் படமும்**

மாரடைப்புக்கண்ட நோயாளிகளுக்கு எப்பொழுது உடனே அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும்? எப்பொழுது தாமதிக்கலாம்?

அறுவை மருத்துவர்களுக்கு இதனைக் கூறுகிறது, மாரடைப்பைக் கதிரியக்கம் மூலம் எடுத்த படம். முதன் முதலாக, மாரடைப்புக் கண்டவரின் இதயம் எவ்வளவு சேதம் அடைந்திருக்கிறது என்பதைச் சில நிமிடங்களில் தெரிவித்து விடுகிறது இந்தப் படம்! எப்படி? கதிரியக்கப் பொருள் ஒன்றை, இதயத்தைச் சுற்றி வரும் இரத்தக் குழாய்களுக்குள் ஊசி மூலம் செலுத்துகின்றனர்; நோயுற்ற இதயத்தின் சதை எக்ஸ்ரே ஃபிலிமில் படமாக வரையப்படுகிறது. இந்த எக்ஸ்ரேயிலிருந்து இதயம் எவ்வளவு சேதமடைந்து இருக்கிறது, உடனடியாக அறுவைச் சிகிச்சை தேவையா என்பதை மருத்துவர்கள் முடிவு செய்கின்றனர். இந்த முறையை உருவாக்கியவர் டாக்டர் பால் வி. ஹார்ப்பர் என்ற அமெரிக்கர்.

**இதயமும் அகல் வட்டமும்!**

அம்புலியைச் சுற்றி அகல் வட்டம் ஒன்று இருந்தால் மழை பெய்யும் எனப் பாமர மக்கள் சொல்லக் கேட்டிருக்கிறோம். உங்கள் இதயத்தைச் சுற்றி அப்படியொரு வட்டம் இருந்தால், உங்கள் நுரையீரலில் கசிவு நீர் உள்ளது எனப் பொருள் கொள்ள வேண்டும்.

''நுரையீரல்களில் கசிவு நீர் உள்ள நோயாளிகளின் எக்ஸ்ரே படங்களில், இதயத்தையும் பெரிய குருதிக் குழாயையும் சுற்றி இம்மாதிரி வட்டம் அல்லது கோடு இருப்பதைக் காணலாம். நுரையீரலிலிருந்து இந்தக் கசிவு நீரை அப்புறப்படுத்த இதயமோ குருதிக் குழாயோ மிகக் கடுமையாக இயங்குவதால் இது ஏற்படக்கூடும்'' என்கிறார் கலிஃபோர்னியா பல்கலைக் கழகத்துக் கதிரியக்க இயல் வல்லுநர்.

**இதய நோயைத் தடுக்கும் மரக்கறி உணவு!**

உலகிலே உயிர் குடிக்கும் நோய்களில் இடம் பெற்று வருகிறது இதய நோய்.

இந் நோய் இல்லாத நாடு இல்லை. அளவிலேதான் வேற்றுமை. சில நாடுகளில் இது அவ்வளவு கடுமையாக இல்லை. வேறு சில நாடுகளிலோ கொள்ளை நோய் போல் மிகக் கடுமையாக இருக்கிறது.

ஓர் உருவிலல்ல, பல 'அவதாரங்களில்' வருகிறது இந்த இதய நோய்!

இதயச் சதை இயங்கத் தவறலாம். அல்லது அது நஞ்சினால் கெட்டுப் போகலாம். குருதியோட்டத்தை ஒழுங்குபடுத்தும் அடைப்பிதழ் (வால்வ்) ஒழுகலாம், அல்லது அடைக்க வேண்டிய நேரத்தில் அடைக்கத் தவறி விடலாம்.

நாடித் துடிப்பு சீராக இல்லாமல் போகலாம்; துடிப்பு மிகக் குறைவாகவோ, ஆபத்தான வகையில் மிக அதிகமாகவோ இருக்கலாம்.

மாரடைப்புக்கும், இதய நோய்க்கும் முன்னோடியாக வருவது 'ஆர்ட்டிரியோஸ்லெரோஸிஸ்' என்ற நோயாகும். அது தொழில் வளம் மிகுந்த நாடுகளில்தான் முக்கியமாகக் காணப்படுகிறது. எனவே இது ''பணக்காரர்களுக்கு'' வரும் நோய் என்று கூறுகின்றனர். எப்படி?

இதயக் குருதிக் குழாய்களின் உள் பக்கங்களில் கொழுப்பு, சிறு வயதிலிருந்தே படியத் தொடங்கி வாலிப பருவத்திலோ அல்லது நடுத்தர வயதை எட்டும்போதோ குருதியோட்டத்தைத் தடுக்கும் விதத்தில் குருதிக் குழாய்க்குள்ளே அடைத்துக் கொண்டு

விடுகிறது. எனவே, இதயத்துக்குக் குருதி செல்வது நின்று விடுகிறது; தேவையான ஆக்ஸிஜன் இதயத்துக்குக் கிட்ட வழி இல்லாமல் போகும் போது மாரடைப்பு ஏற்படாமல் இருக்குமா?

'இதய நோய் வராமல் தடுக்க, கொழுப்பு மிக்க உணவுகளைத் தவிர்க்க வேண்டும். எனவே, ஏராளமான அமெரிக்கர்கள் இப்பொழுது மரக்கறி உணவை நாடுகின்றனர்!' என்கிறார் அந் நாட்டு இதய நோய் வல்லுநர் ஒருவர்.

**இதய நோய்க்கு அழைப்பு !**

''சிகரெட் பிடிப்பது ஆபத்துதான்; அது இதய நோய்க்கு அழைப்பு விடுப்பது போல் ஆகும்'' என்கிறார் ஒரு மருத்துவர். அவர் மேலும் சொல்கிறார் :

''உணவுப் பழக்க வழக்கங்கள், அதிகக் குருதி அழுத்தம், வயது, பரம்பரை, உடற்பயிற்சியின்மை முதலியன இதய நோய்க்குக் காரணமாகலாம். 'கொலஸ்டெரோல்' மிக அதிகமாக இருக்கும் உணவைமுக்கியமாகஇறைச்சி, முட்டை, பால் பண்டங்களை அதிகமாக உட்கொள்ளுவதால் கொழுப்பு ஏறுகிறது. உடல் நலன் சம்பந்தமான பழக்க வழக்கங்கள் 12-வது வயதில் படிந்து விடுகின்றன. பின்னர் அவற்றை மாற்றுவது கடினம்''.

இதய நோய் உள்ளவர்களில், ஆண்களை விடப் பெண்களுக்கே அதிகக் குருதி அழுத்தம் உள்ளது என்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

**இதயத்தை மாற்றலாம் !**

தடுப்புச்சிகிச்சை நிலையைத் தாண்டிவிட்ட இதய நோயாளியைக் காப்பாற்ற வழி இருக்கிறதா? இருக்கிறது. அதற்கு அறுவைச் சிகிச்சை கைகொடுக்கிறது. எடுத்துக்காட்டாக, இதயக் குருதிக் குழாய் ஒன்று நோயுற்றிருந்தால் நோயாளியின் காலிலிருந்து ஒரு குருதிக் குழாயை வெட்டி எடுத்து, இதயத்தில் பொருத்தலாம்! நோயுற்ற அடைப்பிதழ்களை (வால்வ்) அகற்றிவிட்டு வேறு வால்வுகளைப் பொருத்தலாம். இதயத் துடிப்பைச் சீராக்க 'பேஸ் மேக்கர்' என்ற கருவி கை கொடுக்கிறது.

இறுதியாக, நோயுற்ற இதயத்தையே அகற்றிவிட்டு வேறு இதயத்தைக் கூடப் பொருத்தலாம்!

> ''மனித இதயம் காலத்தால் அளிக்கப் பெற்ற ஒரு பரிசாகும். அது எல்லா வயதினரையும், எல்லாத் தொழில்களையும் சார்ந்துள்ளது. மேலும் அது இதய நோயால் சாவிற்கு உள்ளாகின்றவர்களைக் குறைக்க நம்பிக்கையுடன் உதவுகிறது''
>
> —மேலை நாட்டு மருத்துவர்
> ஜார்ஜ் உகே என்.ஏ.பி.டி.

**இந்தியாவிலே........**

இந்திய மக்களிலே பாதிப் பேர் ஐந்து வயது முதல் 15 வயது வரை வாத இதய நோயால் அவதிப்படுகின்றனர் என்று அனைத்திந்திய இதய நிலையத் தலைவர் டாக்டர் எஸ். பத்மாவதி கூறுகிறார். இதற்குச் சான்றாக அவர் சொன்னதாவது : 1,000 பள்ளிச் சிறார்களில் 10 முதல் 12 பேருக்கு இந்த நோயிருப்பது அண்மை ஆய்வு ஒன்று காட்டியுள்ளது.

இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் கீழ் இப்பொழுது இவர் வாதக் காய்ச்சலில் பெனிசிலின் விளைவுகளையும், டில்லிப் பள்ளிச் சிறார்களில் எத்தனை பேருக்கு வாத இதய நோய் இருக்கிறது என்பதையும் ஆராய்ந்து வருகிறார்.

**இதய நோயாளிக்கு உடற்பயிற்சி !**

இதய நோயால் பாதிக்கப்பட்டவர்கள், எவ்வித உடல் அசைவுமின்றி படுக்கையிலேயே ஓய்வெடுக்க வேண்டுமென்று நெடுங் காலமாகவே மருத்துவர்கள் கூறி வந்துள்ளனர். ஆனால், இப்பொழுதோ உடற்பயிற்சியின் மூலமாக, இதய நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்க முடியும் என்று நிபுணர்கள் கருதுகின்றனர்.

அசைவற்ற நிலையின் விளைவுகளிலிருந்து, இதயத்தை வலுப்படுத்தும் மருந்துகளை அளிப்பதன் மூலம், இதய நோயாளிகளுக்குச் சிகிச்சை தரும் புதிய முறையொன்று தற்பொழுது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதயத்திற்கு ஏற்பட்டுள்ள சேதம் எவ்வளவு என்பது நிர்ணயிக்கப்பட்ட உடனேயே, அந்த நோயாளிக்குச் சில குறிப்பிட்ட உடற் பயிற்சி பரிந்துரைக்கப்படுகிறது. நோயாளியின் நிலைமை சீராக, சீராக, அவருக்களிக்கப்படும் உடற் பயிற்சியும் சிறிது சிறிதாக அதிகரிக்கப்படுகிறது.

இத்தகைய சிகிச்சை முறைக்கு, நோயாளியின் சிறந்த ஒத்துழைப்பு மிக அவசியம். சிகிச்சையின் வெற்றி, நோயாளியின் ஒத்துழைப்பைப் பொறுத்ததே. நோயாளிக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ள உடற்பயிற்சியைக் குறித்த நேரத்தில் கண்டிப்பாக அவர் செய்து முடிக்க வேண்டும்என்பதுடன், உணவு, புகை பிடித்தல், மது போன்ற தீங்கை விளைவிக்கக் கூடியவைகளை அறவே தவிர்க்கவும் வேண்டும்.

சோவியத் நாட்டில் இந்தச் சிகிச்சையின் மூலம் இதய நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளில் 70 சதவிகிதத்தினர் 4 மாதக் காலத்திற்குள்ளாக முழுக் குணமடைந்து, மீண்டும் தங்களது வேலைக்குத் திரும்பியுள்ளனர்.

இத்தகைய சிகிச்சை மலை உச்சிகளில் அளிக்கப்பட்டால், அதன் மூலமாகக் கிடைக்கும் பலன்கள் மேலும் அதிகரிக்கின்றனவாம். கடல் மட்டத்திற்கு மேல் 3,000 மீட்டர் உயரத்தில் தங்கியிருப்பதே, 'மையோகார்டியல் இன்ஃபார்க்ஷன்' நோயால் பாதிக்கப்பட்ட இதயத் தசையை வலுப்படுத்துவதாகத் தெரிய வந்துள்ளது.

**மின்னணுக் கருவிகளின் உதவி !**

இதயக் கோளாறுகளுக்குச் சிகிச்சை அளிப்பதிலும், நோய் நிர்ணயத்திலும், மின்னணுக் கருவிகள் மிக முக்கியமான பங்காற்றி வருகின்றன. நோயாளிகளின் இதயத் துடிப்பின் லயம், இரத்த அழுத்தம், சுவாசம் பற்றிய விவரங்கள், உடல் வெப்ப நிலை போன்ற முக்கியமான செய்திகளனைத்தையும் மின்னணுக் கருவிகள் இடையறாது கணித்துக்குறித்து கொள்ளுகின்றன. அத்தகைய கருவிகள், நோயாளிகளின் நிலையை வெறுமனே கணிப்பதோடு மட்டும் அமையாமல், ஆபத்தான ஒரு நிலை ஏற்படும் போது, அதனைச் செப்பனிடுவதற்கான மற்றோர் அமைப்பையும் தானாகவே இயக்கவல்லது. மின்னணுக் கருவிகளின் வளர்ச்சியில் இதை ஒரு பெரும் சாதனை என்றே கூறலாம்.

# முதல் செயற்கைக் கோள்



இந்திய விஞ்ஞானிகளும், பொறியாளர்களும் பெங்களூர் நகரில் இந்தியாவின் முதல் செயற்கைக் கோளை உருவாக்குவதில் ஈடுபட்டுள்ளனர். செயற்கைக்கோளை வடிவமைப்பது, கட்டி முடிக்கும் பணி, செயல் திறனை சோதித்து அறிவது ஆகிய அனைத்துப் பணிகளையும் அவர்களே செய்கின்றனர். இந்த ஆண்டு முடிவில் சோவியத் யூனியனிலிருந்து சோவியத் ராக்கெட்டின் உதவியில் இந்தச் செயற்கைக்கோள் விண்வெளியில் செலுத்தப்படும்.

இந்தச் செயற்கைக்கோளை வடிவமைத்துக் கட்டுவதில் நமது விஞ்ஞானிகள் பெறும் அனுபவமானது, மேலும் பெரிய, அதிக நுட்பம் வாய்ந்த செயற்கைக் கோள்களை உருவாக்க உதவும். நீரிலும், நிலத்திலும் உள்ள வளங்களை அறிய உதவும் தகவல் தொடர்பு, வானியல், தொலையுணர்வு முதலான பல பணிகளுக்கும் அந்தச் செயற்கைக்கோள்கள் பயன்படுத்தப்படும்.

நமது முதல் செயற்கைக்கோள் விஞ்ஞான ரீதியில் மூன்று முக்கிய பரிசோதனைகளைச் செய்யவிருக்கிறது. அவை: (1) விண்வெளியின் வெளிப் பரப்பிலிருந்து வரும் ஊடுகதிர்கள் ஆய்வு சம்பந்தப்பட்டது. (2) சூரியன் சம்பந்தமான ஆய்வு. (3) அயன மண்டலத்திலிருந்து பிரதிபலிக்கப்படும் வானொலி அலைகள் சம்பந்தப்பட்ட விவரங்களைத் திரட்ட உதவும் பரிசோதனை.

செயற்கைக்கோள் அமைப்பு மிக நுட்பமான பணியாகும். செயற்கைக் கோளின் ஒவ்வொரு பகுதியையும் திரும்பத் திரும்பச் சோதித்து விண்வெளிக்கு ஏற்றதாக்கவேண்டும். உதாரணமாக, செயற்கைக் கோளின் வெளிச் சுவர் பரப்பு 150 டிகிரி சென்டிகிரேட் முதல் 100 டிகிரி சென்டிகிரேட் வரையான வெப்பநிலை மாற்றங்களுக்கு ஈடு கொடுப்பதாய் இருக்கவேண்டும். ஆனால், செயற்கைக்கோளின் உட்புறத்தில் வெப்பநிலை மாற்றம் எதுவும் இன்றிக் கிட்டத்தட்ட ஒரே அளவில் இருக்க வேண்டும். எனவே, செயற்கைக் கோளின் உட்சுவர் வெப்பத்தைக் கிரகித்து, பிரதிபலிக்கும் திறன் உள்ளதாக அமைக்கப்படுகிறது.

செயற்கைக்கோளின் இயக்கம் சம்பந்தமான கட்டளைகளை இந்திய விஞ்ஞானிகள் வெளியிடுவர். செயற்கைக் கோள் தரும் விவரங்கள் சோவியத் யூனியனிலும், ஆந்திரத்தில் அரிகோட்டாவில் எழும்பி வரும் நமது விண்வெளி நிலையத்திலும் பதிவு செய்யப்படும்.

செயற்கைக்கோளுக்குத் தேவையான நாடா பதிவுச் சாதனங்கள், சூரிய வெப்ப ஆற்றலில் இயங்கும் பாட்டரிகள் முதலான பல கருவிகளையும் சோவியத் யூனியன் நமக்குக் கொடுத்து உதவியுள்ளது.

செயற்கைக்கோளின் எடை சுமார் 300 கிலோ கிராம். இது பூமியைச் சுற்றி 600 கிலோ மீட்டர் வட்ட பாதையில் செல்லும். ஒருமுறை பூமியைச் சுற்றிவர இதற்கு 93 நிமிடங்கள் ஆகும்.

செயற்கைக்கோளுக்கும், தரை நிலையத்துக்கும் இடையேயான தகவல் தொடர்பு அமைப்பு சம்பந்தப்பட்ட சோதனைகளை கெலிகாப்டர் உதவியுடன் வெற்றிகரமாக முடித்துள்ளனர். இயந்திர, மின் அமைப்புகள் சம்பந்தமான சோதனைகள் முடிந்ததும் செயற்கைக் கோள் மாதிரி சோவியத் யூனியனுக்கு அனுப்பப்படும்.

தமிழ்நாட்டின்

# பசுமைப் புரட்சி

**1966-67ல் உற்பத்தி 54 இலட்சம் டன்கள்**

**1972-73ல் உற்பத்தி 72 இலட்சம் டன்கள்**

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியில் நீங்கள் செலுத்தும் முதலீடுகள் உங்கள் நலனுக்காக பெருகுவதுடன் அவை தமிழ்நாட்டின் பசுமை புரட்சிக்கும் உதவுகிறது.

**எங்கள் வங்கி வழங்கிய குறுகிய கால விவசாயக் கடன்:**

(ரூபாய் இலட்சங்களில்)

| | |
|---|---|
| **1966-67ல்** | **2100.87** |
| **1972-73ல்** | **5618.15** |



**தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்**

19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை 600 001

தொலை பேசி எண். 20367. தந்தி. "அர்பாங்க்"

TNSC BANK

குடவாசல்

**ஆர். கனகசபை** — தலைவர்

**சி. கிருட்டிணமூர்த்தி** — உபதலைவர்

**என். எல். ஹெப்லிகர்** — நிர்வாக இயக்குநர்

# செய்திகள் செய்திகள் செய்திகள்

### உடல் ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பு !

உடல் ஊனமுற்றோர் 1606 பேருக்கு வேலை வாய்ப்பு இயக்ககம் வேலை தேடிக் கொடுத்திருக்கிறது. இவர்களில் பார்வையற்றோர் 127 பேர், காது கேளாதோர் 258 பேர், கை, கால்களில் குறைபாடுள்ளவர்கள் 1221 பேர் ஆவர். மார்ச் 16, 17 தேதிகளில் சென்னையில் நடைபெற்ற 'உலக உடல் ஊனமுற்றோர் நாளில்' உடல் ஊனமுற்றோர் கலந்து கொண்ட விளையாட்டுப் போட்டியும் நடைபெற்றது. அவர்கள் உருவாக்கிய பொருள்கள் அடங்கிய பொருட்காட்சி ஒன்றும் நடத்தப் பெற்றது.

அணு ஆராய்ச்சி நிலையங்களுக்குள் ஆபத்தின்றிச் செல்வதற்காக, மேற்கு ஜெர்மனியில் உள்ள கார்ல்ஷ்ரு அணு நிலைய விஞ்ஞானிகள் புதுவகை உடை ஒன்றினை உருவாக்கியிருக்கிறார்கள். 'ஆல்பா ட்வின் லிட் ரேடியேஷன்' உடை என்பது இதன் பெயர். இதனை அணிந்து கொண்டு அணு ஆராய்ச்சி நிலையத்தின் எந்தப் பகுதிக்கும் அச்சமின்றிச் செல்லலாம். இந்த உடையைப் பலமுறை பயன்படுத்திக் கொள்ளலாம்.

ஒரு மணி நேரத்தில் 32,000 கடிதங்களைப் பிரித்து முத்திரை குத்துகின்ற ஓர் இயந்திரத்தை ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசிலுள்ள பீல்பெல்ட் நகரத்தில் அமைத்திருக்கிறார்கள். அஞ்சல் தலைகள் ஒட்டப்படாத கடிதங்களையும், ஒட்டப்படவேண்டிய இடத்தை விடுத்து வேறு பகுதிகளில் அஞ்சல் தலைகள் ஒட்டப்பட்டுள்ள கடிதங்களையும் இந்த இயந்திரம் ஏற்க மறுத்து விடுகிறது! அஞ்சல் உறைக்குள் காகிதம் தவிர வேறு ஏதாவது பொருள் வைக்கப்பட்டிருந்தால் அந்த உறையைக் கிழித்துத் தூள் தூளாக்கி விடுகிறது இந்த இயந்திரம்!

நமது நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மோட்டார் கார் டயர்கள், டியூப்புகள் ஏறக்குறைய 80 வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கடந்த 1971–72ல் மட்டும் இவ்வகையில் ரூபாய் 7 கோடிக்கு விற்பனை ஆகியுள்ளது. இந்த ஆண்டில் (1974) இந்த விற்பனை 10 கோடி ரூபாயாகப் பெருகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### அமெரிக்காவில் காஞ்சிபுரம் !

பத்து இந்திய நகரங்கள் பற்றிய 8 மி. மீ. திரைப் படங்கள், மார்ச் திங்கள் 12-ஆம் நாளன்று நியூயார்க்கில், இந்திய தூதரகத்தில் நடைபெற்ற சிறப்பு விழாவொன்றில் வெளியிடப்பட்டது. அந்த நகரங்கள் வருமாறு: காஞ்சிபுரம், ஜெய்சல்மர் (இரண்டு படங்கள்), ஃபதேபூர் சிக்ரி, சண்டிகர், குவாலியர், பம்பாய், சிம்லா, கோவா, ஜாம்ஷெட்பூர், அகமதாபாத்.

அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் பட்டப் படிப்பு மாணவர்களுக்கு இந்தியக் கலாச்சாரம், நாகரிகம் பற்றி அறிந்து கொள்ள இந்தப் படங்கள் உதவியாக இருக்கும். ஒவ்வொரு படமும் நான்கு முதல் ஐந்து நிமிடங்கள் ஓடும்.

இந்தியாவில், ஓர் ஆண்டில் காணாமற்போகும் குழந்தைகள், கடத்தப்படும் குழந்தைகள் ஆகியவற்றின் எண்ணிக்கை 38,000 ஆகும்.

நமது நாட்டில் தற்போது ஏறக்குறைய 300 கோடி ரூபாய்க்கு மருந்துகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. 1978-79 ஆம் ஆண்டில், ஐந்தாவது திட்டத்தின் இறுதியில் இந்த உற்பத்தி 600 கோடி ரூபாயாகப் பெருகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அரசு நிறுவனமான இந்திய மருந்துகள் மற்றும் மருந்துப் பொருள்கள் லிமிடெட் (ஐ.டி.பி.எல்.) மட்டும், நாட்டின் மொத்த உற்பத்தியில் 20 சதவீதத்தை (120 கோடி ரூபாய் மதிப்புள்ள மருந்துகளை) உற்பத்தி செய்யவிருக்கிறது.

### வயது கூடுகிறது !

நமது நாட்டு மக்களின் சராசரி வயது தற்போது உயர்ந்திருக்கிறது. ஆணுக்குச் சராசரி வயது 50.7 என்றும் பெண்ணுக்குச் சராசரி வயது 49.3 என்றும் குறிப்புகள் தெரிவிக்கின்றன. 1946-ஆம் ஆண்டு, ஆணின் சராசரி வயது 32.45 ஆகவும் பெண்ணின் சராசரி வயது 31.66 ஆகவும் இருந்தது.






ஆதிமூலத்தேவர் தமது சிலட்டூர்ப் பயணத்தை ரத்துச் செய்து விட்டார்!

வீரமணி சிலையானான்!- தன் தந்தை-அன்பிற்கும் பாசத்துக்கும் உகந்த தந்தை பொங்கு மாங்கடலாக உருமாறி, உருக்கொண்டு உருக்காட்டி நிர்த்தாட்சண்யமாகவும் அட்டகாசமாகவும் ஆவேசமாகவும் சிரித்த அந்த நிட்டுரப் புதிர்ச் சிரிப்பின் அலைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விடுகதை போட்டவண்ணம் தன்னுடைய நெஞ்சிலும் நினைவிலும் இன்னமும் எதிரொலித்துக் கொண்டேயிருந்த விந்தையை அவன் இப்போதும் மறக்கவில்லை; எப்போதும் மறக்கவும் மாட்டான்; மறக்கக்கூடிய சிரிப்பன்று அது. ஒரு வேளை, மறக்கக்கூடாதென்றுதான் அப்படிச் சிரித்திருப்பாரோ அப்பா.....?

அந்தி மாலை அந்தம் காட்டி, சந்தம் கூட்டிக் கிளிக்கண்ணி பாடிக் கொண்டிருக்கிறது. மாலையின் மணமும், பாட்டின் நயமும் கூடிவரக் கேட்க வேண்டியதில்லை.

சிலையாக மலைத்துவிட்ட அருமைத் திருக்குமாரனைக் கண்டவுடன் பெரியவரின் தந்தை உள்ளம் நெகிழ்ச்சி அடைந்திருக்க வேண்டும். கீழ் வெளித் திண்ணையில் அமைக்கப்பட்டிருந்த சிமிட்டித் திண்டில் சாய்த்திருந்த அவர், மெல்ல மெல்ல மூச்சைக் கூட்டி மெள்ள மெள்ள எழும்பி உட்கார்ந்தார். குடுமி அவிழ்ந்தது. அவிழ்ந்தவாக்கில்தான் காட்சியளித்துக் கொண்டிருந்தது. அன்புமகனை ஆதரவோடு பார்வையிட்டார் அவர். என்ன நினைத்தாரோ? — குடுமியைக் கோதி முடிந்து கொண்டார். ''தம்பி, வீரமணி!'' என்று பரிவுடன் கூப்பிட்டார்.

அவ்வளவுதான்!

மறுகணம்.

மௌனத் திரை விலகியது.

ஏறிட்டு விழித்தான் வீரமணி. அப்பா தலையை முடிந்து கொண்டு விட்டார்!-பரவாயில்லை! குற்றவாளியான அம்மான் ராமையாத் தேவரைத் திரும்பவும் குற்றவாளியாக்கி விட்டு, உடனே கைக்கு மெய்யாக, அவிழ்ந்த குடுமியும், அவிழாத வெஞ்சினமுமாகத் தன் தந்தை பயங்கரமாகச் சிரித்தபோழ்தில், பாரதப் பாஞ்சாலி, முடிக்காத கூந்தலோடு தருமத்தின் பேரால் சபதம் முழக்கிய கதை அவனது இதயத்தைத் தொட்டுநின்ற காட்சியை இப்போது நினைவு கூர்ந்தான். அப்பாவின் வைரநெஞ்சம் ஊர் அறியாததா? அப்பா அழைத்தாரே! 'அப்பா'' என்றான் வீரமணி. அவன் மௌனம் தற்சமயம் புதிர் ஏதும் போடவில்லை. அதற்கு 'ஏதும்' இல்லையோ?

பாசத்தைச் சந்தித்தது பாசம்.

அச்சந்திப்பில், பூவின் மணம் இருந்தது; விலங்கின் இறுக்கம் இருந்தது.

அப்படியென்றால்.....?

பாசம் ஒரு பூவிலங்குதானே?

தேவர் மார்பைப் பிசைந்து

விட்டார், குலக்கொழுந்தை என்னவோ ஓர் உட்குறிப்புடன் ஊடுருவினர், ''வீரமணி, சத்த முன்னடி நான் உன்னுடைய அம்மான் மேலே குற்றப்பத்திரிகை வாசிச்சேனே. அந்தச் சங்கதி உன்னுடைய மனசான மனசுக்கு ஒப்பலையாங்காட்டியும்?-அதனலேதான், என் பேச்சை மதிக்காதவன்..கணக்கிலே, பிடிச்சு வச்ச மௌனப்பிண்டமாய்க் குந்திக்கிட்டே இருந்தியாக்கும்? ஊம், இப்பவானும் பதில் பேசு!'' என்று ஆணையிடலானர்.

வீரமணி அதிர்ச்சியடையாமல் தப்ப முடியவில்லை. பெற்றவரின் ஆணை அவனை எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணச் செய்து விட்டது. 'அப்பாவோட பாசம் பூவாக மணக்கிறதை விட்டுப்புட்டு, விலங்காக கைவிலங்காக மாறி, என்னைக் கட்டிப்போடப் பார்க்குதா? என்னை என்றல், என் கைகளை மட்டிலுமா? இல்லை, என் மனசையும் சேர்த்துக் கட்டிப் போட முனைஞ்சிருக்குதா? அதனலேதான், தொட்டதுக்கெல்லாம் தூண்டித் துருவித் துளைச்செடுக்கிறரா? எடுத்ததுக்கெல்லாம் சட்டம் போட்டு மாட்டுறரா அப்பா?' பொட்டுப் பொழுதுக்கு அவன் சிந்தனை வசப்பட்டான்; விழித்த சிந்தனையில் தன்மானம் விழித்தது. கால்விரல் மிஞ்சிகள் கொஞ்ச, சதங்கை முத்தங்கள் முத்தமிட்டுக் கெஞ்ச, அன்னமென வந்தாள் அன்னம்; அன்னம் மின்னலென வந்தாள். 'அன்னம்!... அம்மான் மகளே!'- பூஞ்சிரிப்பு; பூச்சிலிர்ப்பு! சுயப்பிரக்ஞை நரம்பு மீட்டியது. அடடே!..அப்பாவுக்கு இம்முறையும் விடை சொல்லாவிட்டால், விசுவாமித்திரராகி விடப் போகிறர், பாவம்!—''அப்பா!'' என்று கண்டாமணிக்குரல் கொடுத்து வைத்தான், முதலில் பேச்சுக்கு அச்சாரம் அது.

''ஊம்; வேதாளம் மறுவாட்டியும் எங்கிட்டு முருங்கை மரத்திலே ஏறிக்கிடிச்சோ அப்படின்னு ரோசிச்சேன். ஊம்; சொல்லு. நான் ஒரே யாபகத்திலேதான் குந்திக்கிட்டிருக்கேன். நட்டமே நிற்காமல், நீயும் குந்திக்கிடுவேன்!''

வீரமணியின் நெஞ்சிலும் நினைவிலும் சற்று முன்னம் அன்னக்கொடி விளையாடிய மர்மம் பெரியவருக்கு எங்ஙனம் தெரிந்ததாம்?

செம்மறி மந்தை 'மேய்ச்சல் பாடு' முடிந்து, பட்டியில் தஞ்சம் அடையத் தயாராகி விட்டது.

அப்பா, மகனை ஊடுருவ, மகன் அப்பாவைத் துழாவ, இதுதான் நல்ல சமயமென்று கணங்கள் சில பேய்க்கணங்களாகி நழுவுகின்றன.

''அப்பா, நாம இப்ப இருக்கிறது வேதாள உலகம் இல்லேங்க-தமிழ் உலகம்! தமிழர் உலகம்! தமிழருக்காக வேண்டி ஆண்டுக்கிட்டு இருக்கிற ஜனநாயக உலகம் இது. ஆகச்சே, இங்கே வேதாளத்துக்கோ, அல்லாட்டி, பட்டிக்கோ, இல்லாட்டி, விக்கிரமாதித்த மகாராசருக்கோ அலுவல் கிடையாது. அதுமட்டுமில்லே. நம்ப வீட்டு முருங்கை மரத்திலே அசல் வேதாளமே நாலுகால் பாய்ச்சலிலே ஓடியாந்து ரெண்டு தரம் இல்லே, இருபதாயிரம் தரம் வேணுமானலும் ஏறிச் சோதிச்சுக்கிடட்டும். நம்ப குடும்பம் மாதிரியே நம்ப முருங்கைப் போத்தும் எதையும் தாங்கவும் தாங்குமுங்க; அத்தோட, எதையும் சமாளிக்கவும் சமாளிக்குமாக்கும்!''

தந்தை மகிழ்வார், சிரிப்பார், பாராட்டுவார் என்பதாக அவன் எதிர்பார்க்கவில்லை.

சரிதான்!

அப்பா தன் வீரத்தையும் விட்டு வைக்க விரும்பவில்லை போலிருக்கிறது! மௌனப் பிண்டமாக வேண்டிய சீட்டு அவர் பெயருக்கு விழுந்தது, இப்பொழுது.

அப்பாவுக்குப் பிள்ளை தப்பாமல் பிறந்தவன் அல்லவா வீரமணி? ஆகவே, அவனுக்கும் நிர்த்தாட்சண்யமாக - அட்டகாசமாக-ஆவேசமாகச் சிரிக்கத் தெரியும். ஆனல், அவனே விநயமான அமைதியோடு சிரித்தான்.

''அப்பா, நடப்புத் தாக்கலுக்கு வாரேன். வாழ்க்கையிலே நடந்தது நல்லதானலும் சரி, கெட்டதானலும் சரி, அதுங்களை மறுதக்கமும் நினைச்சிப் பார்க்கிறதிலேயோ இல்லாட்டி, சொல்லிப் பார்க்கிறதிலேயோ ஏதாச்சும் ஒருவகைப் பலாபலன் ஏற்படாமல் தப்ப நியாயமில்லே. நல்லதானல், அமைதி ஒட்டிக்கு ரெட்டியாகலாம்; கெட்டதானல், சுமை படிக்குப் பாதியாகும்! மனே தத்துவம் சொல்லக்கூடிய ராசிபலன் இது! இந்த விதிக்கு அதாகப்பட்டது, சட்டத்துக்கு நீங்களும் விலக்கு விதியாக அமைய முடியல்லே! ராமையா அம்மானுக்கு-அதாவது ராமையாத் தேவருக்கு நாம பட்டிருக்கிற கடன் விவகாரத்திலே அந்தப் பேர்வழி உங்களை நயவஞ்சகமாய் ஏய்ச்ச சங்கதியை எங்கிட்டே நீங்க ஆயிரம் தபா சொல்லியிருக்கீங்க! பின்னே, நான் மட்டும் அந்த விதிக்கு விதிவிலக்காகவமுங்களா?

வீரமணி மூச்சைத் தொடர்ந்தான், பேச்சைத் தொடர வேண்டியவன் ஆனன்.

''அப்பா, நானும் இப்ப ராமையாத் தேவரைத்தான் தொடப்போறேன். யோகக்காரர். சதா நம்ப வாயிலே அடிபட்டுக்கிட்டு இருக்கார். அது தொலையட்டும். எக்கேடு கெட்டுத் தொலையட்டும். சரி! ஒண்ணு ஒண்ணரை நாழிகைக்கு முன்னரிக்கே ஊர்ப் பொதுக்காரியம் சம்பந்தமாய் ஊராட்சிமன்றத் தலைவர் நம்ப வீட்டிலே கூட்டம் போட்டாங்க. ஒதுங்கி ஒழுங்கைப் புறத்திலேயே கூச்சப்பட்டு நின்ன ராமையாத் தேவரை நீங்க போய் அழைச்சிங்க. ஆடல்லே; அசையல்லே; எல்லைக் கல்லாய் நின்னர். நான்

பறிஞ்சு கூப்பிட நேர்ந்திச்சு. பேசாமல் வந்திட்டார். கூட்ட நாட்டம் முடிஞ்சுது. ஏந்திருச்சுக் கால் பாவினார். போகையிலே, அந்தப் 'புண்ணியவான்' -அதாவது, என்னோட அம்மான்-அதாவது உங்க மச்சான் ஒரு மரியாதை வளமையை அனுசரிச்சாவது, உங்ககிட்டவோ இல்லாட்டி கடைசிப் பட்சம் என்கிட்டேயோ பயணம் சொல்லிக்கிட்டுத்தான் போயிருக்கவேணும். அதுதான் நாகரிகம். ஆனா, அடைச்சவாய் திறக்காமல் கள்ளத்தனமாய் நழுவி விட்டார். அவரோட அமர்த்தலும் ஆணவமும் உங்களுக்கு எரிச்சல் ஊட்டிச்சு. அம்மான்காரர் பேரிலே நீங்க குற்றம் சாட்டினீங்க; வலியக் கொடுத்த மரியாதைக்குப் பதில் மரியாதை கிடைக்கல்லையென்னு ரோசப்பட்டீங்க. நீங்க அம்மான் மேலே சாட்டின குற்றத்துக்கு நான் ஒண்ணும் வாய் திறக்கக் கிடையாது. மௌனம் சாதிச்சேன்! இதுதான் ஒட்டு மொத்தமான நடப்பு. ஆனா, நீங்களோ என்னோட மவுனத்தைக் கண்டு தப்புக் கணக்குப் போட்டுப்புட்டீங்க!

நெற்றி வேர்வையை நெஞ்சிலேயே கொய்தான் இளவட்டம்.

பெரியவர் காட்டம் கொண்டார். ''நான் தப்புக் கணக்குப் போட்டேனா? சே..பொய்! அடி நாளையிலே நீயானும் தப்புக் கணக்குப் போட்டிருக்கே ; நான் திருத்திப் படிச்சிக் கொடுத்திருக்கேன். ஆனா, நானே எங்க அப்பன் போட்ட முந்திரி-மாகாணி கணக்குகளைக் கூட கரெக்ட்டாய்ப் போட்டுக் காட்டியிருக்கேனாக்கும்! என்னைப் போய்த் தப்புக் கணக்குப் போட்டவன்னு பழி சாட்டுறீயேப்பா?''

வீரமணிக்குச் சிரிப்பும் வரவில்லை; சிந்தனையும் வரவில்லை.

''மருகா, உன் மௌனத்துக்கு என்ன அருத்தம்?'' துரும்பைத் தூணாக்கித் துருவினார் தேவர்.

''சம்மதம்னு அர்த்தம். நீங்க ராமையாத் தேவரைக் கிளிக்கூண்டிலே நிறுத்திக் குற்றம் படிச்சது எனக்கும் சம்மதம்னு மௌனத்தின் மூலமாய்ச் சொல்லாமல் சொன்னேனாக்கும்; ஆமாங்க அப்பாரே!'' என்று அடக்கம் காத்துச் சமாதானம் சொன்னான் தேவர் பாலன்.

கூடிவந்த இந்தப் பொன்னான வாய்ப்பினைக் கூட்டிவைத்து, பொன்னான வாயைப் பூப்போல திறந்து பூச்சிரிப்பை உதிர்த்தால் என்ன?-பெரியவரின் வாய்முத்து உதிர்ந்து விடுமா, என்ன ?-சிறுபொழுதைக் கழித்துவிட்டு, மறுபடி பேச்செடுத்தார்.

''நான் உன்னோட அருமை அம்மான்காரனை நியாயத்தோட ஏசினது உன்மனசுக்கும் நியாயம்னு பட்டிருந்தால் பொட்டுக்கட்டின தாட்டம்பட்டுண்ணு, 'ஆமாங்க; நீங்க செப்புறது சரிதான். ராமைத் தேவர் தப்பிலி என்கிறதுதான் நமக்கு வெட்ட வெளிச்சமாச்சுங்களே, அப்பா?' அப்படின்னு வாயைத் திறந்து நீ இணக்கமாய்ப் பேசியிருந்தால், உன்னோட வாய்முத்தா சிந்திப்பூடும்? இல்லே, கேட்கிறேன்! ஊம்; இப்பைக்கு என்னமோ நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினது சாக்காம்! சறுக்குக் கழிக்கிறதுக்கும், சறுக்கினதிலேருந்து தப்பிக்கிறதுக்கும் கதையை ஓட்டுறே! நீ வெறும் நொண்டிக்குதிரை!

மிச்சம் மீதமிருந்த தேவரின் பற்கள் தொடுசு தொங்கல் வைக்காமல் கடிபட்டன.

''அப்பா, நீங்க பொய் பேசுறீங்க!''

வீரமணி கிராப்புத்தலை குலுங்கத் தலையை உயர்த்தி, ரோசம் குலுங்கக் குரலையும் உயர்த்தி, ஆவேசம் தூள் பறக்கப் பேசினான்.

''என்னா சொன்னே? என்னை பார்த்தாடா பொய் பேசுறவன்னு அபாண்டமாய்ப் பழி பாவம் சுமத்தினே?''

''கோடலி' முடிச்சுப் போட்டிருந்த குடுமி அவிழ, கொடி கட்டிப் பறக்கும் கோபத்தோடு எழுந்தார் பெரும் நிலச்சுவான்தார் ஆதிமூலத்தேவர்.

உள்ளுக்குள்ளே சுழித்திட்ட குறும்புத்தனத்தோடு, வெகு மிடுக்காக எதிர்த் திண்ணைத் தூணில் சாய்ந்து கொண்டு உட்கார்ந்திருந்தான் வீரமணி. நெஞ்சிலே வல்லமை பாத்தி கட்டிப் பாய்ந்தது; விழிகளில் வைரம் பச்சைப் பசேலன்ற நெல்மணிக்கதிர்க் கொத்தாகப் பளிச்சிட்டது. ''பின்னே என்னவாம்? என்னைப்பார்த்து, வெள்ளெழுத்துக்காரன் கணக்கிலே நொண்டிக் குதிரைன்னு சொன்னால், அது பொய் இல்லீங்களா, அப்பா? நான் குதிரையும் இல்லே; நொண்டியும் இல்லே! நான் உங்களோட அருமைக் கொடுக்கு இல்லீங்களா? பெற்ற தகப்பனாரான உங்களோட ரோசத்திலே, பிறந்த பிள்ளையான எனக்கு ஒண்ணுக்கு முக்காலே வீசமாச்சும் இருக்காதுங்களா? அம்மான் ராமையாத் தேவர் எனக்கு ஒன்னும் கொம்பு இல்லே! அந்தத் தகிடு தத்தக்கார ஆசாமியோட பொல்லாத்தனத்தைச் சுட்டி நீங்க ஏசினது மெத்தச் சரின்னு ஒப்புக்கொண்டுதான் நான் கம்முன்னு மௌனமாய் இருந்தேனேயொழிய, வேறே ஒண்ணும் கிடையாதுங்க. ஆனா, நீங்க்தான் ஒரு காசுக்குக்கூடப் பெறுமதி இல்லாத ஒரு அற்பச் சங்கதிக்காக இம்மாம் நேரம் ஆடித் தீர்த்துப்புட்டீங்க!

வீரமணி நிதானமாக முடித்தான்.

இடைவெளி வாசலில் வந்து நின்ற பெரியவர் உணர்ச்சி கொப்புளிக்கப் பான்மையோடும் அழகாகவும் முறுவல் காட்டினார். மகனைப் பரிவும் பாசமும் சுரக்க நெஞ்சோடு நெஞ்சாக அணைத்துக் கொண்டார். இமைகள் நனைந்தன. ''தம்பி, இப்பத்தான் எனக்கு நல்ல மூச்சு வருது. என்னமோ ஒரு காரணத்தை உள்நோக்க

## நோட்டுக்குப் பதில் நாணயம்

ஒரு ரூபாய் நோட்டுகளை ஒழித்து விட்டு, அதற்குப் பதில் ஒரு ரூபாய் நாணயங்களை வெளியிட மத்திய அரசு ஆலோசனை செய்து வருகிறது. ஒரு ரூபாய் நோட்டு ஒன்றை அச்சடிக்க ஆகும் செலவு 2 காசு. ஆனால் 6 மாத காலத்தில் இந்த நோட்டுகள் மிகவும் பழசாகி விடுகின்றன. ஒரு நாணயம் தயாரிக்க 28 காசு செலவாகிறது. ஆனால், இது 25 ஆண்டுக் காலத்திற்கு நிலைத்திருக்கும் தன்மை பெற்றது.

மாய் வச்சுக்கிட்டுத்தான் நீ மௌனமாய்க் குந்தியிருந்தி யோன்னு நினைச்சிட்டேன். அம்மானைத் திட்டினது உன் மனசுக்குச் சம்மதமில்லே என் கிறதைக் காண்பிக்கத்தான் நீ அப்படி மௌனப்பிள்ளையா ரட்டம் உட்கார்ந்திருந்தி யோன்னு கருதிட்டேன். உன் அம்மான் பேரிலே மயக்கம் கொண்டாடி, அதன் காரண மாகத்தான் நீ கோழையாக மாறி, அசட்டுத்தனமான மௌனத்தைக் காட்டி, உன் தப்பைப் பூசிமெழுக அகம் பாவத்தோடே அப்படி மௌ னப் பிண்டமாய் நீ சமைஞ்சிட் டியோன்னு நான் எண்ணிக் கிட்டேன்! ஆனா, நான் தப்புக் கணக்குப் போட்டவன் அப் படின்னு மட்டுக்கும் நீ அசந்து மறந்தாச்சும் நினைச்சியோ, அப்பாலே நான் உன்னைச் சும்மா விடவே மாட்டேன்! மறுப்பும் கொடுக்கமாட்டேன். ஏன் தெரியுமா, மகனே-நான் கணக்குப் போடுறதிலே அச காய சூரப்புலியாக்கும்!''

தேவரின் சிரிப்பையும் சுவீ கரித்துக் கொண்டு வட்டியும் முதலுமாகச் சிரித்தான் தேவர் மைந்தன்!

சமையற்காரர் காசி காப்பி யும் கையுமாக வந்தார்.

இப்போது, அப்பாவும் பிள்ளையும் காப்பியும் கையுமாக இருந்தார்கள்.

நல்லகாலம், தந்தைக்கும் தனயனுக்கும் நடுவே சண்டை எதையும் கிளப்பிவிட்டு வேடிக் கை பார்க்கவில்லை காப்பி.

பாசம் என்றால் நாலும்தான் இருக்கும்!

கன்றின் குரல் கனிந்து வரு கிறது.

காசி மறைந்தார் உள்ளே!

பூசாரி பொன்னையாவின் - சுவாமி வரம் கொடுத்தாலும், வரம் கொடுக்காத பூசாரி பொன்னையாவின் அருமந்த புதல்வியாம் ராக்கம்மா என் பாள் கிழக்கே நடந்துகொண் டிருந்தாள். அப்போது, ''என் னடி ராக்கம்மா!'' என்ற பெருங்குரல் கேட்கவே தீயை மிதித்தவளாகத் துணுக்குற்று நின்றாள். குரல் வந்த திசை யைக் கணித்தாள். ''எவண்டா அவன் பகுதிப் பயமவன்?' அடி' பட்டம் போட்டில்ல அழைக் கிறான்?'' என்ற ஆத்திரத்துடன் நின்ற அவள், ஒற்றை வேப்ப மரத் தூரடியை மிதித்திருப் பாள்.

காசி, ஒற்றை மரத்தில் பதுங்கியவாறு, ''தாயே ராக் கம்மா! 'என்னடி ராக்கம் மான்னு' நான் கூப்பிடலே; ரேடியோ கூப்பிட்டுச்சு. சன் னல் வழியே உன்னைக் கண்டதி யும் 'என்னடி ராக்கம்மா' என்கிற அந்த ஒரு பேச் சோடவே அந்தப் பாட்டை நெறிச்சுப்புட்டேன். நீ திரும்பி பார்க்காமல் போம்மா. மல்லுக் கட்டிக்கிட்டு உன்னோட மல் லுக்கு நிற்கிறதுக்குச் சந்தைப் பேட்டையிலே உண்டான ஆள் பேருங்க காத்திருப்பாங்க'' என்று பாடத்தை மனப்பாடம் செய்து ஒப்புவிப்பது மாதிரி ஒப்படைத்துவிட்டு, மீண்டும் உள்ளே ஓடலானார் சமையல் காசி.

ராக்கம்மாவின் நாவற்பழ வதனத்திற்கு வெட்கம் வந்து தொலைத்தது; ''பேத்திக் குட்டியை நையாண்டி பண் ணுட்டி உமக்குப் பொழுது போகாது! ..ம்!'' என்று பொய்க் கோபத்துடன் சிரித்து விட்டு நகர்ந்தாள்.

மஞ்சி விரட்டுப் பூரணி பாயாத பரியந்தம், லாபம் யாருக்கு என்பது தனிப்பிரச் சினை!

ஆதிமூலமும் வீரமணியும் கைகொட்டி நகைத்தனர்!

ஊதா நிற நாட்குறிப்பு ஊதாத பலூனைக் காட்சி யளித்துக் கொண்டிருக்கின்றது.

பேனாவை மூடிவைத்துவிட்டு எழுதிய நாட்குறிப்புகளை மறு முறையும் படித்துப் பார்த்த வீரமணி, பொங்கிப் பூரித்த சிருங்காரப் பண்புடன் பத் தொன்பதாவது தடவையாக மயிலிறகு அடையாளம் காட்டிய பக்கத்தைப் புரட்டி னான். புரட்டிய அவன் மறு இமைப்பில் கண்சொக்கி, மனம் சொக்கி நிற்கலானான்.

ஐலேசா.....!

சொர்க்கவாசல், மணிக் கதவத்தாழ் திறந்து கொண் டது.

தரிசனம் தந்தவள் பரா சக்தியா? அல்லது அன்னக் கொடியேதானா?

உயிருக்கு உயிரளித்து, உணர்வுக்கு உணர்வாகி, உள் ளத்துக்கு உள்ளம் ஈந்து, அழகே அன்பாகவும், பாசமே நேசமாகவும் கூடுவிட்டுக் கூடு பாய்ந்து மண் தொட்டு விண் காட்டி, விண்தொட்டு மண் காட்டி, மகிழ்ந்தும் மகிழ வைத்தும் நெஞ்சுக்கு நீதியாக- சத்தியத்துக்குத் தருமமாகப் பொலிந்தும் பொலிவூட்டியும் விளங்கவல்ல சக்தி அன்னக் கொடி ஒருத்திக்கே சொந்தம். அழகின் உச்சியல்லவா அவள்?

ஏலேலோ!....ஐலேசா!

அந்தக் குறிப்பில் அவனு டைய உயிரோவியம் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தது. அவனும் உயிரோவியமாகி ஆனந்தமாகக் கண்ணீர்க் காணிக்கை வைத் தான். 'அன்னம்!, அம்மான் மகளே அன்னக்கொடி!' அவன் எதையும் தாங்குவான், எதை யும் சமாளிப்பான்! எதிர் நீச்சல் பழகியன்; எதிர் வெய் யில் அவனுக்குக் கால்தூசு!

அவன் வீரமணி!- அன்னக் கொடியின் வீரமணி!

கண்ணீர் மாலை மணக்காதா?

உணர்வுகள் மனம் அறிந்து மணம் உணர்ந்து விழிப்புப் பெற்றிருக்க வேண்டும்.

குறிச்சியில் சாய்ந்திருந்த வன், தலையை நிமிர்த்திக் கொண்டு உட்கார்ந்தான். விடிந்துவிட்டதா? —அவன் பார்வை ஓட்டமாக ஓடியது; ஓடி நின்றது; நின்று சுட்டியது. சுட்டின இடத்தில், எழுதிக் கசக்கி வீசியெறியப்பட்டி ருந்த காகிதக் குப்பை, கூளங் களுக்கு மத்தியில், ரங்கூன் கமலங்களுக்கு மையத்தில் வைரமாக அந்தக் கடிதம் விளங்கியது; நெஞ்சில் எடுத் தான் வீரமணி. நெஞ்சம் விம் மிற்று. கடிதத்தின் நெஞ்சில் இரண்டு சொட்டு முத்துக்கள் சிதறின.

நாட்குறிப்பில் கடிதமும் முடங்கியது.

பொங்கி வந்தது பெருநிலவு.

நட்டநடுவிலே, நிலவின் நிழ

# காதி கிராப்ட் — கதர்—கிராமத் தொழில் பொருள்கள் வாங்குவதற்கு நம்பகமான இடம்

குடும்பத்துக்கு அன்றாடம் தேவைப்படும் பொருள்களிலிருந்து
கலையழகு கொஞ்சும் கைவண்ணப் பொருள்கள் வரை
காதி கிராப்ட்களில் நியாய விலையில் கிடைக்கிறது!
தமிழ் நாடு மற்றும்
பாண்டிச்சேரி மாநிலங்களில்
200 க்கும் மேலான காதி
கிராப்ட்கள் மக்களின்
தேவைகளைப் பூர்த்தி
செய்கின்றன.

















**தமிழ்நாடு கதர்—**
**கிராமத் தொழில் வாரியம்**
குறளகம்
சென்னை—600001

லானான் வீரமணி; நினைவின் நிலவானான் அவன்.

''வயல் வரப்புப் பக்கம் ஒரு நடை போயிட்டு ஓடியாந்திட்றேன்; அப்பத்தான் நடப்புப் பிரிய ஏறும். விடிஞ்சா ஆடி. அதனாலே, கால் மாடு தலை மாடாய்ச் சிதறிக் கிடக்கக் கூடிய நம்ப நிலபலன் சாடாவிலேயும் ஒவ்வொரு வண்டி குப்பைச் செத்தை அடிக்கச் சொல்லியிருந்தேன் நாச்சிக் கிட்டே. ஆடிப்பட்டம் ஊர் நாட்டிலே அமளி துமளிப்படுது. போன காலோடே திரும்பிடுவேன், தம்பி,'' என்று சொல்லிச் சென்ற தேவர், சொன்ன சொல் பிரகாரம் போனகாலுடனேயே திரும்பி விட்டார். ''தம்பி, ஏப்பா இருட்டிலேயே குந்திக்கிட்ருக்கிறே?'' என்று கேட்டபடி, தம் மைந்தனை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்து நிறுத்தினார். குறிச்சியில் உட்கார்ந்திருந்த அவர் திடுக்கிட்டார். ''தம்பி, அழுதியா?' என்று தழுதழுப்புடன் கேட்டார்.

''என்னமோ ஒரு மங்களகரமான விசயத்தைப் பத்தி என் கிட்டே நீங்க பேசப்போறதாகக் கொஞ்சப் பொழுதுக்கு முன்னாலே நீங்க சொல்லலீங்களா? அதைப்பற்றி நினைச்சுப் பார்த்தேன். ஆனந்தக் கண்ணீர் ஏற்றம் இறைச்சாப்போல பாய்ஞ்சிடுச்சுங்க!''

''நல்லவேளை, நான் பிழைத்தேன், வீரமணி!'' என்று சொல்லி ஆறுதல் அடைந்தார் பெரியவர். எடுப்பாகக்கிடந்த ஊதா வண்ண நாட்குறிப்பைக் கண்டு வியப்படைந்தார்.

''இம்மாதிரியான டயரியை நான் ஒரு மூச்சுக்கூட இது மட்டும் காண வாய்க்கலையே, தம்பி?'' என்றார்.

''அப்படீங்களா? அதுக்கென்ன? இப்போதான் பாருங்களேன்; சும்மா பார்க்கப் படாது; படிச்சுப் பாருங்க, அப்பா!'' என்று கூறி டைரியை எடுத்தான் வீரமணி.

அந்த ஊதாநிற நாட்குறிப்பு இப்போது 'ஆறுகரை' ஆதி மூலத்தேவரின் கையில் கனத்தது!






# போர்வை

பரணிநாள் பிறந்தபெருங் கவிஞர், சங்கப்
பதக்கத்தில் கண்பறிக்கும் எண்பத் தைந்து
தரமான முத்துக்கள் பதித்துச் சென்ற
தமிழ்ச்சிற்பி, தழைத்தபெரும் உம்பற் காட்டை
வருவாயாய்த் திருவாய்க்குப் பெற்று வாழ்ந்த
வாகீசர், பாணாற்றுப் படைந டத்தும்
பெரும்பரணர் எழுந்திருந்தார்; வாய்தி றந்து
பேசட்டும் என்றவையோர் காத்தி ருந்தார்.

அடிக்கால்கள் கொடிக்காலில் பின்னக், கூடி
ஆடிவரும் விறலியரைப் பலாப்ப ழங்கள்
தடுக்கிவிடும் தமிழ்ப்பொதினி வேந்தன், பேகன்
தனையின்று பார்த்துவந்தேன்; ஒட்ட கம்போல்
அடுக்குமலை முதுகுகளைக் கடந்து செல்ல
ஆனைதந்தான்; என்மனைவி நடக்கும் போது
நடுக்குமிடை நடுங்காமல் இறுக்கிக் கட்ட
நல்லமணி மேகலையும் அவட்குத் தந்தான்.

ஆறுறுப்புப் பெற்றுவரும் கலிப்பாப் போல
அறுசுவையூண் எமக்களித்தான்; விறலி யர்க்கு
நூறுவகை அணிகொடுத்தான்; ஆடை யென்னும்
நூல்நயத்தைப் பொன்னிழைத்துக் கொடுத்தான்; மேகம்
ஆறுகுளம் ஏரிகடல் நிரப்பு தல்போல்
அனைவர்க்கும் அள்ளியள்ளிக் கொடுத்தான்; வாழைத்
தாறுகளைச் சுமப்பதுபோல், பரிசு தூக்கித்
தள்ளாடிப் பாணரெல்லாம் நடக்கின் றார்கள்.

எட்டுக்காற் பூச்சியைப்போல் நடுவில் நீலம்
இழைத்திருக்கும் பொற்பூவைத் தலையில் சூடித்
தொட்டுப்பார் தொட்டுப்பார் என்றே கண்ணால்
துணைவர்களை விறலியர்கள் அழைக்கின் றார்கள்.
கொட்டைப்பாக் களவுள்ள வைரக் கற்கள்
குயிற்றிவைத்த கணையாழி புலவர்க் கெல்லாம்
தட்டின்றிக் கிடைப்பதனால் தடவிக் கொண்டே
தம்பாட்டை அவர்களெல்லாம் மறக்கின் றார்கள்.

குலுங்குகின்ற விளம்பரப்பூக் காட்டிக், காயே
கொடுக்காத பாதிரிபோல் பலபேர் உள்ளார்.
விளம்பரப்பூ இல்லாமல் பழங்கொ டுக்கும்
வேர்ப்பலா வள்ளலிந்தப் பேகன், மேகம்
முழங்குவதைக் கண்டாடும் மயிலைக் கண்டு
முகஞ்சுருங்கி, நடுங்குவதாய் எண்ணிப், போர்வை
வழங்கியதைக் கண்ணாரக் கண்டேன் என்று
வாயார அவன்புகழைப் பரணர் சொன்னார்.

பெரும்பூதன் எழுந்திருந்தான் அவையில்; சங்கப்
பெரும்புலவர் நடுவிலவன் பூத வாதி.
இரும்புள்ளந் தனைப்பெற்றோன்; பெரியார் போல
ஏன்?என்று கேட்கின்ற கேள்விச் சிங்கம்.
பெரும்பேச்சுப் புலவரெல்லாம் இவனி டுக்கிப்
பிடிக்குள்ளே தவிப்பார்கள்; இன்று சும்மா
இருக்காமல் ஏன்எழுந்தான் பூதன்? என்றே
எல்லாரும் விழித்தார்கள்; பூதன் கேட்டான்:

அரிவாள்போல் அவரைக்காய்க் கூட்டைச் சாமை
அரிசியுடன் அவித்துண்ணும் பாணர்க்(கு) ஆட்டும்
பொரியலுடன் உணவளித்த தாலோ, தூக்கும்
பொற்கிழிகள் புலவர்க்குக் கொடுத்த தாலோ,
பெருமைவரும் என்றுநீர் எண்ணு கின்றீர்?
பெருமையெல்லாம் அச்சோறு நம்வ யிற்றில்
செரிக்கின்ற வரையில்தான்; கொடுத்த செம்பொன்
செலவழிந்தால் பேகனைநாம் நினைப்ப துண்டா?

நாட்டியத்து மயிலுக்கும் குளிரி னாலே
நடுங்குகின்ற மயிலுக்கும் வேறு பாடு
காட்டுக்குள் அறியாத வேந்தன், நாட்டுக்
கடமைகளை எவ்வாறு புரிந்து கொள்வான்?
வேட்டுக்கும் தும்மலுக்கும் வேறு பாடு
விளங்காதா? வெண்டளைகள் விரவு கின்ற
பாட்டெல்லாம் வெண்பாவா? காலங் காட்டு
பவையெல்லாம் இடைநிலையா? பாட்டு வேந்தே!

போர்க்களத்தின் கொடுமைகளை எடுத்துக் காட்டிப்
புவிமன்னர் பகைதீர்க்கும் பரண! பேகன்
கார்க்கூந்தல் கண்ணகியைப் பிரிந்தே வாழும்
கதையுமக்குத் தெரியாதா? முல்லை வேலி
ஊர்ப்பரத்தை உதடுகளின் கொடைக்கு, வள்ளல்
உட்கார்ந்து கிடக்கின்றான்; அந்தப் பேகன்
வேர்ப்புகழை விளாசுகிறீர்; பாட்டுப் போர்வை
விரித்திந்தக் களங்கத்தை மூடு கின்றீர்.

கார்போன்ற கருங்கூந்தல் நடுங்க, ஏக்கக்
கண்ணிரண்டும் புண்ணாகி நடுங்க, வில்லின்
கூர்போன்ற உதட்டுமுனை நடுங்கச், செங்கைக்
கொடிக்காந்தள் போல்நடுங்க, உருட்டி விட்ட
தேர்போலக் கிடக்கின்றாள் மனைவி; அந்தத்
தென்பொதினிப் பொன்மயிலை மூடு தற்குப்
போர்வைகொண்டு போகட்டும் பேகன் என்று
பூதனங்கு முழக்கமிட்டான்; பரணர் போனார்.

கவிஞர்
முருகு சுந்தரம்.



சிறுவர் அரங்கம்

# இதுதான் சென்னை



விலங்குக் காட்சிச் சாலை

இந்தியாவில் உள்ள பெரிய நகரங்களில் நான்காவது இடத்தைப் பெற்றுள்ள சென்னை மாநகர் தென்னகத்தின் கலை, பண்பாடு ஆகியவற்றின் உறைவிடமாக விளங்குவதோடு முக்கியத் தொழில் வணிக நகரமாகவும் விளங்குகிறது. அண்மைக்காலத் தொழில் வளர்ச்சியும், இன்றைய நாகரீக வாழ்க்கை முறையும் ஓரளவுக்கு மாற்றத்தை ஏற்படுத்தி இருந்தாலும், அதனுடைய தனித்தன்மையும் வரலாற்றுச் சிறப்பும் மாறி விடவில்லை. பழமையும் புதுமையும் ஒருவித பொலிவையே தந்துள்ளன. சென்னை நகருக்கு வருவோரின் கவனத்தைக்கவரும் சிறப்புமிகு இடங்கள் பல இங்கே உண்டு.

தமிழக அரசின் அமைச்சரவையும், தலைமைச் செயலகமும் இயங்கி வரும் வரலாற்றுப் புகழ் பெற்ற புனிதர் ஜார்ஜ் கோட்டை யாவரும் அறிந்த ஓர் இடம். இன்றைய சென்னை இக்கோட்டையில் ஆரம்பித்துப் படிப்படியாக வளர்ச்சி அடைந்து அண்மையில் இருந்த திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், இராயப்பேட்டை, எழும்பூர், நுங்கம்பாக்கம், புரசைவாக்கம், பெரம்பூர், அடையாறு, கோடம்பாக்கம், மாம்பலம் போன்ற தொன்மைமிகு சிற்றூர்களை உள்ளடக்கிக்கொண்டு பெரிய நகரமாக மாறிற்று.

கிழக்கிந்தியக் கம்பெனிக்கும், பின்னர் ஆங்கிலேயர் ஆட்சிக்கும் தலைமையிடமாகவும், அரணாகவும் விளங்கிய இக்கோட்டைக்குள் இந்தியாவிலேயே மிகப் பழமையானது என்ற புகழைப் பெற்ற புனித மரியாள் ஆலயம் (St. Mary's Church) இருக்கிறது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல பொருள்கள் இங்கே இருக்கின்றன. இந்தியாவில் ஆங்கிலப் பேரரசை நிறுவிய இராபர்ட் கிளைவ் இந்த ஆலயத்தில்தான் திருமணம் செய்து கொண்டார்.

அரும்பொருட் காட்சிசாலை (Fort. Museum) கோட்டையில் உள்ள மற்றொரு முக்கிய இடமாகும். கிழக்கிந்தியக் கம்பெனியார் காலத்திய பல முக்கிய பொருட்கள் இங்கே வைக்கப்பட்டுள்ளன.

கோட்டைக்குத் தெற்கே மெரினா கடற்கரைக்குப் போகும் வழியில் வட்ட வடிவத்தில் அமைந்துள்ளது, உலகப் போரில் உயிர் துறந்த வீரர்களுக்காக எழுப்பப்பட்டுள்ள நினைவுச் சின்னம்.

அருகில் ஓடும் கூவம் ஆற்றினிடையே அமைந்துள்ளது தீவுத் திடல். தீவுத்திடலின் நடுவில் அண்ணாசாலையில் ஆங்கிலேயர் காலத்தில் மாநிலத்தின் ஆளுநராக இருந்து தமிழர்களின் அன்பைப் பெற்ற சர் தாமஸ் மன்றோ அவர்களின் சிலை குதிரைமேல் கம்பீரமாக வீற்றி



புனித மரியாள் ஆலயம்

ருப்பதை யாவரும் காணலாம்.

கூவம் ஆறு கடலில் கலக்கும் இடத்தில் அதன் தென் கரையில் படகு குழாம், நீச்சல் குளம் ஆகியவை அமைந்துள்ளன. அதனையொட்டித் தமிழ் மக்களால் 'அண்ணா' என்று அன்போடு அழைக்கப்பட்ட முன்னாள் தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா அவர்களின் சதுக்கம் அழகான பூங்காவின் நடுவே அமைந்துள்ளது. சதுக்கத்தில் நாள்தோறும் திரள் திரளாக மக்கள் வந்து அஞ்சலி செலுத்துகின்றனர்.

இங்கிருந்து ஆரம்பித்து சாந்தோம் வரை பரவிக்கிடக்கும் மெரினா கடற்கரை சென்னை



யின் பெருமைகளில் ஒன்று. இது உலகிலேயே இரண்டாவது பெரிய கடற்கரை. மீன் காட்சிசாலையும், மெரினா கடற்கரையின் மேற்குப்பக்கம் வடக்கு தெற்காக அமைந்துள்ள பூங்காவும் அழகுக்கு அழகு சேர்ப்பவை. மெரினாவிற்கு எதிர்ப்பக்கம் ஆங்கிலேயர் காலத்திய கட்டடங்கள் பலவும், புதிய கட்டடங்களும், வரிசையாக கம்பீரமாகக் காட்சியளிக்கின்றன. சென்னைப் பல்கலைக் கழகக் கட்டடங்கள், கர்நாடக நவாப் அரண்மனை, கல்லூரிகள், எழிலகம், வானொலி நிலையம் இங்கே அமைந்துள்ள அழகுமிகு கட்டடங்களாகும்.

சென்னையில் 1968-ஆம் ஆண்டு நடந்த இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் போது தமிழ்த் தொண்டாற்றிய மூதறிஞர்களாகிய இராபர்ட் கால்டுவெல், கவிச்சக்கரவர்த்தி கம்பர், கவிஞர் பாரதியார், கண்ணகி, திருவள்ளுவர், ஜி.யு. போப், கவிஞர் பாரதிதாசன், ஔவையார், வீரமாமுனிவர் ஆகியோர்களுக்கு எழுப்பப்பட்ட சிலைகளையும் அதற்குமுன் அமைக்கப்பட்ட உழைப்பின் சின்னத்தையும், காந்தியடிகள் சிலையையும் மெரினா கடற்கரையில் வரிசையாகக் காணலாம்.

எழிலகத்திலும், நவாப் அரண்மனையிலும் பல அரசு அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. அரண்மனைக்குப் பின்புறம் கிரிக்கெட் மைதானம் உள்ளது.

பல்லவர்களால் கட்டப்பட்டு, அவ்வப்போது விசயநகர மன்னர்களாலும் மற்றவர்களாலும் புதுப்பிக்கப்பட்ட பார்த்த



பொதுப்பணித் துறையைச் சார்ந்த நீச்சற் குளம்

சாரதி கோயில் திருவல்லிக்கேணியில் உள்ளது. திராவிடக் கோயிற் கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் கவின்மிகு கபாலீச்வரர் கோயில் மயிலாப்பூரில் அமைந்துள்ளது. பாரிமுனைக்கும் சென்ட்ரல் இரயில் நிலையத்திற்கும் அமைந்துள்ளது கந்த கோட்டம் என்று அழைக்கப்படும் கந்தசுவாமிக் கோயில்.

சாந்தோமில் உள்ள புனிதர் தோமாசு ஆலயம் கோதிக் (Gothic) கட்டடக்கலை முறையில் 1896-ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. இங்கே தான் இந்தியாவில் முதன்முதலில் கிருத்துவ மதத்தைப் பரப்ப வந்த ஏசுகிருத்துவின் சீடர்களில் ஒருவராம் புனிதர் தோமாசின் (St. Thomas) உடல் அடக்கம் செய்யப்பட்டுள்ளதாம். இங்கே அடக்கம் செய்யப்பட்ட புனிதர் தோமாசு பரங்கிமலையில் உயிர் நீத்தபோது அவர் உடம்பில் இருந்து சிதறிய இரத்தம் பட்ட சிலுவை இந்த மலைமேல் உள்ள கிருத்துவ ஆலயத்தில் உள்ளதாம். சைதாப்பேட்டையில் இருந்து பரங்கிமலை செல்லும் வழியில் அடையாற்றின் குறுக்கே 1726-ஆம் ஆண்டு



உழைப்பாளர் சிலை



கிண்டியிலுள்ள காந்தி மண்டபம்

கட்டப்பட்ட 'மர்மலாங்' பாலம் இருந்த இடத்தில் இன்று இந்தியாவில் உள்ள மிக அகலமான பாலங்களில் ஒன்றாகப் புதிய பாலம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. அதன் பெயர் தான் மறைமலையடிகள் பாலம்.

சாந்தோமிற்குத் தெற்கே அடையாற்றின் கரையில் அமைந்துள்ள தியசாபிகல் சங்கம் (Theosophical Society) இந்திய சுதந்தரப் போராட்டத்தில் தீவிரப் பங்குகொண்ட ஆங்கிலேயப் பெண்மணியான டாக்டர் அன்னிபெசண்ட் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. சுமார் 40,000 சதுர அடிக்குமேல் நிழல் பரப்பி நிற்கும் இங்குள்ள ஆலமரம் நமது நாட்டில் உள்ள மிகப் பெரிய மரங்களில் ஒன்று. கடந்த முப்பது ஆண்டுக்காலமாகத் திருமதி ருக்மணி அருண்டேல் என்பவரின் தலைமையில் நடனம், இசை ஆகிய நுண்கலைகளின் வளர்ச்சியில் தனிக் கவனம் செலுத்திவரும் 'கலாட்சேத்திரம்' சென்னைக்கு அண்மையில் உள்ள திருவான்மியூரில் இயற்கையான சூழலில் அமைந்து பணியாற்றி வருகிறது.

அடையாற்றில் இருந்து அண்ணாசாலை சென்றடையும் சாலையின் தென்புறம் கிண்டியில் பெரிய தோட்டத்தின் ஒரு பகுதியில் ஆளுநர் மாளிகையும் மற்றொரு பகுதியில் மான்கள் சரணாலயமும் உள்ளன. இங்கே தான்பாம்புகள் காட்சிசாலை, சிறுவர் பூங்கா, காந்தியடிகள் நினைவுச்சின்னம் ஆகியவையும் உள்ளன. கிண்டி இரயில் நிலையத்திற்குக் கிழக்கே குதிரைப் பந்தய மைதானமும், எதிர்த்தாற்போல் கிண்டி தொழிற்பேட்டையும் அமைந்துள்ளன. அண்ணா சாலை சென்னை நகரின் மிக நீண்ட முக்கிய போக்குவரத்துச்சாலை ஆகும். சைதாப்பேட்டையில் அண்ணாசாலைக்குக் கிழக்கே அமைந்துள்ளது, ஆசியாவிலேயே தொன்மையான ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி. இன்னும் வடக்கு நோக்கிச் சென்றால் தேனாம்பேட்டையில் 'காமதேனு சூப்பர் மார்க்கெட்' அமைந்துள்ளது.

ஓவியங்கள், கைவினைப் பொருள் விற்கும் விக்டோரியா



எல். ஐ. சி. கட்டடம்

நிறுவனம், கைவினைப் பொருள்கள் வளர்ச்சிக் கழகத்தின் பூம்புகார் அங்காடி, காதி கிராமோதியக் பவன், சென்னையிலேயே மிக உயரமான ஆயுள் இன்ஷியூரன்ஸ் கழகக் கட்டடம், முதல் தரமான திரையரங்குகள் ஆகியவையும் அண்ணாசாலையில்தான் உள்ளன. முதல் தரமான ஓட்டல்கள் பலவும் அண்ணாசாலையை ஒட்டியே அமைந்துள்ளன. இவை தவிர பலவிதமான கைப்பொருள்கள் அங்காடிகள் பல அமைந்த அண்ணாசாலையில், கண்கூச்சமற்ற ஒளிதரும் சாலையோர விளக்குகள் நகரின் அழகுக்கு அணி சேர்த்து விளங்குகின்றன.

இராசாசி மண்டபம் என்று சொல்லப்படும் ஆங்கிலேயர் காலத்திய பெரிய மண்டபம் உள்ள அரசினர் தோட்டம், கூவம் ஆற்றை யொட்டி அண்ணா சாலையோரம் இருக்கிறது. முன்பு ஆளுநர் மாளிகையாக விளங்கிய கட்டடங்களும் இத்தோட்டத்தில் உள்ளன. இத்தோட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்குவதற்கென்று கட்டப்பட்ட பலமாடிக் கட்டடமும், கலைவாணர் அரங்கமும் அமைந்துள்ளன. டெலிவிஷன் நிலையம் ஒன்று இத்தோட்டத்தினுள் கட்டப்பட்டு வருகின்றது.

அண்ணாசாலையைக் கடந்து சென்றால் எல்லாவகையான அங்காடிகளும், தொழில் மற்றும் வணிக நிலையங்களும் இருக்கும் பாரிமுனையை அடையலாம். உயர்நீதி மன்றம், சட்டக்கல்லூரி, விரைவு உந்து



அண்ணா சாலையில் உள்ள
அண்ணா சிலை

வண்டி நிலையம் ஆகியவை பாரிமுனையில் இருக்கின்றன.

பூக்கடைகள், பழக்கடைகள், வெளியூர் செல்லும் சாதாரண உந்து வண்டி நிலையமான 'பிராட்வே' உந்து வண்டி நிலையத்தை ஒட்டினாற் போல் அமைந்துள்ளன. சற்று வடக்கே உள்ளது காய்கறிகள் மொத்த வியாபார நிலையமான புகழ் பெற்ற கொத்தவால் சாவடி. பாரிமுனையில் ஆரம்பமாகும் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலை இருமருங்கிலும் இவை யாவும் இருக்கின்றன. இந்தச் சாலையில் இருந்து பிரியும் மாலை அங்காடிச் சாலையில் கைத்தறிச் துணிகளுக்குப் பெயர் பெற்ற 'கைத்தறி இல்லம்', பாய்க் கடைகள் இருக்கின்றன.

அதைத் தாண்டி சென்னை மருத்துவக் கல்லூரி, அரசினர் பொது மருத்துவமனை இரண்டுமே நூற்றாண்டுகளுக்குமேல் ஆனவை—புகழ் பெற்றவை—மிகப் பெரியவை. இம்மருத்துவமனைக்கு எதிர்த்தாற்போல் இருப்பது சென்ட்ரல் இரயில் நிலையம். இங்கிருந்து இந்தியாவின் முக்கிய நகரங்களுக்கும் இரயில் மூலம் செல்லலாம். அதற்கு மேற்கில் எல்லாவகையான பொருள்களும் விற்கும் மூர் அங்காடி, மாநகராட்சித் தலைமை அலுவலகத்தைக் கொண்ட ரிப்பன் கட்டடம், அதன் பின்புறம் நேரு விளையாட்டு அரங்கம், மைலேடீஸ் பூங்கா, மிருகக்காட்சிச்சாலை ஆகியவை இருக்கின்றன.

ரிப்பன் கட்டடத்திற்கு மேற்கே பூவிருந்தவல்லி நெடுஞ் சாலையில் அரசினர் ஓவியக் கல்லூரியும், அதற்கு அண்மையில் எழும்பூர் இரயில் நிலையமும் உள்ளது. அரும்பொருட் காட்சிசாலை, தேசிய ஓவியக் கூடம், கன்னிமாரா பொது நூல் நிலையம் யாவும் எழும்பூரில் பாந்தியன் சாலையில் உள்ளன.

பெரம்பூரில் மிகப் பெரிய இரயில் பெட்டித் தொழிற்



அரசினர் தோட்டத்தில உள்ள இராஜாஜி மண்டபம்


கடற்கரையில்
காட்சி தரும்
சான்றோர்
சிலைகள்
திருவள்ளுவர்
ஔவையார்
கண்ணகி
பாரதியார்
போப்
பாரதிதாசன்



கம்பர்



இளங்கோவடிகள்



வ. உ. சிதம்பரனார்





வீரமாமுனிவர்



காந்தியடிகள்



எழும்பூர் தேசிய கலைக்கூடம்

சாலை, நகரின் மேற்கே அம்பத்தூரில் தொழிற்பேட்டை, வடக்கே எண்ணூர், மணலி, தெற்கே வண்டலூர் ஆகிய இடங்களில் பல பெரிய தொழிற்சாலைகள் தமிழ்நாட்டின் தொழில்துறை முன்னேற்றத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. நகரைச் சுற்றி சாஸ்திரி நகர், இந்திரா நகர், அசோக்நகர், அறிஞர் அண்ணா நகர், கலைஞர் கருணாநிதி நகர் எனப் பல புதிய குடியிருப்புகள் தோன்றியுள்ளன.

சென்னைக்குத் தெற்கே மீனம்பாக்கம் என்ற இடத்தில் விமான நிலையமும், பாரி முனைக்கு வடக்கே துறைமுகமும் அமைந்துள்ளன.

சென்னைக்குத் தெற்கில் சுமார் 60 கி.மீ. தொலைவில் பல்லவர் காலச் சிற்பங்களால் பெயர் பெற்ற மாமல்லையும், தென்மேற்கில் 72 கி.மீ. தொலைவில் பட்டுச்சேலைக்குப் பெயர் பெற்றதும், முற்காலத்தில் பல மதங்கள் வளர்ச்சிக்கும் கல்வி கேள்விகளில் சிறந்தும் விளங்கிப் பின்னர் பல்லவ மன்னர்கள் தலைநகரமாக விளங்கியதுமான இன்றைய செங்கற்பட்டு மாவட்டத் தலைநகர் காஞ்சிபுரம் உள்ளது. இங்குள்ள கோயில்கள் மிகவும் கலையழகு வாய்ந்தவை.

சுதந்தரத்துக்குப் பின் ஏற்பட்ட தொழில் வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி காரணமாக வேகமான மாறுதலுக்குச் சென்னை மாநகர் இலக்கானாலும், அதனுடைய பாரம்பரியமும் தனித் தன்மையும் மாறவில்லை. இந்த இரு பண்புகளும் சென்னை நகரின் சிறப்பிற்கு முக்கிய காரணங்களாகும்.

அண்ணா சதுக்கம்



# சிறுவரைச் சீர்திருத்தும் செங்கைப் பள்ளி




"வெளிநாட்டுப் பயணிகளிடம் திருட்டு!

மூன்று சிறுவர்கள் கைது!"

இந்தத் தலைப்பில் கீழ்க் காணும் ஒரு செய்தியைச் சில பத்திரிகைகள் வெளியிட்டிருந்தன:

"ஈரானிலிருந்து சென்னைத் துறைமுகத்தில் வந்திறங்கிய ஒரு வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணியிடமிருந்து ரூ. 1,500 மதிப்புள்ள டேப் ரிக்கார்டர் அடங்கிய டிரான்சிஸ்டர் ரேடியோவையும், பெங்களூரிலிருந்து வந்த ஒரு சுற்றுலாப் பயணியின் காரிலிருந்து ரூ. 1,000 மதிப்புள்ள காமிரா ஒன்றையும் திருடியதாக மூன்று சிறுவர்களைப் போலீசார் கைது செய்தனர். அந்த மூன்று சிறுவர்களையும் செங்கற்பட்டு சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் 5 ஆண்டுக் காலம் காவலில் வைக்குமாறு எழும்பூர் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்".

இந்தச் செய்தியைப் படிக்கும்போது நம் நெஞ்சம் வேதனையால் விம்முகிறது.

சின்னஞ் சிறிய வயதில் — கள்ளமில்லா வெள்ளை உள்ளத்தில் கடும் நஞ்சு வந்ததெப்படி?

கல்வி, அறிவு, ஒழுக்கங்களில் சிறந்து விளங்க வேண்டிய பருவத்தில் அழிவுப் பாதைக்கு அழைத்துச் செல்வது எது?

நம் சிந்தனை வேகமாய்ச் சுழல்கிறது!

தூய்மையான காற்றானது போக்குவரத்து வாகனங்களின் புகையினால்கெடுவதைப்போல, இவர்களும் ஒழுக்கமற்ற சிலரது சேர்க்கையினால் கெடுகிறார்கள் என்று சொல்லலாம்.

சந்தர்ப்பமும், சூழ்நிலையும் ஒருவனைத் தீயவனாக்குகிறது என்றாலும், அதிலிருந்து தப்பித்துக் கொள்வதுதானே புத்திசாலித்தனம்?

'இப்படித்தான் வாழ வேண்டும்' என்று வாழ்க்கையை வரையறை செய்து கொள்வதுதான் வளமுள்ள வருங்காலத்துக்கு அடித்தளமாகும்.

'எப்படியும் வாழலாம்' என்றால் எதிர்கால வாழ்க்கை மட்டுமல்ல, நிகழ்கால வாழ்க்கையே நீடிக்காதே!

இந்தப் பெரிய கருத்து சிறிய மனத்தில் உதயமாகவோ அல்லது உருவாகவோ முடியாதுதான். ஆனால், பெற்றோர்கள், ஆசிரியர்கள், மற்றவர்கள் இம் மூவகையினரில் எவரேனும் ஒருவர் அவனைத் திருந்தச் செய்யலாம்—திருந்திய வாழ்க்கைக்கு வழிகாட்டலாம் . . . .

இப்படியெல்லாம் சிந்திக்கும்போதுதான் 'குழந்தை வளர்ப்பு' எத்தனை பொறுப்பானது, முக்கியமானது, வாழ்க்கைப் பிரச்சினைக்குரியது என்பது புலப்படுகிறது.

ஆகவே, சுற்றி வளைத்து நாம் வருவது பெற்றோரிடமே! பெற்றோர் பிள்ளையைப் பேணி வளர்ப்பதைப் பொறுத்தே அவன் வாழ்க்கை அமைகிறது என்று நாம் தீர்ப்புக் கூறலாம் அல்லவா?

பெற்றோர்க்கு அடங்காத பிள்ளை, உற்றார்க்கு உதவாத பிள்ளை, ஊருக்கு உபத்திரவம் தந்த பிள்ளை—இப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் தஞ்சம் தந்து அவர்கள் 'நெஞ்சுக்கே நீதி' சொல்வதுதான் செங்கற்பட்டிலுள்ள அரசினர் முதுநிலை சீர்திருத்தப் பள்ளி!

சூழ்நிலை, வறுமை, தீய சக்திகளின் தூண்டுதல் போன்றவைகளால் மனநிலை கெட்டு, நடத்தையில் நெறி பிறழ்ந்து பாதிக்கப்பட்ட பிள்ளைகள், பிழை பல இழைத்துச் சட்டத்தின் பிடிக்குள் சிக்குண்டு நீதிமன்றங்கள் மூலம் இந்தச் சீர்திருத்தப் பள்ளிக்குக் கொண்டு வரப்பட்டுச் சீர்திருத்தப்படுகிறார்கள்—சீர்திருந்துகிறார்கள்.

தமிழ்நாடு அரசு உள்துறை நிருவாகத்தின் கீழ் மிகச் சிறப்பாக இயங்கி வரும் இந்த 'அரசினர் முதுநிலை சீர்திருத்தப்பள்ளி' தான் (Government Approved Senior School) இந்தியாவிலேயே பழமையானது; முதன்மையானது என்பதைப் பெருமையோடு சொல்லவேண்டும்.

இது பாதுகாப்பு, சிறை வாழ்வு மற்றும் மறு வாழ்வு



போன்றவைகளுக்காகக் கடந்த 85 ஆண்டுகளாக நற்பணியாற்றி வருகிறது. இதுபோன்ற பள்ளி ஒன்று திருநெல்வேலியிலுள்ள தட்டப்பாறையில் உள்ளது. இளநிலை சீர்திருத்தப்பள்ளிகள் ராணிப்பேட்டையிலும், தஞ்சையிலும் உள்ளன. பெண்களுக்கான சீர்திருத்தப் பள்ளி ஒன்று சென்னையில் இருக்கிறது. இவை தவிரப் பிற்காப்பு இல்லங்கள் இரண்டு செயல்பட்டு வருகின்றன; அவை வேலூரில் பெண்களுக்காகவும், செங்கற்பட்டில் ஆண்களுக்காகவும் இயங்குகின்றன.

முதலில் இந்தப் பள்ளிக்கு அனுப்பப்படும் சிறுவன் 21 நாள் தனியாக வைக்கப்படுகிறான். அப்போது அவனுக்குத் தடுப்பு ஊசியும் உடல்நிலைப் பரிசோதனையும் நடக்கின்றது. இதனால் மற்றப் பிள்ளைகளுக்கு நோய் வராமல் தடுக்க இது உதவுகிறது.

பிறகு அந்தச் சிறுவனுக்கு எந்தத் தொழிலில் விருப்பம் என்பதை அறிந்து, அதற்கேற்ப அவனுக்குக் கல்வியோடு கைத் தொழிலும் கற்பிக்கப்படுகின்றது.

முதல் வகுப்பிலிருந்து பள்ளி இறுதி வகுப்பு வரை இங்குக் கல்வி கற்பிக்கப்படுகிறது. 1 முதல் 5-வது வகுப்பு வரையில் படிக்கின்ற சிறுவர்களுக்கு மூன்று மணி நேரம் மதச் சார்பற்ற படிப்பினைகளை வழங்குவதும், மற்ற மூன்று மணி நேரங்களில் கைத் தொழில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இது வழக்கமாக நிலை மாற்றங்களுடன் (Shift) நடைபெறுகிறது. தாம் நன்றாகப் படிப்பதாக உறுதிமொழி அளிக்கும் சில சிறுவர்கள், உயர் கல்விக்காக உயர்நிலைப் பள்ளிக்கு அனுப்பப்படுகின்றனர். இப் பள்ளியில் மூன்று பட்டதாரி ஆசிரியர்களும், ஒரு முதல் நிலைத்தமிழாசிரியரும் பணி புரிகின்றனர்.

காலை வழிபாட்டுச் சொற்பொழிவுகள் அலுவலகப் பணியாளரால் நடத்தப் பெறுகின்றன. கண்காணிப்பாளராலும், உதவிக் கண்காணிப்பாளராலும் எல்லா வகுப்புகளிலும் நீதிமுறைப் பாடங்கள் நடத்தப்பெற்று வருகின்றன.

எண்ணும் எழுத்தும் தவிர இலக்கியம், அறிவியல், வரலாறு, நிலநூல் ஆகியவையும் கற்பிக்கப்படுகின்றன. எல்லா மாணவர்களுக்கும் சீருடை உண்டு. புத்தகம், உடை, உணவு முதலான இலவச வசதிகள் அனைவர்க்கும் உண்டு.

இப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்குத் தொழிற் கல்வியும் போதிக்கப்படுகிறது. தச்சு, தையல், நெசவு, பாய் நெசவு, கருமான் பட்டரைத் தொழில், உலோக வேலை, கொல்லத்து வேலை, இசைக் கருவிகளில் பயிற்சி, தோட்ட வேலை, மாட்டுப் பண்ணை, செங்கல் செய்தல், முடி திருத்தல் முதலியவை கற்பிக்கப்படுகின்றன.

22—8—73 கணக்குப்படி இங்கு 701 சிறுவர்களும், 9 சங்கச் சிறுவர்களும் (Club Boys) உள்ளனர்.

இங்கு பயிலும் எல்லா மாணவர்களுக்கும் வயதின் அடிப்படையில் (Age Group) உதவித் தொகை வழங்கப்படுகின்றது. மாணவர்கள் தங்களுக்குத் தேவையானவற்றைத் தாமே செய்து கொள்கின்றனர். உதாரணமாக, தையல் வகுப்பின் போது இங்குள்ள மாணவர்களுக்காக மாணவர்களே சட்டை தைக்கின்றனர். தையல் தேர்வில் பல மாணவர்கள் தேர்ச்சி பெற்று வருகின்றனர். இதேபோல உலோக வேலைப் பயிற்சியில் தட்டு, தம்ளர் முதலானசாமான்களைச் செய்து சிலவற்றைத் தாமே பயன்படுத்திக் கொள்கின்றனர். இவையன்றிச் சித்திர வேலைப்பாடுள்ள அழகிய தட்டுகள், அலுமினியம், இரும்புச்சாமான்கள் முதலியன இவர்கள் கைவண்ணத்தால் உருவாகின்றன. இவர்கள் செய்யும் நாற்காலிகள் முதலான மரச்சாமான்களுக்கும், இவர்கள் உருவாக்கும் வேட்டி, போர்வை, டவல் முதலானவற்றுக்கும் வெளியிடங்களில் நல்ல ஆதரவு இருந்து வருகிறது. இதனால் நல்ல வருவாயும் கிடைக்கிறது.

இவர்களுடைய சிந்தனையெல்லாம் நல்ல நோக்கத்துடனேயே இருக்கத் தக்க வகை



யில் 'சிந்தனைச் சுடர்' என்ற கையெழுத்துப் பத்திரிகை இம் மாணவர்களால் நடத்தப்படு கிறது. இந்த இதழில் மாண வர்கள் எழுதும் கதை, கட்டுரை, கவிதைகள் முதலியன இடம் பெறுகின்றன. இவையன்றிச் சொல்லாற்றலில் சிறந்து விளங் கும் வண்ணம், பிள்ளைப் பருவத் திலேயே இவர்களுக்கு மேடைப் பேச்சிலும் பயிற்சி தரப்படு கிறது. 'சித்திரமும் கைப் பழக்கம் செந்தமிழும் நாப் பழக்கம்' என்பதற்கிணங்க இவர்களுக்குச் செந்தமிழோடு சித்திரக்கலையிலும் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் மாணவர்கள் நெசவு, தையல், விவசாயம், சித்திரம் போன்ற அரசின ரால் நடத்தப்படும் தேர்வு களுக்கு அனுப்பப்படுகின்ற னர். இங்கு பயின்ற பல மாண வர்கள் இன்று வெளியிடங் களில் ஓவிய ஆசிரியராகப் பணியாற்றி வருகின்றனராம். சாரணர், என்.சி.சி., இசைக் கருவிகள் ஆகியவற்றில் இவர் கள் பயிற்சி பெற்று வருகின்ற னர். பள்ளி இசைக்குழுவினர் உள்ளூரிலும், வெளியூரிலும் நடக்கும் பல்வேறு நிகழ்ச்சி களுக்கு அனுப்பி வைக்கப்படு கின்றனர்.

குற்றம் புரிந்த சிறுவர்களா யிற்றே அதனால் இவர்களுக்குத் தண்டனை ஏதேனும் வழங்கப் படுகிறதா?

''சிலர் நினைப்பதுபோல் அடித்தல் போன்ற தண்டனை இங்கே இல்லை. காலை முதல் இரவு வரை அவர்கள் கண் காணிக்கப்படுகின்றனர். அவர் களை நல்வழிப்படுத்தும் நோக் கமே இப்பள்ளியின் தலையாய கடமைகளுள் ஒன்று'' என் கிறார் இப்பள்ளியின் கண் காணிப்பாளர்.

நாள்தோறும் இவர்களுக்கு நல்ல சத்துள்ள உணவு வழங் கப்படுகிறது. கைக்குத்தல் அரிசி உணவோடு நாள்தோறும் கீரையும், வாரத்தில் இருமுறை இறைச்சியும் இவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இவை யன்றி வாழைப்பழமும் கடலை உருண்டையும் தரப்படுகின் றன.

சேமிப்பு ஒரு சிறந்த பழக் கம் என்பதை உணர்த்தவும், வளமான வருங்கால வாழ்க் கைக்கு அது பெரிதும் உதவும் என்பதை எடுத்துக் காட்டவும், இதனை மாணவர்கள் வாழ்க்கை




யில் கடைப்பிடிக்கவும் 'சேமிப்பு வங்கி' ஒன்று இங்கே சிறப்பாகச் செயல்பட்டு வரு கிறது.

வாரத்துக்கு மூன்று நாள் மாணவர்களால் நடத்தப்படும் பஞ்சாயத்தை இங்கே பார்க்க லாம். மாணவர்களின் உழைப் பால் உருவான ஆறு தோட் டங்கள் அழகாய்க் காட்சி யளிக்கின்றன.

''நன்றிக்கு வித்தாகும்
நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.''

என்ற வள்ளுவர் வாக்கிற் கிணங்க, ஒழுக்கப் பயிற்சி இப் பள்ளியில் பயிலும் மாணவர் களுக்குச் சீரிய முறையிலே அளிக்கப்படுகிறது. இதற்கு நிலைக்கலனாக அமைந்துள்ள உளநூல் வல்லுநரும், ஒழுக்கப் பயிற்சி உதவிக் கண்காணிப் பாளரும், எல்லாவற்றுக்கும் ஆன்ற உழைப்பு நல்கும் பணி யாளர்களும் இவ்வரும் பணியை ஆற்றி வருகின்றனர்.

இப்பள்ளியில் பயிலும் மாண வர்களுக்கு நாள்தோறும் காலை யில் குறைந்தது முப்பது நிமி டங்கள் உடற்பயிற்சியும், மாலையில் கால்பந்து, கைப் பந்து, பூப்பந்து, கூடைப்பந்து போன்ற விளையாட்டுகளும் உடற்பயிற்சி ஆசிரியர்களால் நடத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு வாரமும் சனிக் கிழமைகளில் காலைப்பொழு தில் மாணவர்களின் சிறப்பு அணிவகுப்பு ஒன்று முறையாக நடத்தப்பட்டு வருகிறது. வெளி இடங்களில் நடக்கும் குடியரசு நாள் போன்ற விழாக் களில் இப்பள்ளி மாணவர் களின் சிறப்பு அணிவகுப்பும் இடம் பெறுகின்றன.

இம் மாணவர்களுக்காகத் தனிப்பட்ட மருத்துவமனையும் ஒரு மருத்துவரும், அவருக்குத் துணையாக மற்ற பணியாளர் களும் இருக்கின்றனர். பிள்ளை களை மாதந்தோறும் பரிசோ தித்து, எடை குறைந்தவர் களுக்கு விசேட கவனிப்புச் செலுத்திச் சிகிச்சை அளிக்கப் படுகிறது.

இப்பள்ளியில் சனிக்கிழமை தோறும் கிறித்தவ சமயப் பிள்ளைகளுக்கும், முகமதியப் பிள்ளைகளுக்கும் பள்ளி ஆசிரி யர்கள் மூலமாகவும் தேவால யங்களிலிருந்து வரும் மத போதகர்களாலும் தத்தம் மதங்களைப் பற்றிய அரிய கருத்துக்கள் தெளிவாக விளக் கப்பட்டு வருகின்றன.

பள்ளி வானொலிப்பெட்டி மூலம் மாணவர்கள் அன்றாடச் செய்திகளையும், இனிய பாடல் களையும், குறிப்பிட்ட நாட் களில் பாடங்களையும் கேட்டு மகிழ்கின்றனர். மற்றும் பள்ளி யில் உள்ள பேசும்படக்காட்சிச் சாதனம் மூலம் மாதம் இரு முறை கல்வி சம்பந்தமான படங்களைக் கண்டுகளிக்கின்ற னர். மாதம் ஒருமுறை திரைப் படக்காட்சிக்கும் அழைத்துச் செல்லப்படுகின்றனர். விசேடக் காலங்களில் மாணவர்களின்



## தெரியுமா ?

1974-ஆம் ஆண்டில் தமிழ்ப் புத்தாண்டு என்று சொல்லப்படும் ஆனந்த வருடப் பிறப்பு ஏப்ரல் 14-ஆம் நாள் தொடங்கி விட்டது. மறு நாள் இரண்டு ஆண்டுகள் பிறந்தன.

ஆமாம், ஏப்ரல் 15-ஆம் நாள் 'பெங்கா லிசன்' என்று சொல்லப்படும் 1381-வது வங்க ஆண்டும் 5075-வது கலியுக ஆண்டும் பிறந்தன.

2518-வது புத்த நிர்வாணஆண்டு மே 6-ஆம் நாள் பிறக்கிறது.

1150-வது கொல்லம் ஆண்டு ஆகஸ்ட் 17-ஆம் நாள் பிறக்கிறது.

2501-வது மகாவீர் நிர்வாண ஆண்டு நவம்பர் 14-ஆம் நாள் பிறக்கிறது.

1896-வது சக ஆண்டு மார்ச்சு 22-ஆம் நாளன்றும் 1394-வது முகம்மதிய ஆண்டு (ஹிஜ்ரி) ஜனவரி 25-ஆம் நாளன்றும் பிறந்து விட்டன.



நாடகங்களும், களியாட்டங்களும் நடைபெறுகின்றன.

இப்பள்ளியில் மாணவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சிக் காலம் முடிந்து, வீடு சென்ற மாணவர்கள் எவ்வாறு இருந்து வருகின்றனர் என்பதைப்பற்றி அறிவிக்கும் 'பிற்காப்பு அறிக்கை' இவர்கள் செய்யும் பணிகளின் சிறப்பினைக் காட்டும் அளவு கோலாக அமைகிறது. இந்த வகையில் பல மாணவர்கள் திருப்திகரமாகத் தொழில் புரிந்து வாழ்ந்து வருகின்றனர் என்பது மகிழ்ச்சியூட்டும் செய்தியாகும்.

இப்பள்ளியின் 'பார்வையாளர் குழு' மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் மூன்று மாதங்களுக்கொரு முறை கூடி, பள்ளியில் மாணவர்கள் சேர்க்கையையும், பயிற்சியையும் பற்றி ஆக்கமும் ஊக்கமும் நிறைந்த கருத்துக்களைக் கூறி வருகிறது.

ஒரு சிறுவனுக்கு ஓர் ஆண்டுக்கு 10 நாள் விடுமுறை அளிக்கப்படுகின்றது. விசேட விழாக் காலங்களில் அவர்களைப் பாதுகாப்புடன் வீட்டுக்கு அனுப்பி வைக்கின்றனர். பிறகு அவர்கள் மீண்டும் இப்பள்ளிக்கு வந்து விடுகின்றனர்.

பெற்றோர்கள் இங்கே வந்து, பிள்ளைகளைப் பார்த்துப் பேச முடியுமா?

முடியும். அதற்கென ஓர் அறை இங்கே இருக்கிறது. அங்கே தம் பிள்ளைகளை வரவழைத்து உரையாடலாம். இந்த அறையின் வாசலில்,

'மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல்'

என்ற குறள் எழுதப் பெற்றிருக்கிறது.

பெற்றோர் இல்லாத குறையினை உணராவண்ணம், இப்பள்ளி பெற்றோராயிருந்து இவர்களைப் பேணிக் காக்கின்றது; அவர்களுக்கு அறிவூட்டி அன்புடன் ஆதரவு தருகிறது.

பயிற்சி பெற்று வீடு திரும்பும் போதுங்கூட அவர்களுக்கு வேட்டி, சட்டையெல்லாம் கொடுத்து அவர்கள் 'மாப்பிள்ளை' போல் அனுப்பப்படுகின்றனர்!

சமுதாயத்தில் நல்ல வாய்ப்பற்றவர்களாக-அன்னை தந்தையர் அருள் நிழலில் வாழும் வாய்ப்பற்றவர்களாக-பிறரால் புறக்கணிக்கப்பட்டவர்களாக-ஆதரவற்றவர்களாக இருந்தும் அரசினரது அருள் நோக்கின் காரணமாக நல்லமுறையில் வாழ நற்பயிற்சி பெற்று வருகின்றனர்.

இப்பள்ளியில் சேர்ந்தபின் மாணவர்கள் அடையும் உடல், உள்ள, ஆன்ம நிலை வளர்ச்சிகளும், அளிக்கப்படும் பயிற்சிகளும் அவர்கள் சீர்திருந்தி நல்வாழ்வு காண, ஒழுக்க சீலர்களாய் விளங்க, நாட்டுக்கேற்ற நற்குடி மக்களாய்த் திகழப் பெரிதும் உதவுகின்றன என்பதைப் பெருமையோடு சொல்ல வேண்டும்.

—பி. வி. ஜி.

மக்களின் உயிரையும், உடைமையையும் தீவிபத்துக்களிலிருந்தும், மற்றும் வெள்ளம், புயல், பூகம்பம் போன்ற இயற்கை இடர்களிலிருந்தும் காப்பாற்ற, ஒரு திறமையான படை தேவையன்றோ?

தமிழ்நாடு தீயணைப்புத் துறை இவ்வரிய பணியை நிறைவேற்ற அரசினரால் 1942-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இத் துறை அக்டோபர் திங்கள் 1967-ஆம் ஆண்டிலிருந்து ஒரு தனித் துறையாக இயங்கி வருகிறது. நாட்டிலேயே பெரியதும், மிகத் திறமை வாய்ந்தது என்ற புகழையும் இது பெற்று உள்ளது.

**மக்கள் பணி**

தீ விபத்தைத் தவிர்ப்பதும், தீயை அணைப்பதும் இத் துறையின் தலையாய பணியாயினும், மக்களின் நலனுக்காக அது வேறு பல வகைகளிலும் செயலாற்றுகிறது. உதாரணமாக, காட்சிக் கடைகள், திருவிழாக்கள் நடைபெறும் பொழுது தீத் தடுப்புப் பணிகளை மேற்கொள்வது, நோயுற்றவர்கள் அல்லது காயமடைந்தவர்களை உடனடியாக மருத்துவமனைக்கு அகற்றுவது, சுகாதாரத்துறை, காவல் துறை இவைகளுக்குத் தொத்து நோய்த் தடுப்பு, தேர்தல் மற்றும் பாதுகாப்புப் பணிகளுக்கு உதவியளிப்பது போன்ற இதர பணிகளையும் ஆற்றி வருகிறது.

மேற்கண்ட பணிகளைத்தவிர தமிழ்நாடு பொது மக்கள் உபயோகிக்கும் இடங்கள் சட்டத்தின் கீழும், பஞ்சாயத்து, நகராட்சி, மாநகராட்சி படைக்கலச் சட்டங்களின் கீழும் உரிமங்கள் வழங்கப்பட்ட, வழங்கப்பட உள்ள இடங்களை ஆய்வு செய்வதிலும் இது ஈடுபடுகிறது.

**தீயணைப்பு நிலையங்கள்**

தமிழ்நாட்டில் 1—3—74 நாளது வரை 73 தீயணைப்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன. அவற்றுள் 14 சென்னை மாநகரிலும், மற்றவை வெளி நகரங்களிலும் உள்ளன. அண்மையில் ஆம்பூர், திருநெல்வேலி, கள்ளக்குறிச்சி, இராமநாதபுரம், செம்பியம், ஜெயங்கொண்ட சோழபுரம், உத்தமபாளையம், கோயம்புத்தூர் (இரண்டாவது நிலையம்), விருத்தாச்சலம், கோயில்பட்டி, நன்னிலம், எண்ணூர் ஆகிய இடங்களில் தீயணைப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. மேலும், கோபிச்செட்டிப் பாளையம், குழித்துறை, மணலி, மேட்டூர், தென்காசி மற்றும் சென்னையில் தண்டையார்பேட்டை, வ.உ.சி. நகர் ஆகிய ஏழு இடங்களில் தீயணைப்பு நிலையங்களை அமைப்பதற்கும் அரசு தீர்மானித்து உள்ளது. தேவையான கட்டடங்களும், தீயணைப்புப் பொறிகளும் தயாரானவுடன் மேற்கண்ட நிலையங்கள் அமைக்கப்படும்.

தமிழகத்தில் தீயணைப்பு நிலையங்கள் நிறுவ அரசு ஒப்பளித்துள்ள முதன்மைப் பட்டியலில் இன்னும் 55 நகரங்கள் இடம் பெற்றன. இதில் கிருட்டினகிரி, பண்ருட்டி, ஆரணி, மேட்டுப்பாளையம் ஆகிய இடங்களில் தீயணைப்பு நிலையங்கள் 1974—75-ஆம் ஆண்டில் நிறுவ நிதிநிலைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.




**தீயணைப்பு அழைப்புகள்**

1973-ஆம் ஆண்டில் தீயணைப்பு நிலையங்கள் 5,716 அழைப்புக்களைப் பெற்றுச்செயல்பட்டன. இவற்றில் 5,069 தீ விபத்து அழைப்புகளும், 577 அவசர மீட்பு அழைப்புகளும், 70 போலி அழைப்புகளுமாகும்.

தீ விபத்துகளில் 2,429 நகர்ப்புறங்களிலும், 2,640 நாட்டுப்புறங்களிலும் ஏற்பட்டன. இவற்றில் 62 தீ விபத்துக்கள் உயிர் இழப்பு அல்லது ரூ. 50,000-க்கு மேற்பட்ட சொத்துக்களுக்குச் சேதம் சம்பந்தப்பட்ட பெருந் தீ விபத்துக்களாகும். தீயினால் அழிக்கப்பட்ட உடைமைகளின் மதிப்பு ரூ. 148.5 இலட்சமாகும். அழிவினின்று தீயணைப்புப் படையினரால் மீட்கப்பட்ட உடைமையின் மதிப்பு ரூ. 663.7 இலட்சமாகும். தீ அணைப்புப் படை வருமுன், தீ விபத்துக்களில் 56 பேர் உயிர் இழந்தனர். தீ விபத்துக்களில் 31 பேர் காயமுற்றனர். தீ மற்றும் விபத்துக்களிலிருந்து 101 பிராணிகள் மீட்கப்பட்டன. உயிரிழந்தவைகளின் எண்ணிக்கை 30.

**அவசர மீட்பு அழைப்புகள்**

577 அவசர மீட்பு அழைப்புகளில் வெள்ளத்தினாலானவை 220; மின் பாய்ச்சல் விபத்துக்கள் 2, சாக்கடை விபத்துக்கள் 12, இயங்கேணி விபத்துக்கள் 12, வீடு இடிபாடுகள் 28, உயரமான இடங்களிலிருந்து மீட்பு 33, அபாயகரமான வாயுவினால் உண்டான அவசர மீட்பு 1,269 மற்ற மீட்பு

அழைப்புகளுமாகும். 24-9-73 அன்று கோயமுத்தூரருகே பீளமேட்டில் 100 அடி ஆழமும், பாம்புகளும் பல நச்சுப் பூச்சிகளும் நிறைந்த கிணற்றிலிருந்து 23 வயதுள்ள ஒரு கல்லூரி மாணவனை, இந்தத் துறைப் பணியாளர்கள் காப்பாற்றியுள்ளது ஒரு மிகச் சிறந்த பணியாகும்.

**நோயாளி வண்டி அழைப்புகள்**

ஒவ்வொரு நிலையத்திலும், தீயணைப்பு ஊர்திகளுடன் நோயாளி வண்டிகளும் உள்ளன. நோயாளி வண்டிகள், விபத்துக்களில் காயமுற்றோரை இலவசமாக மருத்துவமனைகளுக்கு எடுத்துச் செல்கின்றது. மேலும் நோயுற்ற ஏழை மக்களையும் இலவசமாக மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்ல உதவுகின்றன. தீயணைப்புப்படை 1973 டிசம்பர் திங்கள் இறுதிவரை 14,217 ஆம்புலன்ஸ் வண்டிக்கான அழைப்புகளைப் பெற்றது. அவற்றில் இலவச அழைப்புகள் 887 ஆகும். கட்டணம் வசூலிக்கப்பட்ட 13,330 அழைப்புகளுக்காகக் கிடைத்த தொகை ரூ. 2,18,551.50.

1973 டிசம்பர் திங்கள் இறுதிவரை தீத்தடுப்பு மற்றும் தண்ணீர் இறைப்பு சம்பந்தமான வேலைகளுக்கு 171 தடவை அழைக்கப்பட்டன. அவ்வேலைகளுக்கான வசூலிக்கப்பட்ட தொகை ரூபாய் 28,897.50.

சென்னை நகரில் உள்ள ஒரு நெருக்கடி வண்டி தனிப்பட்ட தளவாடங்கள் கொண்டுள்ளது. இவ்வண்டி, கவிழ்ந்த வண்டிகளைத் தூக்கி அகற்றவும், மீட்பு வேலைகளின்போது இடிபாடுகளை அகற்றவும், பள்ளங்களிலிருந்து விலங்குகளைக் காப்பாற்றவும் பயன்படுத்தப்படுகிறது. 1973 டிசம்பர் திங்கள் முடிய 107 அழைப்புகளுக்கு ரூ. 14,374 கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

இத்துறையிலுள்ள, ஊர்திகளுக்கான பழுதுகளை, உடனுக்குடன் செப்பனிட, கோட்ட அளவில் ஏழு நடமாடும் பழுது பார்க்கும் குழுக்கள் செயல்படுகின்றன. சென்னையில் ஒரு மாநிலப் பட்டறையும் இயங்கி வருகிறது. ரூ. 88,947 மதிப்புள்ள 388 பழுது பார்க்கும் வேலைகளை மாநிலப் பட்டறையும், ரூ. 58,453 மதிப்புள்ள 679 பழுது பார்க்கும் வேலைகளை ஏழு நடமாடும் பழுது பார்க்கும் குழுக்களும் செய்திருக்கின்றன.

**பயிற்சிப் பள்ளி**

தீ அணைப்புத் துறைக்கென ஒரு மாநிலப் பயிற்சிப் பள்ளி சென்னையில் செயல்படுகின்றது. இப்பள்ளியில் இவ்வாண்டு 5 பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டன. அவற்றுள் 130 தீ அணைப்போர்களும், 9 நிலைய தீயணைப்பு அலுவலர்களும், 29 முதன்மை தீயணைப்போர்களும் பயிற்சி பெற்றனர். மேலும், நாகபுரியிலுள்ள தேசிய தீயணைப்புக் கல்லூரியில் முன்னேற்றப் பயிற்சி பெற 5 நிலைய அலுவலர்கள் அனுப்பப்பட்டனர்.




**தமிழ் நாவல் போட்டி**
**பரிசு ரூ. 1000**

தமிழில் தரமான நாவல்களை உருவாக்கல், புதிய திறமைகளைக் கண்டுபிடித்தல் ஆகிய பெருநோக்குடன் தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், நாவல் இலக்கியப் போட்டி ஒன்றை நடத்துகிறது. வருவனவற்றுள் சிறந்தது எனத் தேர்ந்தெடுக்கப்படுகிற நாவலுக்கு ரூ.1,000 பரிசு வழங்கப்படும். நாவல் கையெழுத்துப் படிகள் 30—9—1974க்குள் எங்கள் அலுவலகத்துக்கு வந்து சேர வேண்டும். இப் போட்டியில் அனைவரும் கலந்து கொள்ளலாம்.

போட்டி பற்றி மேலும் விவரங்கள் வேண்டுவோர், செயலாளர், தமிழ்எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், 8, சின்ன ரெட்டித் தெரு, எழும்பூர், சென்னை-8 என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

**சிறந்த பணிக்குப் பரிசு**

இவ்வாண்டில் சிறப்பாகப் பணியாற்றிய கோட்டத் தீயணைப்பு அலுவலர் திரு வா. ஜெயபெருமாளுக்கு, வீரச் செயலுக்கான, குடியரசுத் தலைவர் காவல் தீ அணைப்புப் பதக்கமும், தீயணைப்போர்கள் திரு. பா. சந்திரனுக்கும் திரு. தி. குமரேசனுக்கும் வீரச் செயலுக்காகக் காவலர் பதக்கமும், தற்பொழுது ஓய்வு பெற்ற கோட்டத் தீயணைப்பு அலுவலர் திரு. ஏ. ஆர். ரஷித்துக்கும், தன்னிகரற்ற பணிக்காகக் காவலர் பதக்கமும், போக்குவரத்து நிலைய அலுவலர் திரு. இராமசாமிக்குத் தமிழ்நாடு முதலமைச்சர் வீரப்பதக்கமும், முதன்மை தீயணைப்போர் திரு. கே. நாராயணனுக்குத் தன்னிகரற்ற பணிக்காகத் தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கமும் வழங்கப்பட்டன.

**தீயணைப்புத் துறைப் பணியாளர் நல நிதி.**

தமிழ்நாடு தீயணைப்புத் துறையில் பணிபுரியும் அரசிதழ் பதிவு பெறாத பணியாளர்களின் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு தீயணைப்புத் துறை சேம நலநிதி, நிதியுதவி, படிப்புதவி, நல உதவி, பொழுதுபோக்கு வசதி ஆகியவற்றை அளிக்கிறது. தீயணைப்புத் துறையில் பணிபுரியும் 2,668 பேர் இதில் சேர்ந்துள்ளனர். 1973- ஆம் ஆண்டின் சந்தாவாக ரூ. 6,275.64 வசூலிக்கப்பட்டது. அரசினரால் ரூ. 5,000 ஆண்டு மானியமாக வழங்கப்பட்டது. 1973 டிசம்பர் மாத இறுதி வரை ரூ. 25,061 உதவித் தொகையாகப் பணியாளருக்கு வழங்கப்பட்டது.

இவ்வாண்டு தீயணைப்புத் துறை அலுவலர்களின் வீட்டு வாடகைப் படியை, காவல் துறையினருக்கு வழங்கப்படும் அளவுக்கு அளித்துள்ளனர். மேலும் வாரத்துக்கு ஒருநாள் ஓய்வு அளிப்பதற்கான ஒரு திட்டத்தை ஒப்பளித்துள்ளனர். எல்லா நிலையங்களிலும் அமல் படுத்து முன்னர், சென்னை எழும்பூர் தீயணைப்பு நிலையத்தில் முதலாவதாகச் சோதனைக்காகச் செயல்படுத்துமாறு ஆணையிடப்பட்டுள்ளது.

1973-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ஆம் நாளன்று உள்ளவாறு தீயணைப்புப் படையிலுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 2,772.



மகளிர் பகுதி

# பர்மா அகதிகளுக்குப் பயனுள்ள தொழில்

நமது நாட்டில் எல்லா வளங்கள் இருந்தும்; நாடு அந்நியர்க்கு அடிமைப்பட்டிருந்த காரணத்தால், உழைப்பு ஒன்றினையே உயிராகக் கொண்டிருந்த தமிழ்ச் சமுதாயத்தைச் சார்ந்திருந்த சிலர், பிறந்த நாட்டில் பிழைக்க வழியின்றிக் கடல் கடந்து பிறநாடுகளுக்குச் சென்றனர். அங்கே அவர்கள் தங்கள் கண்ணீரையும் செந்நீரையும் சிந்தித் தாம் குடியேறிய நாட்டை— மண்ணைப் பொன்கொழிக்கச் செய்து வளந் தேடித் தந்து வரலாற்றுப் புகழ் பெற்றனர்.

எனினும், கால வளர்ச்சியில் ஆங்காங்கு ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் அந்த உழைப்பாளர்கள் எல்லாம் மீண்டும் அவர்களது பிறந்த நாட்டிற்கே பெருமைக்குரியவர்களாக அல்ல-அகதிகளாகத் திரும்பி அனுப்பப் பெறும் அவலநிலை ஏற்பட்டுள்ளது பெரிதும் வருந்தத்தக்கதாகும். இருந்தாலும் அகதிகளாகத் திரும்பி வருகின்ற அவர்களை - அந்தத் தமிழ்ச் சகோதரர்களை மீண்டும் அன்புடன் வரவேற்று அவர்களுக்கு மறுவாழ்வு அளித்து, அவர்கள் வாழ்வில் வளஞ்சேர்த்திடத் தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்பட்டு வருகிறது.

இவ்வகையில், அகதிகளாகத் தாயகத்திற்குத் திருப்பி அனுப்பப்பெற்ற பர்மாத்தமிழர்களுக்குத் தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் மறுவாழ்வுப் பணி நடைபெற்று வருகின்றன. அவற்றுள் ஒன்றாக விளங்குகிறது சென்னை நகரைஅடுத்துள்ள வியாசர்பாடி; இங்கு ஏறத்தாழ 2,500 பர்மியத் தமிழ்க் குடும்பங்கள் உள்ளன.

சிறுதொழில் துவங்குபவர்-வியாபாரம் செய்ய முனைபவர் -மற்றத் தொழில் செய்ய விழைபவர் போன்றவர்களுக்கு அரசு நிதி உதவி அளித்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். பர்மாத் தமிழர் குடும்பத்தைச் சார்ந்த மகளிர் பயன் பெறும் வகையிலும், அவர்களுக்கு ஏற்றதொரு தொழிலைக் கற்றுத் தருகின்ற முறையிலும் மகளிர் நலத்துறை, 'தையல் தொழிற் பயிற்சி நிலையம்' ஒன்றினை சர்மாநகர் - 'ஜட்ஜ் பங்களா'வில் அமைத்துச் செயலாற்றி வருகிறது.

பர்மாத் தமிழர் குடும்பத்திற்கென ஏற்படுத்தப்பெற்ற இந்த நிலையம் 12-9-1972 முதல் செயல்பட்டு வருகிறது. இந்நிலையத்தில் 25 மகளிர் சேர்த்துக் கொள்ளப்பட்டு, இரண்டு ஆண்டுகள் பயிற்சியளிக்கப்படுகின்றனர். இந்நிலையத்தை நடத்துவதற்கு மைய அரசினுடைய மறுவாழ்வுத்துறை இயக்குநர் அகம் நிதி உதவி அளித்தாலும், எல்லாப் பொறுப்புக்களையும் சமூக நலத்துறையிலுள்ள மகளிர் நலத்துறையே ஏற்றுச் சிறப்பான முறையில் நடத்தி வருகிறது.

பயிற்சி வகுப்புகளில் சேர முதலில் மகளிர் நலத்துறையினரால் மனுக்கள் கோரப்படுகின்றன. மாவட்ட மகளிர் நல அலுவலர், மறுவாழ்வுத் துறை துணை இயக்குநர் ஆகியோர் பேட்டித் தேர்வின் மூலம் 25 பெண்களைத்

தெரிந்தெடுக்கின்றனர். மற்ற நிலையங்களைப் போலவே இங்கும் பயிற்சி வகுப்பில் சேர 8-ஆம் வகுப்பு தேறியிருத்தலும், வயது வரம்பில் 18 முதல் 30 வரையிலும் இருத்தல் வேண்டும். முக்கியமாக, இவர்கள் பர்மாத் தமிழர் என்பதற்கான சான்றிதழ் ஒன்றினை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெற்றுத் தர வேண்டும். பயிற்சி முடிகின்ற வரையில் இவர்களது பயணச்சீட்டு அடையாள அட்டை மகளிர் நலத்துறையினரிடமே இருக்கும்.

சேர்த்துக் கொள்ளப் பெற்றவர்கள் சிறந்த முறையில் பயிற்சி பெறவும், தையல் தொழிலில் அனைத்தையும் கற்றுக் கொள்ளவும் தகுந்த வகையில் பெண்கள் தொழில் நுட்பக் கல்வி நிலையத்தில் 'டிப்ளமோ' பெற்றவரைப் பயிற்றுவிப்பவராக (Instructor) மகளிர் நலத்துறை நியமனம் செய்கிறது. பயிற்சி பெறுகின்ற இரண்டாண்டுக் காலமும் மாதம் ரூபாய் 30 வீதம் ஒவ்வொருவருக்கும் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

முதுநிலைத் தொழில் நுட்பத் தேர்வுக்குரிய (Higher Grade Technical Examination) பாடத் திட்டங்கள் இவர்களுக்குக் கற்றுத் தரப்படுகின்றன. தையல் தொழில், பூவேலை மற்றும் தையல் தொழிலில் உள்ள அனைத்தும் கற்றுத் தரப்படுகின்றன. அரிசன நலத்துறை அதன் பள்ளிகளுக்குத் தீபாவளி, பொங்கல் போன்ற திருநாட்களில் இலவசமாக வழங்குகின்ற சீருடைகளை இவர்களும் தயாரித்துத் தருகின்றனர். தங்கள் திறமை, தயாரித்த சீருடைகளின் எண்ணிக்கை போன்றவைகளுக்கு ஏற்ப இவர்கள் ஊதியம் பெறுகின்றனர்.

பயிற்சி முடிவுற்ற பின்னர் தேர்வெழுத விருப்பமுள்ளவர்கள் தேர்வெழுத அனுமதிக்கப்படுகின்றனர். அனைவரும் பயன்பெறுகின்ற வகையில் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. பயிற்சியை முடித்து வீட்டிற்குச் செல்லும் ஒவ்வொரு மகளிர்க்கும் மகளிர் நலத்துறை ஒரு தையல் இயந்திரத்தை இலவசமாக வழங்குவது குறிப்பிடத்தக்கதாகும்.

—ஆயிரம்

### இருபதே நாளில் பள்ளிக் கட்டடம்!

முற்றிலும் தயாரான பொருட்களைக் கொண்டு, மூன்று கட்டங்களில், துவக்கப் பள்ளிக் கட்டடம் கட்டும் புதிய முறையொன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இத்தகைய ஒரு பள்ளிக் கட்டடத்தை 8 ஆயிரத்து 500 ரூபாய் செலவில், சுமார் 20 நாட்களில் கட்டி முடித்து விடலாம்.

இத்தகைய ஒரு பள்ளிக் கட்டடத்தில், 4 வகுப்பு அறைகள், சிறிய கூடம், தலைமை ஆசிரியர் அறை, மதிய உணவு தயாரிப்பதற்கான சமையல் அறை, சிறுநீர் கழிக்குமிடம் ஆகியவை இருக்கும். மேலும் ஓரளவு திறந்த வெளிப் பகுதியும் இருக்கும்.

ஒவ்வொரு வகுப்பு அறையும், 40 மாணவர்கள் வசதியாக உட்கார்ந்து கல்வி பயிலத் தக்க வகையில் அமைந்திருக்கும். இந்த முறையை உத்தரப் பிரதேச மாநிலத்தில் ரூர்க்கியிலுள்ள மத்தியக் கட்டட ஆராய்ச்சிக் கழகம் உருவாக்கியிருக்கிறது.



# மதுரை மாநகரில் புதிய விளையாட்டரங்கம்

தமிழரின் நாகரிகத்தை எடுத்தியம்பும் தொன்மை மிகு நகரங்களுள் முதன்மை யானது மதுரைமாநகரம். இந் நகரில் நெடிதுயர் மாடங் களும் நீண்ட பல கோயில் களும் எழில் மிக்க பொழில் களும் நிறைந்துள்ளன. 'ஓடி விளையாடு பாப்பா' என்று தாலாட்டிய விளையாட்டு ணர்வை ஊக்குவித்த தமிழி னத்தின் முதுபெரும்நகரில், அவ்வினத்தின் பண்பாடாம் இளம் மாலைப் பொழுதில் மணல் பரப்பில் விளையாடி மகிழ்தலைப் புதுப்பிக்கவும் இன்றைய சமுதாயப் போக் கோடு இணைந்து போட்டி நடைபோடவும் விளையாட்டு அரங்கம் தேவையென்பதை அனைவரும் ஒப்புக் கொள்வர். அத்தேவையை நிறைவு செய்ய மதுரைப் பந்தய (ரேஸ் கோர்ஸ்) மைதானத்தில் விளை யாட்டு அரங்கக் கால்கோள் விழா முதல்வர் கலைஞர் அவர் களால் மதுரை மாவட்ட விளை யாட்டுக் குழுவினரின் முயற்சி யால் 1969-ஆம் ஆண்டில் எடுக்கப்பட்டது.

இத்திட்டத்திற்கான வேலை கள் 1970-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் ஆரம்பிக்கப்பட்டது. இவ் விளையாட்டரங்கம் 11,23,391-60 ரூபாய் செல வில் உருவாக்கப்பட்டுள்ளது. ரேஸ் கோர்ஸ் மைதா னத்தில் 26 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த விளையாட் டரங்கம் விளையாட்டுக்களுக்கு மட்டுமல்லாமல் நாடக நிகழ்ச்சி கள், பொதுக்கூட்டங்கள் ஆகியவற்றை நடத்துவதற் குரிய வசதிகளுடன் உருவாக் கப்பட்டுள்ளது. கால்பந்து, ஹாக்கி, கிரிக்கெட், வாலிபால் கூடைப்பந்து ஆகியவிளையாட்டு களுக்கென்றும் தனித் தனித் திடல் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த அரங்கத் திடலில் நடைபெறும் விளையாட்டுக் களையும் நிகழ்ச்சிகளையும் கண்டு களிக்கும் பார்வையாளர்கள் அமர்வதற்கு வசதியாக சிமின் டினால் ஆன மிகப் பெரிய 'காலரி' (Gallery) ஒன்று கட்டப்பட்டுள்ளது.

இந்தக் காலரியின் மீது 150 அடி நீளமும் 50 அடி அகலமும் உள்ள நிழல்தரும் மேற்கூரை (Canopy) ஒன்று, இடையில் தூண்களே இல்லாமல் கட்டப் பட்டுள்ளது. தமிழ்நாட்டி லேயே முதன் மாதிரியான கூரை அமைப்பாகும் இது. ஆயிரம் பார்வையாளர்கள் வசதியாக அமர்ந்து நிகழ்ச்சி களைக் கண்டுகளிக்க முடியும். இதற்கு இருபுறமும் 200 அடி நீளமுள்ள காலரியில் 6 ஆயிரம் பார்வையாளர்கள் வரை அமர லாம்.

தமிழ்நாட்டில் கட்டப்பட் டுள்ள மற்ற விளையாட்டரங் கங்களில் இல்லாத சிறப்பு அம்சமாக இந்தப் பார்வை யாளர்கள் காலரிக்குப் பின் புறம் 'உள்' விளையாட்டு அரங் கம் (Indoor Games) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

150 அடி நீளம், 60 அடி அகலம் 30 அடி உயரம் உள்ள இந்த உள் விளையாட்டு அரங் கத்தில் டேபிள் டென்னிஸ், சட்டில்காக் போன்ற விளை யாட்டுகளுக்கான இடவசதி கள் உள்ளன. இரவு நேரங் களில் இந்தவிளையாட்டுகளுக்கு வேண்டிய மின்வெளிச்ச வசதி களும் (Flood light) அமைக் கப்பட்டுள்ளன.

இந்த விளையாட்டரங்கில் விளையாட்டு வீரர்களும் நாட கம் போன்ற நிகழ்ச்சிகள் நடத்துபவர்களும் தங்குவதற் கெனத் தனித் தங்குமிடங் களும், அவர்களுக்கெனச் சகல வசதிகளும் கொண்ட குளிய லறை, கழிவறை போன்ற சுகாதார வசதிகளும், உணவு விடுதி வசதிகளும் உருவாக்கப் பட்டுள்ளன.

12-2-73 அன்று நடைபெற்ற கலைஞர் கருணாநிதி விளையாட் டரங்க விழாவிற்கு கல்வி அமைச்சர் நாவலர் நெடுஞ் செழியன் அவர்கள் தலைமை தாங்கிட, தமிழக ஆளுநர் கே. கே. ஷா அவர்கள் திறந்து வைத்தார். மின்துறை அமைச் சர் ஓ.பி. இராமன், மதுரை மேயர் எஸ். முத்து மற்றும் பலர் சிறப்புரை ஆற்றினார்கள்.

'உடல் வளர்த்தோர் உயிர் வளர்த்தோரே' என்பது தமிழ்ப் பழமொழி. இத்தகு பழமொழிகளை உய்த்துணர்ந் துள்ள மதுரை மக்கள் இவ் விளையாட்டு அரங்கத்தைப் பயன்படுத்தி உள்ளத் தளர்ச்சி போக்கி, உடலை வளர்த்து அதன் மூலம் உயிரைப் பேணி டல் நலமாகும்.

செந்தமிழ்ச் சிந்துபாடும் மதுரை மாநகரின் சிறப்பிற்கு மற்றுமோர் அணிகலனாக அமைந்துள்ளது, ''கலைஞர் கருணாநிதி விளையாட்டரங்கம்'' என்றால் அது மிகையாகாது.

—அ.ம.



# நல்வாழ்வுக்கு நல் உணவு



நல்வாழ்வு தொடங்குமிடம் நமது இல்லங்களே. நல்வாழ்வு சிறக்கின்ற இல்லங்களே நலமிக்க குடிமக்களை உருவாக்கும் இடங்களாகும். நலமிக்க குடி மக்களே நாட்டின் பெருஞ் செல்வம்—உலக நலனுக்கு அச்சாணி.

உயிர் வாழ்வதற்கு அடிப்படைத் தேவை உணவு : அந்த உணவு உடல் நலனுக்கு உகந்ததாக இருக்க வேண்டும். அதுவே நல்லுணவு.

### உணவின் தேவை

உணவு—உடல் வளர்ச்சிக்கு, வலிமைக்கு, தேய்வுகளை ஈடு செய்ய நோய்களிலிருந்து பாதுகாப்புப் பெறத் தேவைப்படுகிறது. இப்பணிகளையெல்லாம் முறையே செய்யத் தேவைப்படும் ஊட்டச் சத்துக்கள் உணவில் இருத்தல் வேண்டும் ; அத்தகைய உணவே நல்லுணவாகும்.

### ஊட்டச் சத்துக்கள்

உணவில் மாவுப் பொருள், புரதம், கொழுப்புப் பொருள், தாதுப் பொருட்கள், வைட்டமின் உயிர்ச் சத்துக்கள் முதலான முக்கியமான ஊட்டச் சத்துக்கள் உரிய அளவில் சீராகக் கலந்திருக்க வேண்டும். இவை நமது உடலில் பல்வேறு அலுவல்களைப் புரிகின்றன.

### மாவுப் பொருள்கள்

தானிய வகை உணவுப் பொருள்களான அரிசி, கோதுமை, சோளம், கேழ்வரகு முதலியனவும், உருளைக் கிழங்கு, சேனைக் கிழங்கு, சேப்பங்கிழங்கு, மரவள்ளிக் கிழங்கு முதலிய கிழங்கு வகைகளும், சர்க்கரையும் வெல்லமும் மாவுப் பொருள் மிகுந்த உணவுப் பொருள்களாகும்.

### புரதம்

பருப்புவகைகள், பட்டாணி, மொச்சை, மைசூர் பருப்பு, வேர்க்கடலை முதலிய காய்கறி வகை உணவுப் பொருள்களிலும், இறைச்சி, மீன், முட்டை, பால், தயிர், வெண்ணெய் முதலியவற்றிலும் புரதம் மிகுதியாக உள்ளது.

ம்புச்
தலிய
நமது

உடலுக்குத் தேவைப்படும் சில முக்கிய தாதுப் பொருட்களாகும்.

பால், தயிர், வெண்ணெய் முதலியவற்றிலும் கேழ்வரகு, கீரைகளிலும், சுண்ணும்புச் சத்து மிகுதி.

பொதுவாக எல்லா உணவுப் பொருள்களிலும் பாஸ்பரஸ் உள்ளது. குறிப்பாக தானிய வகை உணவுகளில் பாஸ்பரஸ் மிகுதியாக உள்ளது.

பசுமையான கீரைகள், காய்கறிகள், வெல்லம் முதலியவற்றில் இரும்புச் சத்து மிகுதியாக உள்ளது.

### கொழுப்புப் பொருள்

பல்வேறு எண்ணெய்கள், வெண்ணெய், நெய் முதலியவற்றிலும், வேர்க்கடலையிலும், கொழுப்புப் பொருள் மிகுதியாக உள்ளது.

### உயிர்ச் சத்துக்கள்

உடல் நலத்துக்கு ஆக்கம் தரும் பல்வேறு வைட்டமின்கள் எனப்படும் உயிர்ச் சத்துக்கள் உள்ளன.

பழங்களிலும், காய்கறிகளிலும், வைட்டமின் சத்துக்கள் மிகுந்துள்ளன. குறிப்பாக, கீரைகளில் அவை செறிவாக உள்ளன.

வைட்டமின் ஏ, வைட்டமின் பி, கலவை, வைட்டமின் சி, வைட்டமின் டி முதலியன வைட்டமின்களில் மிகவும் முக்கியமானவை.

### வைட்டமின்—ஏ

முட்டை, பால், ஈரல் முதலியவற்றிலும் மீன்எண்ணெய், வெண்ணெய் முதலியவற்றிலும் வைட்டமின்-ஏ சத்து மிகுதியாக உள்ளது. பசுமையான கீரைகளில் உள்ள 'கரோடின்' எனப்படும் பொருள் உடலில் வைட்டமின்-ஏ ஆக மாறும் தன்மை பெற்றது. குறிப்பாக முளைக் கீரை, முருங்கைக் கீரை, கேரட், பப்பாளி, தக்காளி, முட்டைக்கோஸ், கீரை, சேப்பங்கிழங்குக் கீரை முதலியவற்றில் வைட்டமின்-ஏ சத்துக்கு அடிப்படையான 'கரோடின்' எனப்படும் பொருள் செறிவாக உள்ளது.

### வைட்டமின்—பி

வைட்டமின்-பி தொகுதியில் பல முக்கியமான வைட்டமின் சத்துக்கள் உள்ளன. அவற்றுள் வைட்டமின்-பி என்னும் சத்து 'தையாமின்'' எனப்படும். புழுங்கலரிசி கோதுமைத் தவிடு, பருப்புகள், ஈரல் முதலியவற்றில் 'தையாமின்' மிகுதியாக இருக்கிறது. வைட்டமின் பி 2 என்னும் சத்து ''ரிபோபிளேவின்'' என்றும் குறிக்கப்படும். முட்டை, பால், பருப்புகள், கீரைகள், காய்கறிகள், இறைச்சி, ஈரல் ஆகியவற்றில் 'ரிபோபிளேவின்' மிகுதியாக இருக்கிறது.

### வைட்டமின்—சி

முளைக் கீரை, சக்கரவர்த்திக் கீரை, அரைக் கீரை, வெந்தயக் கீரை, பசலைக் கீரை முதலான கீரை வகைகளில் வைட்டமின்-சி சத்து மிகுதியாக உள்ளது. மற்றும் ஆரஞ்சு, எலுமிச்சை, கொய்யாப் பழங்களிலும், தக்காளியிலும், நெல்லிக்காயிலும் வைட்டமின்-சி சத்து மிகுதியாக உள்ளது.

### வைட்டமின்—டி

பால், முட்டை, ஈரல் முதலிய உணவுப் பொருட்களிலும் மீன் எண்ணெயிலும் வைட்டமின்-டி சத்து மிகுதியாக இருக்கிறது. உடலில் சூரிய வெளிச்சம் படுவதாலும் உடலுக்கு வைட்டமின்-டி சத்து கிடைக்கிறது.




உணவுப் பொருள்களையும், அவற்றில் அடங்கியுள்ள சத்துப் பொருள்களையும் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்திக் கூறலாம் :



| உணவுப் பொருட்கள் | முக்கிய ஊட்டச்சத்துக்கள் |
| --- | --- |
| பால்—பால், தயிர், பருப்பு வகை—மொச்சை, பட்டாணி, வேர்க்கடலை | புரதம், சுண்ணும்புச் சத்து |
| இறைச்சி வகை—இறைச்சி, முட்டை, கோழி இறைச்சி | (வைட்டமின் பி-2) ரிபோஃபிளேவின் |
| பழங்கள்—ஆரஞ்சு, தக்காளி, மா, பப்பாளி, நெல்லிக்காய், எலுமிச்சைச்சாறு முதலியன. | கரோடின்(வைட்டமின்-ஏ) வைட்டமின்-சி |
| கீரைகள் — கீரைகள், முட்டைக் கோஸ், கேரட் (கீரையுடன்). | தாது உப்புக்கள், இரும்புச் சத்து. |
| காய்கறிகள்—கத்தரிக்காய், பச்சை பீன்ஸ், வெண்டைக்காய், பூசனிக் காய், பறங்கிக் காய், பாகற்காய், பீர்க்கங்காய். | வைட்டமின் சத்துக்கள், தாதுப்பொருள்கள் (சிறிய அளவு) |
| தானிய வகை—அரிசி, கோதுமை, சோளம், கேழ்வரகு | மாவுப்பொருள், வைட்டமின்-சி, |
| கிழங்கு வகை—சேனைக் கிழங்கு, சேப்பங்கிழங்கு, வள்ளிக் கிழங்கு, உருளைக்கிழங்கு. | புரதம் (தானியங்களில்). |
| எண்ணெய் வகை—தாவர எண்ணெய் வெண்ணெய், நெய் | கொழுப்புப் பொருள், திரவங்கள். |
| சர்க்கரை—சர்க்கரை, வெல்லம் | வைட்டமின்-ஏ (வெண்ணெய், நெய் முதலியவற்றில்) மாவுப்பொருள் (சர்க்கரை வெல்லம், முதலியவற்றில்). |

இந்த ஐந்து வகை உணவுத் தொகுதிகளிலிருந்து—ஒவ்வொரு தொகுதியிலிருந்து ஒன்று அல்லது இரண்டு உணவுகளைத் தேர்ந்து நமது அன்றாட உணவில் இடம் பெறுமாறு பார்த்துக் கொண்டால் நமது உணவு எல்லா ஊட்டச் சீரான சத்துணவாக அமையும். உணவுப் பொருள்களில் அடங்கியுள்ள ஊட்டச் சத்துக்கள் எவ்வாறு உடலுக்கு நன்மை செய்கின்றன என்பதைப் பின் கண்ட அட்டவணை விளக்குகிறது :





| ஊட்டச்சத்துக்கள் | உடலுக்கு அளிக்கும் நன்மை |
|---|---|
| மாவுப் பொருள்<br>கொழுப்புப் பொருள்<br>புரதம் | உடல் வலிமைக்கு |
| புரதம் | உடல் வளர்ச்சிக்கு |
| தாதுப்பொருள்கள் (பாஸ்பரஸ், சுண்ணாம்புச் சத்து, இரும்புச் சத்து) | தேய்வுகளை ஈடுசெய்ய |
| தாதுப் பொருள்கள் | உடலை இயக்க |
| வைட்டமின்-ஏ, பி, தொகுதி சி, டி | நோயிலிருந்து பாதுகாப்பு அளிக்க. |

ஊட்டச் சத்துக்கள் போதுமான அளவு நமது உணவில் இடம் பெறாதபோது உடல் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. குறிப்பாக குழந்தைகளின் வளர்ச்சி—எலும்புகள், பற்கள்உடலுறுப்புகளின் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. உடல் வலிமை குறைகிறது. நோயிலிருந்து பாதுகாப்புப் பெறும் தன்மையை உடல் பெறாததால் பல நோய்களுக்கு எளிதில் ஆளாக நேருகிறது.

**சத்துக் குறைபாட்டு நோய்கள்**

நமது உணவில், புரதமும், கலோரிகளும் (மாவுப் பொருட்களும்) போதுமான அளவு இடம் பெறவில்லையென்றால், சிறு குழந்தைகளுக்கு வயிற்றுக் கடுப்பு, உடல் வீக்கம், செம்பட்டை மயிர், தோல் வியாதிகள், மற்றும் 'கிவார்ஷியார்கர்' எனப்படும் புரதச்சோகை, மாஸ்மஸ் எனப்படும் 'சவலை' நோய் முதலியன ஏற்படுகின்றன.

புரதச் சத்துக் குறைந்த உணவைத் தொடர்ந்து உட்கொண்டு வருபவர்களைக் காச நோய் முதலான நோய்கள் எளிதில் பற்றிக் கொள்கின்றன. உணவில் கொழுப்புப் பொருள் குறைவதால் குறிப்பாக எண்ணெய் வித்துக்களிலிருந்து கிடைக்கிற கொழுப்புப் பொருள் குறைவதால் தவளைச் சொறி நோய் வரும். தோல் அழகு கெடும்.

உணவில் தாதுப் பொருள்கள் குறைகின்ற போது வளர்ச்சித்தடையும், மந்த நிலை, தோல் வியாதிகள், ஈரல் பெருக்கம் முதலான நோய்கள் வருகின்றன. குறிப்பாக இரும்புச் சத்து குறைவதால் இரத்தச் சோகை நோய் வருகிறது.

வைட்டமின் சத்துக்கள் குறைபாடும் பல்வேறு நோய்களுக்குக் காரணமாகின்றன. குறிப்பாக வைட்டமின் -ஏ குறைந்தால் மாலைக் கண், கண்ணில் வெள்ளைப் பொக்கு, தோல் ஈரப் பசையற்றுப் போதல் முதலான நோய்கள் வருகின்றன.

வைட்டமின் 'பி' தொகுதிச் சத்துக்கள் குறைந்தால் வாய்ப் புண், நரம்புத் தளர்ச்சி, சோகை, பாதம் வீங்குதல், பாதம் எரிச்சல், முட்டிகள் வீக்கம் முதலான நோய்கள் வருகின்றன. பெரிபெரி என்ற நோயும் வரக்கூடும். உணவில் வைட்டமின்-சி சத்துக் குறைவதால் சளி பிடித்தல், ஈறுகளில் இரத்தம் கசிதல் முதலிய நோய்கள் வரும்.

வைட்டமின்-டி குறைந்தால் எலும்புகள், வலிமை குறைகின்றன. கீல் வாத நோய் வருகின்ற வாய்ப்பும் உண்டு.

இத்தகைய நோய்களிலிருந்து நாம் மீள வேண்டுமானால்—பாதுகாப்புப் பெற வேண்டுமானால், நம்முடைய அன்றாட உணவில் விலை மலிவான கீரைகள், காய்கறிகள், மற்றும் பால், முட்டை இடம் பெறுமாறு பார்த்துக்கொள்ளவேண்டும். குறிப்பாகக் குழந்தைகள் உடலுக்குத் தேவையான ஊட்டச் சத்துக்கள், அடங்கியுள்ள எல்லா வகை உணவுகளும் கலந்துள்ள சீரான கலப்புணவு உட்கொள்ளும் பழக்கத்தை மேற்கொள்ள உதவ வேண்டும்.

உடல் நலனுக்குத் தேவை ஊட்டச் சத்து நிறைந்த உணவுகளே! அவை விலை உயர்ந்த உணவாகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லை. விலை மலிவான உணவுகளிலும் சத்துணவுகள் உண்டு. அவற்றை அறிந்து அன்றாடம் உண்ணும் பழக்கம் நம்முடைய நல்வாழ்வுக்கு உகந்த பழக்கம் ஆகும்!

# எண்ணூர் தரும் இந்தியத் தர மணல்

நமது நாட்டில் நாளுக்கு நாள்—ஆண்டுக்கு ஆண்டு தொழில்கள் பெருகி வருகின்றன—பெருகிவளர்ந்து வருகின்றன. இப்படிப் பெருகி வளர்ந்து வருகின்ற தொழில்களில்—பெரிய தொழில்களின் வரிசையில் முக்கியத்துவம் பெற்றுத் திகழ்கிறது 'சிமெண்ட்'டுத் தொழில்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உறு துணையாக விளங்குகின்ற தொழிற்கூடங்களை நிறுவுவதிலும், வேளாண்மை வளர்ச்சியில் பெரும் பங்கு பெற்றுள்ள அணைக்கட்டுகள் கட்டுவதிலும், போக்குவரத்துக்குப் பெருந் துணை புரிகின்ற பாலங்கள் அமைத்திடுவதிலும், எழில் மிகு கட்டடங்களை உருவாக்குவதிலும் முக்கியப் பங்கு வகிப்பது 'சிமெண்ட்'.

இப்படிப் பல்வேறு தொழில்களுக்கு உதவிடும் சிமெண்ட், தரமுள்ளதாகவும் மிகுந்த வலிமை வாய்ந்ததாகவும் இருக்க வேண்டுமல்லவா? இதனுடைய தரத்தை—வலிமையை, இழுப்பு விசை, அழுத்த வலிமை போன்ற சோதனைகள் மூலம் மதிப்பிட உதவுகிறது இந்தியத் தர மணல் (Indian Standard Sand)

நமது நாடு 1955-ஆம் ஆண்டு வரையில் சிமெண்ட் பரிசோதனைக்கு இங்கிலாந்திலிருந்து லெய்டன் புஸ்ஸர்டு மணலை (Laighton Bazzard Sand) இறக்குமதி செய்து கொண்டிருந்தது. ஆனால் 1942-ஆம் ஆண்டில் இத்தகைய மணலுக்குப் பொருத்தமான வேறு ஒரு மணல் இந்தியாவிலே — சென்னை நகரை அடுத்துள்ள எண்ணூரில்தான் உள்ளது என்பதை டாக்டர் லால் சி. வெர்மன் என்பவர் கண்டுபிடித்தார். பொதுப் பணித் துறையினைச் சார்ந்த கான்கிரீட் மற்றும் மண் ஆராய்ச்சி ஆய்வுக்கூடம் தொடக்க ஆய்வுகள் மூலம், இது ஏற்ற மணல்தான் என்பது நிறுவப்பட்டது. இந்த முடிவுகளைக் கொண்டு இந்திய மண்ணியல் ஆராய்ச்சிப் பிரிவு, சிமெண்ட் சோதனைக்கு உதவிடும் தர மணலுக்குப் பொருத்தமான மணல்தான் என்பதைக் கண்டறிந்தது. எண்ணூரில் கிடைக்கின்ற இந்த மணலை இந்தியத் தர நிர்ணய நிறுவனம் ஏற்றுக் கொண்டது. 'IS 650/1955', 'IS 650/1966' என்ற பெயரோடு இந்த மணல், விற்பனைக்காகப் பல இடங்களுக்கு அனுப்பப் பெற்றது. அனுப்பப் பெற்றும் வருகின்றது.

தொழிற்சாலைகள் நிறைந்துள்ள பகுதிகளில் ஒன்றாக விளங்கிடும் எண்ணூரில் 132.25 ஏக்கர் நிலப்பரப்பில் இந்த மணல் காணப்படுகின்றது. இதனால் 120 ஆண்டுகளுக்கு நாட்டின் தேவையான தர மணல் கிடைக்கக் கூடும் என மதிப்பிடப் பெற்றது. ஆனால் எண்ணூர் அனல் மின் நிலையம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், நெடுஞ்சாலைப் போக்குவரத்து போன்றவைகளுக்காக ஏராளமான நிலங்கள் ஒதுக்கப்பட்டு விட்டதால் தற்பொழுது 42 ஏக்கர் பரப்பில்தான் இந்த மணல் தோண்டி எடுக்கப்படுகிறது. இந்தப் பரப்பில் ஏறத்தாழ 20 ஆண்டுகளுக்குத் தேவையான மணலைத் தயாரிக்க இயலும்.

வெண் சாம்பல் நிறத்தில்—உணவுப் பொருட்களில் ஒன்றாக விளங்கும் ரவையைப் போல் காணப்படுகின்ற இந்த மணல், மண் படுகைகளாக 1 முதல் 2 அடி வரையிலான கனத்தில் கிடைக்கிறது. தரை மட்டத்



திற்குக் கீழே ஏறத்தாழ 5 அடி முதல் 6 அடி ஆழத்தில்தான் இந்த மண் படுகை தென்படுகிறது. இந்த மண் படுகைகளைத் தோண்டி எடுத்துத் தர மணல் (Standard Sand) தயாரிப்பதற்காகச் சுமார் 3 கி.மீ. தொலைவில் உள்ள எண்ணூர் மணல் தொழிற்சாலைக்குக் கொண்டு வருகிறார்கள். இத் தொழிற்சாலை பொதுப் பணித்துறையினைச் சார்ந்த கான்கிரீட் மற்றும் மண் ஆராய்ச்சிக் கூடத்தின் இள நிலைப் பொறியாளர் அலுவலகத்தின் மேற்பார்வையில் இயங்குகிறது. இது 1956-ஆம் ஆண்டு முதல், மணல் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளது.

தொழிற்சாலையின் உள்ளே நுழையும் அனைவரையும் அதிசயத்தில் ஆழ்த்துகின்ற வகையில் அங்கே தொழிற்சாலையின் பின்புறத்தில் மலைபோல் குவித்து வைக்கப்பெற்றுள்ளது வெண் சாம்பல் நிறமுள்ள மணல். இந்த மணலை முதல் தரம், இரண்டாம் தரம், மூன்றாம் தரம் என மூன்று வகைகளாகப் பிரிக்கின்றனர். பார்ப்பதற்கு ரவையைப் போல் காட்சியளித்தாலும் இதனை ரவை சலிக்கும் சாதாரணச் சல்லடைகளால் சலித்துப்பிரிக்க முடியாது. தரம் வாரியாகப் பிரிப்பதற்கென்றே தனித்தனி உருவளவுகள் (Sizes) கொண்ட சல்லடைகள் (Sives) வெளி நாடுகளிலிருந்து வரவழைக்கப் பட்டுள்ளன. மணலைச் சலித்தெடுக்கும் இந்தப் பணியில் ஆட்களும் ஈடுபட்டுள்ளனர் — இயந்திரமும் ஈடுபட்டுள்ளது.

முதல் தரம் 1 மி.மீ. லிருந்து 2 மி.மீ. வரையிலும், இரண்டாம் தரம் 0.5 மி.மீ. லிருந்து 1.0 மி.மீ. வரையிலும், மூன்றாம் தரம் 0.09 மி.மீ. லிருந்து 0.5 மி.மீ. வரையிலுமான அளவுகளைக் கொண்டுள்ளது. சிமெண்ட் சோதனையில் இந்த மூன்று மணல்களும் ஒரே நேரத்தில் பயன்படுத்தப்பெறுகின்றன.

இவ்வாறு பிரிக்கப் பெற்ற மணல், முதலில் தனித் தனியாகத் தண்ணீரில் நன்றாகக் கழுவப்படுகிறது. கழுவப் பெற்ற ஈர மணல் உலர்த்தப் படுவதற்காகத் தொழிற்சாலையிலேயே ஒரு திறந்த வெளியில் வைக்கப்படுகிறது. நன்கு உலர்ந்த மணல், மீண்டும் ஒரு முறை சல்லடைகளின் மூலம் சலிக்கப்படுகின்றது.

தயாரான மணல் — தரம் வாரியாகப் பிரிக்கப்பட்ட 'தர மணல்' சரியான முறையில் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டுமல்லவா? சரியான முறையில் தயாரிக்கப் பெற்றதா என்பதை இங்கேயே ஒரு சிறிய இயந்திரத்தின் மூலம் சோதனை செய்து கண்டறிகின்றனர். அதன் பின்னர்தான் மூட்டைகளாகக் கட்ட (Packing) அனுப்பப் பெறுகிறது.

மணலைத் தோண்டி எடுத்தல், தர மணல் தயாரித்தல், அவற்றை விநியோகம் செய்தல் ஆகிய அனைத்துப் பொறுப்புக்களையும் இத் துறை, எண்ணூர் மணல் தொழிற்சாலை வாயிலாக ஏற்றுக் கொண்டுள்ளது. தரம் வாரியாகப் பிரிக்கப் பெற்ற மணல் தனித் தனியாக சுமார் 25 கிலோ கிராம் கொள்ளளவு கொண்ட தகர டப்பாக்களில் நிரப்பப் படுகின்றது. பின்னர் பாதுகாப்பாக இருப்பதற்காக மரப் பெட்டிகளில் நன்றாக அடைக்கப்படுகின்றது. இந்தியா முழுவதிலுமுள்ள சிமெண்ட் தொழிற்சாலைகள், ஆராய்ச்சி நிறுவனங்கள் போன்றவைகளுக்கு—அவைகளின் தேவைகளுக்கு ஏற்ப இவைகள் அனுப்பி வைக்கப்படுகின்றன.

சிமெண்டின் தரத்தை மதிப்பிட இந்த மூன்று ரகங்களும் ஒரே நேரத்தில் உபயோகப் படுத்தப் படுகின்றன. சோதனையில் சிமெண்ட் ஒரு பங்கும், மணல் மூன்று பங்கும் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. மூன்று மணல்களும் சம அளவில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. எனவே, மூன்று மணல்களையும் சேர்த்து (Regraded Sand) உபயோகப்படுத்துவதால் இவை, ஒரு டன்னுக்கு ரூ. 2,000 வரை விற்பனை செய்யப்படுகின்றன.

வெண் சாம்பல் நிறமுடைய இந்த மணல் 2.64 ஒப்படர்த்தியும் 0.80 சதவிகித உறிஞ்சும் தன்மையும் கொண்டது. லெய்டன் புஸ்ஸர்டு மணல் இளஞ் சாம்பல் நிறமும், 2.65 ஒப்படர்த்தியும், 0.30 சதவிகிதம் உறிஞ்சும் தன்மையும் கொண்டது. இந்த மணலில் பெரும் பகுதி 'சிலிகா' தான் காணப்படுகிறது. எனவே, இது வெள்ளை சிலிகா மணல் என்றும் அழைக்கப்படுகிறது. இந்த மணலில் குவார்ட்ஸ் (Quartz), ஃபெல்ஸ்பார் (Felspar) போன்ற பொருட்களும் உள்ளன.



தனித் தனிச் சல்லடைகளால் தரம் வாரியாகப் பிரிக்கின்றனர்.

கடந்த ஆறு ஆண்டுகளில் நமது நாட்டில் தர மணலுக்கு ஏற்பட்ட தேவையும், எண்ணூர் மணல் தொழிற்சாலையில் உற்பத்தி செய்து நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பி அதனால் அந்நியச் செலாவணியில் பாதுகாக்கப்பட்ட தொகை ஆகிய விவரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

| ஆண்டு | நாட்டின் தேவை (டன்களில்) | உற்பத்தி செய்து அனுப்பப் பெற்றது (டன்களில்) | பாதுகாக்கப் பட்ட அந்நியச் செலாவணி ரூபாய் (லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1967—68 | 206.3 | 156.7 | 3.14 |
| 1968—69 | 194.8 | 179.3 | 3.82 |
| 1969—70 | 208.1 | 151.0 | 3.02 |
| 1970—71 | 273.4 | 230.2 | 4.60 |
| 1971—72 | 248.3 | 213.1 | 4.26 |
| 1972—73 | 231.4 | 230.3 | 4.60 |

தர மணல் சிமெண்ட் சோதனைக்கு மட்டுமின்றி சுண்ணாம்பு, சிமெண்ட்டால் ஆன மற்றப் பொருள்களைச் சோதனையிடுவதிலும் பயன்படுகிறது. எண்ணூரில் இந்த மணல் உற்பத்தி செய்ய ஆரம்பித்ததிலிருந்து நமது நாடு இந்தப் பொருளில் தன்னிறைவு பெற ஆரம்பித்துள்ளது. நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் இங்கிருந்துதான் அனுப்பப் பெறுகிறது.

வெள்ளை சிலிகா மணல் சல்லடைகளில் சலிக்கின்ற நேரத்தில் கீழே விழுகின்ற மிக நுண்ணிய வெண்சாம்பல் மண். ஒரு துணைத் தயாரிப்பாகக் கொள்ளப்படுகிறது. —(25) மணல்' எனப் பெயரைக் கொண்டுள்ள இந்த மணலில் பெருமபகுதி சிலிகாவும், மிகச் சிறிய அளவில் இரும்பு ஆக்ஸைடும், அலுமினாவும் கலந்துள்ளன. இந்த மணல், கண்ணாடிப் பொருட்கள் தயாரிக்கும் தொழிலிலும், இரும்பு வார்ப்படத் தொழிலில் மாதிரி அச்சுத்தயாரிக்கவும், உராய்வுக் கல் தயாரிக்கும் தொழில்களிலும் பயன்படுத்தப்படுகிறது.

சிமெண்ட் சோதனைக்குப் பயன்படக் கூடிய மிகத் தேவையான பொருள் இது என்பதை நாம் உணருகின்ற பொழுதுதான் இந்த மணல், தொழில் துறை வளர்ச்சியில் பெற்றுள்ள முக்கியத்துவத்தை மதிப்பிட இயலும். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும் கிடைக்கின்ற இந்த மணலால் நாடு அந்நியச் செலாவணியில் பெரும் தொகையைக் காப்பாற்றித் தருவது குறிப்பிடத்தக்கது.

—ஆயிரம்



தொழிற்சாலையில் குவித்து வைக்கப்பெற்றுள்ள வெண்சாம்பல் மணலின் தோற்றம்.



# கலை மிளிரும் தமிழ் நாட்டின்
# நிலை வளர்க்கும் பரிசுச் சீட்டு!



இன்றே வாங்குங்கள்

## தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

முதல் பரிசு:

# ரூ. 1,00,000

(ஒவ்வொரு வரிசைக்கும்)

முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும், பின்னும் உள்ள இலக்கங்களுக்கு ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும். மற்றும் ஏராளமான இதர பரிசுகள்.

**65-வது குலுக்கல் நாள்: 27-4-1974**

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், சிறு சேமிப்புத் திட்டம் (பரிசுச் சீட்டு)
சென்னை-600002

விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி,
மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-600009

செலவு ஒரு ரூபாய்




வரவோ லட்ச ரூபாய்

# தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சி



இந்தியாவில் எழுத்தறிவை ஊட்டுவதிலும், கல்விக்காகச் செலவு செய்வதிலும், முன்னணியில் நிற்கும் மாநிலங்களில் நமது தமிழகம் ஒன்றாகும். 14 வயது வரை சிறார் அனைவருக்கும் தொடக்கநிலைக் கலவியை இலவசமாக அளிக்க வேண்டுமென்ற அரசியல் சட்ட நெறிமுறைக் கோட்பாட்டினை நிறைவேற்றுவதிலும், வேறுபல மாநிலங்களைக் காட்டிலும், தமிழகம் முன்னணியில் உள்ளது.

## தொடக்கக் கல்வி

**மாணவர் சேர்ப்பு :** 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில், 1973-74-ல், 6—11 வயதுத் தொகுதிச் சிறார்களின் எண்ணிக்கை, 60.24 இலட்சமாகும். இவர்களில், 54.38 இலட்சம் சிறார்கள், அதாவது 90.2 விழுக்காட்டினர், பள்ளியில் படித்துக் கொண்டுள்ளனர். 1974—75-ல், இவ்வயதுத் தொகுதியினரில் மேலும் இரண்டு இலட்சம் பேரைப் பள்ளியில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பது நமது நோக்கமாகும்.

1973–74-ல், 11–14 வயதுத் தொகுதிச் சிறார்கள் 27.11 இலட்சம் பேர் இருந்தனர். அவர்களில், 14.19 இலட்சம் பேர் அதாவது, 52.3 விழுக்காட்டினர், பள்ளியில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். 1974—75-ல் இவ்வயதுத் தொகுதியினரில் மேலும் ஒரு இலட்சம் பேரைப் பள்ளியில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பது நமது நோக்கமாகும்.

**கல்வித் தர உயர்வு :** பள்ளிகளில் கல்வியின் தரத்தை உயர்த்தும் வகையில் ஆசிரியர் மாணவர் விகிதம் சீராக இருப்பதற்குத் தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சாதாரணத் திட்டங்களின் கீழ் ஆண்டுதோறும் நியமிக்கப்பட்ட கூடுதல் ஆசிரியர்கள் தவிர, வேலை வாய்ப்பின்மை நிவாரணத்திற்கான மைய அரசுத் திட்டத்தின் கீழ், 1971—72, 1972—73 ஆண்டுகளில் கூடுதலாக நியமிக்கப்பட்ட 1,800 ஆசிரியர்களும் அடுத்த திட்டக் காலத்திலும் நீடிக்கப்படுவர். இவர்களில் 1,200 பேர் பி.டி. பட்டம் பெற்றவர்களாவர்; தொடக்க நிலையிலிருந்தே கல்வித் தரத்தினை உயர்த்தும் பொருட்டு இவர்கள், உயர் தொடக்கப் பள்ளித்தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர். அத்துடன் ''ஐந்து இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்புத் திட்ட''த்தின் கீழ் 1973—74-ல் நியமிக்கப்பட்ட சுமார் 7,428 தொடக்க நிலை (ஹையர் கிரேடு), உயர் நிலை (செகண்டரி கிரேடு), ஆசிரியர்கள் 1974—75-ல் நிரந்தரப் பதவிகளில் அமர்த்தப்படுவர். 1973—74-ல் உயர் தொடக்கப் பள்ளிகள் உட்பட, 32,499 தொடக்கப் பள்ளிகளில் மொத்தம் 1,73,175 ஆசிரியர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தனர். தொடக்கப் பள்ளி மாணவர்கள் 59.72 இலட்சம் பேர்களாவர். ஆசிரியர் — மாணவர் விகிதாசாரம் 1:34 ஆகும்.

பள்ளிகளில் கல்வியின் தரத்தினை உயர்த்துவதற்கான ஒரு சிறப்பு முயற்சியாக, கடந்த சில ஆண்டுகளாகத் தொடக்க நிலை ஆசிரியர்களை நியமிப்பது படிப்படியாகக் குறைக்கப்பட்டு, அவர்களுக்குப் பதிலாக உயர்நிலை ஆசிரியர்களே நியமிக்கப்பட்டு வருகின்றனர். உயர்நிலை ஆசிரியர்களாகத் தேர்ச்சி பெற்ற தொடக்க நிலை ஆசிரியர்களின் பதவிகள், உயர்நிலைப் பதவிகளாக மாற்றப்பட்டு, அவர்கள் அப்பதவிகளில் அமர்த்திக் கொள்ளப்படுகின்றனர். இதுவரையில் 33,500 தொடக்கநிலை ஆசிரியர் பதவிகள் உயர்நிலை ஆசிரியர் பதவிகளாக மாற்றப்பட்டுள்ளன. எஞ்சிய பதவிகளும் உரிய காலத்தில் படிப்படியாகத் தரமுயர்த்தப்படும்.

தொடக்கப் பள்ளிகளில் அறிவியல் பாடத் திட்டமும், ஏனைய பாடத் திட்டங்களும் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. அறிவியல் சாதனங்கள் வாங்குவதற்காக, தொடக்கப் பள்ளிகள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 300 வீதமும், உயர் தொடக்கப் பள்ளிகள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 1,000 வீதமும், வழங்குவது என்ற அடிப்படையில், அறிவியல் சாதனங்களும், ஏனைய கல்விச் சாதனங்களும் வழங்கும் திட்டம் 1960-ல் தொடங்கப்பட்டது. இதுவரை இத் திட்டத்தின் கீழ், 11,400 தொடக்கப் பள்ளிகளும், 3,000 உயர்தொடக்கப் பள்ளிகளும் பயனடைந்துள்ளன. 1974—75-ஆம் ஆண்டிலும், இத் திட்டத்தின் கீழ், 1,220 தொடக்கப் பள்ளிகளும், 334 உயர் தொடக்கப் பள்ளிகளும் பயன்பெறும்.

உயர் தொடக்க வகுப்புகளில் உடற் பயிற்சிப் பாடத்தைப் பேணி வளர்க்கும் வகையில், ஐந்து இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும் அனைத்திந்திய திட்டத்தின் கீழ் சுமார் 500 உடற் பயிற்சி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்கள் 1974—75-ஆம் ஆண்டிலும் நீடிக்கப்படுவர்.

கல்வியின் தொடக்க நிலைகளிலிருந்தே, பாடத் திட்டத்தின் ஒரு பகுதியாகப் பணிப் பயிற்சி அளிக்கப்பட்டு வர வேண்டுமென்று கல்வி வல்லுநர்கள் வலியுறுத்தி வருகின்றனர். இந் நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு, 1973—74-ஆம் ஆண்டில், உயர் தொடக்கப் பள்ளிகளில் 573 முழுநேர கைத்தொழில் ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டன. மேலும் கூடுதலாக முழுநேரக் கைத்தொழில் ஆசிரியர்களை நியமிக்கவும் கரு

விகளுக்கான மானியம் அளிக்கவும் 1974—75 திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. சிறுர்களின் தொழில் நுட்பத் திறமைகளை வளர்ப்பதும், ஆக்கபூர்வ திறமையை உருவாக்குவதும், அவ்வப் பகுதிகளின் தேவைக்கேற்ப பயனுள்ள சில கைத்தொழில்களைக் கற்றுக் கொள்ளச் செய்வதும், இத் திட்டத்தின் நோக்கங்களாகும்

**நண்பகல் உணவுத் திட்டம்:**

தமிழ் நாட்டில் செயலில் இருந்து வரும் நண்பகல் உணவுத் திட்டம், இந் நாடு முழுவதிலும் உள்ள கல்வித் துறை நிர்வாகிகள் போற்றிப் புகழும் அளவுக்குச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. தொடக்கப் பள்ளிகளில் உள்ள 1—8 வகுப்புகளில் படித்து வரும் மொத்த மாணவர்களில் மூன்றில் ஒரு பங்கினரான 19 இலட்சம் ஏழை மாணவர்களுக்கு இத் திட்டத்தின் கீழ் இலவச நண்பகல் உணவு வழங்கப்படுகிறது. அரிசன நலத் துறை நடத்தி வரும் அரிசன நலப் பள்ளி மாணவர்களும் இந்த 19 இலட்சத்தில் அடங்குவர். 1974—75 வரவு செலவுத் திட்டத்தில் இதற்கென ரூ. 235 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மாநில அரசு இவ்வகையில் செய்யும் செலவுடன் 'கேர்' நிறுவனமும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6 கோடி மதிப்பு உள்ள உணவுப் பொருள்களை உதவி வருகிறது.

சுகாதார முறையில் நண்பகல் உணவு தயாரிப்பதற்காக, மின் சாதனங்களுடன் கூடிய 76 மையச் சமையற் கூடங்கள், செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. இந்த மையச் சமையற் கூடங்களில் தயாராகும் உணவு, சுற்றுப் புறங்களிலுள்ள பள்ளிகளுக்கு மூடிய மோட்டார் வண்டிகளில் எடுத்துச் செல்லப்படுகிறது. இம் மாவட்டங்களில், மேலும் 21 மையச் சமையற் கூடங்கள் விரைவில் தொடங்கப்பட இருக்கின்றன. 1974—75-ஆம் ஆண்டில் இம் மையச் சமையற் கூடத் திட்டம் தஞ்சாவூர் மாவட்டத்திற்கும் விரிவாக்கப்பட்டு, அங்கு 24 மையச் சமையற் கூடங்கள் நிறுவப்படும்.

இத் திட்டத்தின்கீழ் பயன்படுத்தப்பட்டு வரும் மோட்டார் வண்டிகளையும், சமையல்



சாதனங்களையும் பழுது பார்த்து, பராமரித்து வருவதற்காக 'கேர்' உதவியுடன் சுமார் ரூ. 15 இலட்சம் மொத்தச் செலவில், தென் ஆர்க்காடு மாவட்டம் விக்கிரவாண்டியில்மத்திய பராமரிப்பு பணிக்களரி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்குத் தேவைப்படும் உணவுப் பொருள்களைச் சீராகச்சேமித்து வைக்க வசதியாக, 'கேர்' உதவியுடன் வட்டாரக் கிடங்குகள் 10 கட்டத் திட்டமிடப்பட்டது. இவற்றில் 6 வட்டாரக் கிடங்குகள் கட்டி முடிக்கப் பெற்று செயல்பட்டு வருகின்றன.

பள்ளி நண்பகல் உணவுக்கான பல்வேறு 'கேர்' நிறுவனத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் மாநில அரசின் பங்காக, 1974—75-ல் சுமார் ரூ. 60 இலட்சம் செலவிடப்படும்.

**இலவசப் புத்தகங்கள்**

1—3 வகுப்புகளில் பயில்வோரும், நண்பகல் உணவு பெறுவோருமான ஏழை மாணவர்களுக்கு முதல் வகுப்பில் பாடப் புத்தகங்களும் சிலேட்டும், இரண்டு, மூன்று வகுப்புகளில் பாடப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத் திட்டத்தின் கீழ் தற்போது ஆண்டுதோறும் 12 இலட்சத்திற்கும் அதிகமான் மாணவர்கள் பயன் அடைந்து வருகின்றனர். இத் திட்டத்தின்கீழ், இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கும் செலவை 1972—73-ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனமே ஏற்றுக் கொண்டு வருகிறது; சிலேட்டுகளுக்கும், பாட நூல் நிறுவனம் வெளியிடாத, சிறுபான்மையினர் மொழிகளுக்குரிய பாடப்புத்தகங்களுக்கும் ஆகும் செலவை அரசே ஏற்றுக் கொண்டு வருகிறது.

**பள்ளிக் கட்டடங்கள்**

ஊராட்சி ஒன்றியங்களைச் சேராத பகுதிகளில்தொடக்கப் பள்ளிக் கட்டடங்கள் கட்ட நகராட்சிகளுக்கும் தனியார் பள்ளி நிறுவனங்களுக்கும் மானியம் வழங்கிட ரூ. 4 இலட்சமும், அரசினர் தொடக்கப்பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்ட ரூ. 6 இலட்சமும், 1974—75 வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளன. 1974—75-ல் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பள்ளிக் கட்டட மானியங்கள் வழங்கிட, 1974—75-ஆம் ஆண்டுக்கான சமுதாய வளர்ச்சிப் பணிகள் வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 1,22 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இவை தவிர, பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்காகப் பரிசுச் சீட்டு விற்ற முதலிலிருந்தும், கணிசமான தொகை வழங்கப்படுகிறது.

கிராமப் பகுதிகளில் ஆசிரியைகள் வசிப்பதற்கு ஊக்கமளிக்கும் பொருட்டு, கிராமப் பகுதிகளில்ஆசிரியைகளுக்கான வீடுகள் கட்டும் திட்டம் செயல்பட்டு வருகிறது. ஊர் ஆட்சி ஒன்றியப் பகுதிகளில் 1,600-க்கு மேற்பட்ட வீடுகள் இதுவரை கட்டப்பட்டுள்ளன. இதற்கென சமுதாய வளர்ச்சிப் பணிகளின் வரவு-செலவுத் திட்டத்தில், 1974—75-ல் ரூ. 17.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள்**

தமிழ்நாட்டில் மொத்தம் சுமார் 32,500 தொடக்கப் பள்ளிகள் உள்ளன. இவற்றில் சுமார் 22,000 பள்ளிகள் ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்படுகின்றன. ஊராட்சி கல்வி நிதி உதவி விசாரணைக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் அப்பள்ளிகளுக்கு அளிக்கப்படும் அரசு மானிய உதவி முறையை அரசு அண்மையில் திருத்தியமைத்துள்ளது. புதிய முறையின்படி, (ஒரு ரூபாய் நில வரிக்கு 45 காசு என்று வசூலிக்கப்படும்) உள்ளூர் வரியில் 4/9 பாகம், தொடர்ந்துஊராட்சிஒன்றியத் தொடக்கக் கல்வி நிதிக்கு வழங்கப்படும். மேலும், 1971-ஆம் ஆண்டு மக்கள்தொகையை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள மக்கள் தொகைக்கு, தலைக்கு ரூ. 6 வீதம் கணக்கிட்டு, கல்வி மானியத்தையும் அரசு வழங்கும். தொடக்க நிலைக் கல்வியின் கீழ் ஆகும் எஞ்சிய செலவைத் திருத்தியமைக்கப்பட்ட வட்டார வகைப் பாட்டிற்கு ஏற்ப, அர

சும் ஊராட்சி ஒன்றியங்களும் பகிர்ந்து ஏற்றுக் கொள்ளும்.

## உயர்நிலைப் பள்ளிக் கல்வி

தமிழ்நாட்டில் 1973—74-ஆம் ஆண்டில், 14—17 வயதுத் தொகுதியினர் 22.38 இலட்சம் பேர் இருந்தனர். இவர்களில் 7.39 இலட்சம் பேர், அதாவது 33 விழுக்காட்டினர், உயர் நிலைப்பள்ளிகளில் 9—11 வகுப்புகளில் பயில்கின்றனர்.

இம் மாநிலத்தில் 2,823 உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன.

1974—75-ல் இவ் வயதுத் தொகுதியைச் சேர்ந்த 60,000 மாணவர்களைக் கூடுதலாகச் சேர்க்கவும், 1,500 ஆசிரியர்களை நியமிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஐந்து இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும் அனைத்திந்தியத் திட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் இந்த புதிய பதவிகளில் முதலாவது எடுத்துக் கொள்ளப்படுவார்கள். உயர்நிலைப் பள்ளிகளுக்கு மரச் சாமான்கள், சாதனங்கள் ஆகியவை வாங்குவதற்கு ரூ. 11 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### கல்வித் தர உயர்வு

அறிவியல் சாதனங்களை வாங்குவதற்கு ரூ. 15,000-ம், ஆய்வுக் கூடக் கட்டடங்களுக்காக ரூ. 25,000-ம், உயர்நிலைப் பள்ளிகளுக்கு உதவி மான்யம் வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படும். 1974—75-ல் இத் திட்டத்திற்கு ரூ. 35 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரை 810 உயர்நிலைப் பள்ளிகள் பயனடைந்துள்ளன. 1974—75-ஆம் ஆண்டில் மேலும் 90 உயர்நிலைப் பள்ளிகள் இத்திட்டத்தினால் பயனடையவிருக்கின்றன. மாநிலத்திலுள்ள ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும், உயர்நிலைப் பள்ளிகளுக்குத் தேவையான எல்லா அறிவியல் கருவிகளும் கொண்டுள்ள 14 ஆய்வுக்கூட இயல் ஊர்திகள் இயங்குகின்றன. இந்த வசதியை படிப்படியாக விரிவாக்கி, 47 கல்வி மாவட்டங்களிலும் ஒரு கல்வி மாவட்டத்திற்கு ஒரு ஆய்வுக் கூட இயல் ஊர்தி கிட்டும்படி செய்வது, பள்ளிக் கல்வித் துறையின் நோக்கமாகும். 1973—74-ஆம் ஆண்டில் கூடுதலாக 3 இயல் ஊர்திகளும், 1974-




75-ல் மேலும் 10 இயல் ஊர்திகளும் வாங்கப்படும்.

பள்ளிகளில் அறிவியல் கல்வி கற்கும் தரத்தை உயர்த்துவதற்காக, யூனிசெஃப் நிறுவனத்தின் உதவியுடன் ஒரு முன்னோடித் திட்டம், சென்னை, செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 50 தொடக்கப் பள்ளிகளிலும் 30 நடுநிலைப் பள்ளிகளிலும் (Middle Schools) கொண்டுவரப்பட்டது. இத்திட்டத்திற்கான புதிய அறிவியல் பாடத் திட்டம் 1971—72-ல் 1—3 வகுப்புகளிலும், 6-வது வகுப்பிலும், 1972—73-ல் 4, 7, ஆகிய வகுப்புகளிலும் 1973—74-ல் 5, 8 வகுப்புகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு மறு பயிற்சி அளிக்கப்பட்டு, பின் அப் பட்டதாரி ஆசிரியர்கள் இத் திட்டம் செயல்படும் பள்ளிகளின் மற்ற ஆசிரியர்களுக்குப் பணிக்காலப் பயிற்சி நடத்தினர். 1974—75-ஆம் ஆண்டில் யூனிசெஃப் நிறுவனத்தின் உதவியுடன், மேலும் பல பள்ளிகளுக்கு இத் திட்டம் விரிவாக்கப்படும்.

உயிரியல், இயல்பியல், வேதியியல், கணிதம் ஆகியவற்றில், 1969 முதல் ஒவ்வோர் ஆண்டும் கோடை விடுமுறைக் கால அறிவியல் பயிற்றுவிப்புப் பயிற்சி நிலையங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இவை, அறிவியல், கணித இயல், ஆசிரியர்களின் நன்மைக்காக, கல்வி ஆராய்ச்சி—பயிற்சி தேசியக் குழு, பல்கலைக் கழக மானியக் குழு ஆகியவற்றின் உதவியுடன் நடத்தப்படுகின்றன. 1,000-க்கு மேற்பட்ட உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் ஏற்கெனவே இப் பயிற்சி பெற்றுள்ளனர். 1974—75-ல் மேலும் ஏறக்குறைய 160 உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் மறுபயிற்சி பெறுவர்.

சென்னையிலுள்ள மாநிலக் கல்வி ஆய்வு நிறுவனத்தின் ஒரு பிரிவாக, மாநில அறிவியல் கல்வி நிறுவனத்தை ஏற்படுத்த அரசு அனுமதியளித்துள்ளது. பள்ளிகளில் அறிவியல் கல்வி, அறிவியல் பாடத் திட்டம், ஆசிரியர்களின் பயிற்சித் திட்டம், ஆய்வுக் குறிப்புரைகள் வெளியிடுதல், வளர்ச்சிப் பணி ஆகியவைகளின் மேம்பாட்டுக்கு இந்நிறுவனம் பொறுப்பாகும்.

எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் நல்ல நூலகங்களை அமைப்பதற்கு உதவும் திட்டத்தின்கீழ் இதுவரையில் 1,788 உயர்நிலைப் பள்ளிகளின் நூலகங்கள் உதவி பெற்றுள்ளன. 1974—75-ல், பள்ளி ஒன்றுக்கு ரூ. 1,000 மதிப்பு உள்ள நூலகப் புத்தகங்கள் வீதம், மேலும் 342 உயர்நிலைப் பள்ளிகளுக்குப் புத்தகங்கள் வழங்கப்படும்.

காட்சி, கேள்வி, சாதனங்கள் மூலம், பள்ளிகளில் கல்வியைக் கற்பிக்க வசதியாக, 1974—75-ல் ரூபாய் 1 இலட்சம் செலவில், 60 பள்ளிகளுக்கு வானொலிப் பெட்டிகளும், 50 பள்ளிகளுக்கு 35 மில்லிமீட்டர் துண்டுப் படச் சுருள் காட்டும் கருவிகளும், 10 பள்ளிகளுக்கு 16 மில்லி மீட்டர் திரைப்படம் காட்டும் கருவிகளும் வழங்கக் கருதப்பட்டுள்ளது.

கோத்தாரி கல்வி ஆணைக் குழுவின் கருத்துரைகளை ஒட்டி, 1972—73-ல், ஆண்களுக்காக புதுக்கோட்டையில் ஒரு முன் மாதிரிப் பள்ளியும், 1973—74-ல் சென்னையில் பெண்களுக்காக ஒரு முன் மாதிரிப் பள்ளியும் திறக்கப்பட்டுள்ளன. நன்கு தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களையும், விடுதி வசதிகளையும் கொண்ட இப் பள்ளிகள், தகுதியும் திறமையும் வாய்ந்த மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளுகின்றன. அவர்களில் பலருக்கு உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

உயர்நிலைப்பள்ளிக் கல்வியை வாழ்க்கைக்கேற்ப தொழில் சார்ந்ததாக ஆக்குவதற்கு, கோத்தாரி கல்வி ஆணைக்குழு பல்வகைப் பயிற்சிப் பள்ளிகள் (Comprehensive Schools) அமைப்பு பற்றி பரிவுரை செய்தது. தற்போது நடைபெறும் பள்ளிகளில் பத்தைத் தேர்ந்தெடுத்து, அவற்றை மேம்படுத்தி, பொதுவான பயிற்சி முறைகளுடன் தொழில் சார்ந்த பாட முறைகளையும் கொண்ட பல்வகைப் பயிற்சி

களை அளிக்கிற பள்ளிகளாக ஆக்கிடக் கருதப்பட்டுள்ளது. மாணவர்கள் தாமே சொந்த தொழில் நடத்துவதற்கும், தொழிற்சாலைகளில் வேலை பெறுவதற்கும் வசதியாக, அப்பள்ளிகளில் வேளாண்மை, தையல், தச்சுத் தொழில், வானொலிப் பெட்டிகளைப் பழுது பார்த்தல், டெலிவிஷன் பணி முதலிய பாட முறைகள் இருக்கும். 1974—75- வரவு செலவுத் திட்டத்தில் இப்பள்ளிகளுக்காக ரூ. 8.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### படிப்பு உதவித் தொகைகள்

தமிழ்நாட்டில், பள்ளிகளில் எல்லா நிலைகளிலும் இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. கிராமத்தைச் சார்ந்த கல்வியில் சிறந்த மாணவர்களுக்குப் படிப்பு உதவித் தொகை வழங்கும் ஒரு சிறப்புத் திட்டம் 1971—72-ல் தொடங்கப்பட்டது. அதன்கீழ், விடுதியில் தங்கிப்பயிலும் மாணவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,000, வீட்டில் தங்கி படிக்கும் மாணவர்களுக்கு ரூ. 500 என்ற விகிதத்தில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் இரண்டு மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. இத் திட்டம் 1974—75-லும் தொடர்ந்து நிறைவேற்றப்படும்.

இது தவிர, பர்மா, இலங்கை அகதிகள், முன்னாள் இராணுவத்தினர், பாதுகாப்புப் படையினர், அரிசனங்கள், பழங்குடி மக்கள், தங்கக் கட்டுப்பாட்டு ஆணையினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள், அரசியல் தியாகிகள் ஆகியோரின் குழந்தைகளுக்குத் தாராள கல்விச் சலுகைகள் தொடர்ந்து அளிக்கப்படுகின்றன.

சென்னை மாநகரிலுள்ள தொடக்க, உயர்நிலைப் பள்ளிகளிலுள்ள சுமார் 5,000 மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்வதற்காக முன்னோடித் திட்டம் ஒன்று 1971-ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்டுள்ளது. வட ஆர்க்காடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய மாவட்டங்களில் மருத்துவர்கள், இயல் ஊர்திகளில் சென்று பள்ளி மாணவர்களின் உடல் நலனை பரிசோதனை செய்கிறார்கள். ஏனைய மாவட்டங்களுக்கும் இத் திட்டத்தை விரிவு ஆக்கக் கருதப்பட்டுள்ளது.

### பள்ளி வளர்ச்சி மாநாடுகள்

பள்ளிக்குரிய வசதிகளையும், மாணவர்களுக்குரிய வசதிகளையும் சேகரித்துத் தருவதற்காக உள்ளூர் மக்களின் முயற்சிகளை ஒருங்கு திரட்டும் பொருட்டு, இதுவரை 500 பள்ளி மேம்பாட்டு மாநாடுகள் நடத்தப்பட்டுள்ளன. இவற்றின் வாயிலாகப் பொதுமக்களிடமிருந்து ரூ. 13 கோடி மதிப்புள்ள உதவி பெறப்பட்டுள்ளது. இத் திட்டம் மும்முரமாகத் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பொழுது அறிவியல், மற்றும் நூலகமேம்பாட்டிற்கான வசதிகளைப் பெறுவதில் நாட்டம் செலுத்தப்படுகிறது. பொதுமக்களின் நன்கொடையைக் கொண்டு 39 இலட்சம் மாணவர்களுக்கு ரூ. 2.54 கோடி மதிப்புள்ள சீருடைகள் இதுவரையில் வழங்கப்பட்டுள்ளன.

பாடத்திட்ட மேம்பாட்டுக்காக நிலையான அமைப்பு ஒன்றை ஏற்படுத்தும் நோக்கத்துடன் மாநிலக் கல்வி ஆய்வு நிறுவனத்தில் பாடத்திட்ட மேம்பாட்டுப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### தேர்வுகள்

கல்வித் தர ஆய்வு முறைகளை மேம்படுத்துவதற்காக 1972—73-ல் கல்வித் தர ஆய்வு மாநிலப் பிரிவு அமைக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட 250 உயர்நிலைப் பள்ளிகளில், 10-ஆம் வகுப்பில் முன்னோடித் திட்டமாக, மாணவர்களின் திறமையின் அனைத்துக் கூறுகளையும் அந்தந்த ஆசிரியர்களே முழு அளவில் மொத்தமாக மதிப்பீடு செய்யும் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டது. அது 1974—75-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படும். இந்த முன்னோடித் திட்டத்தில் பெற்ற அனுபவத்தை ஒட்டி இத் திட்டத்தை எல்லா உயர்நிலைப் பள்ளிகளுக்கும் விரிவாக்கக் கருதப்பட்டுள்ளது.

அரசுத் தேர்வு ஆணையாளர் 22 தேர்வுகளை நடத்துகிறார். இவற்றில் சில ஆண்டுக்கு ஒரு முறையாகவும், மற்றும் சில ஆண்டுக்கு இரு முறையும் நடப்பவையாகும். 1973 ஏப்ரல் திங்களில் 1,94,000 மாணவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதினார்கள். அவர்களில் 97,000 மாணவர்க தேர்ச்சி பெற்றனர். அது 50.8 விழுக்காடாகும்.

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுகளை இயந்திரக் கணிப்புப் பொறியில் பதிவிடும் முறை இப் பணியினை விரைவில் முடிக்க வகை செய்துள்ளது. இத்தேர்வுப் பணிகளைத் துரிதப் படுத்த வசதியாக 1974—75-ல் சிறிய அச்சகம் ஒன்றை அமைக்கவும் கருதப்பட்டுள்ளது.

18 வயது நிரம்பியவர் அனைவரும், ஏற்பு அளிக்கப்பட்ட இம் மாநிலப் பள்ளிகளில் ஒன்றில் 8-வது வகுப்புத் தேர்ச்சி பெற்றிருந்தால், தனிப்பட்ட முறையில் எஸ்.எஸ்.எல். சி. தேர்வு எழுதலாம் என்று விதி செய்யப்பட்டுள்ளது. இது கல்வித் துறையில் அரசு கொண்டு வந்துள்ள குறிப்பிடத்தக்க சீர்திருத்தமாகும். படிப்பை முடிக்காமல் நின்றுவிட்டவர்கள், பிற்காலத்தில் தங்களுக்கு விருப்பமுள்ள வேளையில் தனிப்பட்ட முறையில் கல்வி பயில வசதி செய்ய வேண்டும் என்று மாநிலத் திட்டக் குழு பொதுவாகப் பரிந்துரைத்திருந்தது. அப்பரிந்துரைக்கேற்ப இந் நடவடிக்கை பெரிதும் வரவேற்கப்பட்டுள்ளது.

### சிறப்புப் பள்ளிகள்

ஐந்து வயதுக்கும் குறைந்த சிறுவர் சிறுமியருக்கான 40 இளஞ்சிறார் பள்ளிகள், கல்வித் துறையினால் ஒப்புதலும், மானியமும் வழங்கப்பட்டு நடத்தப்படுகின்றன. இவை பெரும்பாலும் நகர்ப்புறப்பகுதிகளில் உள்ளன. கிராமப் பகுதிகளில் குழந்தைகள் காப்பகங்கள் ஊராட்சி ஒன்றியங்களினால் நடத்தப்படுகின்றன.



## தொழில் புகுமுகப் பயிற்சி நிலையங்கள்

தொடக்கப் பள்ளிப் படிப்பினை முடித்து விட்டுப்படிப்பை நிறுத்திவிட்ட 11—14 வயதுத் தொகுதியிலுள்ள இளஞ்சிறுவர்களுக்கு இந்திய அரசு தொடங்கிய தொழில் புகுமுகப் பயிற்சித்திட்டத்தின் கீழ் இம்மாநிலத்தில் 6 நிலையங்களில் புகுமுகத் தொழிற் பயிற்சி வழங்கப்படுகிறது.

## உடற் குறையுள்ள சிறுவர்களுக்கான பள்ளிகள்

உடல் ஊனமுற்ற சிறுவர்களுக்காகத் தற்போது இம் மாநிலத்தில் 27 பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. பார்வை இழந்த சிறுவர்களுக்காக 12 பள்ளிகளும், காது கேட்காத சிறுவர்களுக்காக 12 பள்ளிகளும், தொழு நோயால் வருந்தும் சிறுவர்களுக்காக 2 பள்ளிகளும், முடமாயுள்ள சிறுவர்களுக்காக 1 பள்ளியும் நடைபெற்று வருகின்றன. இப்பள்ளிகளில் 2,700-க்கு மேற்பட்ட மாணவர்கள் தற்போது பயின்று வருகின்றனர். காது கேட்காத சிறுவர்களுக்காக 1974—75-ல் தருமபுரி மாவட்டத்திலும் மேலும் 1 பள்ளியைத் திறக்கக் கருதப்பட்டுள்ளது.

தனியார் நிறுவனங்களால் நடத்தப்படும் 379 அனாதை இல்லங்களில் ஏறத்தாழ 67,000 அனாதைச் சிறுவர்கள் உள்ளனர். இந்த அனாதை இல்லங்களுக்கு மாநில நிதியிலிருந்து நிதி உதவி அளிக்கப்படுகிறது.

## வயது வந்தோருக்கான கல்வி

1974—75-ல் சேலம் மாவட்டத்தில் முதியோர் கல்வி நிலையங்களைத் தொடங்கி 1 இலட்சம் முதியோர்களுக்கு எழுத்தறிவு அளிக்கக் கருதப்பட்டுள்ளது. 1974–75 வரவு-செலவுத் திட்டத்தில் இதற்காக ரூ. 4.84 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ''வேளாண்மைத் தொழிலோடு இணைந்த எழுத்தறிவிப்பு'' நிலையங்களுக்காகும் செலவையும் சேர்த்தால், முதியோர் கல்விக்காக 1974—75-ல் மொத்தம் ரூ. 6.42 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## இளைஞர் நிலையங்கள்

1973 நவம்பர் திங்களில் மத்திய கல்வி அமைச்சகத்தால் தமிழ்நாட்டில் நேரு இளைஞர் நிலையங்கள் நான்கு திறக்கப்பட்டன. இந்த நிலையங்கள் தற்போது கடலூர், ராணிப்பேட்டை, மேட்டூர் அணை, முசிறி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. பிற நடவடிக்கைகளுடன் இந்நிலையங்கள், பள்ளிப் படிப்பை நிறுத்திவிட்ட இளைஞர்களுக்கு கல்வி அளிக்கும் திட்டங்களையும் மேற்கொள்ளும். வெகு தொலைவிலுள்ள டில்லியிலிருந்து இவை நிர்வகிக்கப்படுவதற்குப் பதிலாக இந்நிலையங்களை மாநில அரசின் நேரடி நிர்வாகத்தின்கீழ் கொண்டு வந்தால் அவை வெற்றிகரமான முறையில் செயல்படும் என்ற கருத்தை தமிழக அரசு இந்திய அரசுக்கு வலியுறுத்தியுள்ளது.

## விளையாட்டுக்களும் உடற்பயிற்சிக் கல்வியும்

மாணவர்களிடையே மட்டுமின்றிப் பொதுமக்களிடையேயும் விளையாட்டுக் கலைகளைப் பரப்புவதில் மாநில விளையாட்டுக் கழகமும், மாவட்ட விளையாட்டுக் கழகங்களும் பெரும் பங்கு ஆற்றி வருகின்றன. இதுவரை எட்டு மாவட்டங்களில் விளையாட்டு அரங்கங்கள் கட்டப்பட்டுள்ளன. 1974—75-ல் மேலும் ஒரு மாவட்டத்தில் விளையாட்டு அரங்கத்தைக் கட்டுவதற்கு மானியம் வழங்கப்படும்.

## சாரணர், சாரணியர் இயக்கங்கள்

1974—75-ல் தமிழ்நாடு, பாரத சாரணர், சாரணியர் சங்கத்தின் மொத்த உறுப்பினர்கள் 73,504. 1974—75-ல் கூடுதலாக 14,000 சிறுவர்கள் சாரண இயக்கத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

# கல்லூரிக் கல்வி

தமிழ்நாட்டில் 1961-62-ஆம் ஆண்டில் 59 கல்லூரிகள் செயல்பட்டு வந்தன. 1973-74-ல் 178 கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. 1961-62-ல் கல்லூரிகளில் மாணவர்களின் எண்ணிக்கை 45,000 ஆக இருந்தது. 1973-74-ல் 1.95 இலட்சமாக இந்த எண்ணிக்கை உயர்ந்துள்ளது.




பள்ளிகளில் சேர்க்கப்படும் மாணவர்கள் எண்ணிக்கை பெருகியதால் கல்லூரிகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கையும் பெருகி வந்துள்ளது. நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 40 புதிய கல்லூரிகள்தான் தொடங்க வேண்டும் என்று முதலில் முடிவு செய்திருந்தபோதிலும் கல்லூரி மாணவர் எண்ணிக்கைப் பெருக்கம் காரணமாக 56 புதிய கல்லூரிகள் நான்காம் திட்டக் காலத்தில் தொடங்கப்பட்டுள்ளன.

நமது மாநிலத்தில் தற்போதுள்ள 178 கல்லூரிகளில் 104 கல்லூரிகள் சென்னைப் பல்கலைக் கழகத்துடனும், 74 கல்லூரிகள் மதுரைப் பல்கலைக் கழகத்துடனும் இணைந்துள்ளன. ஒரு பல்கலைக் கழகம் தனது கல்விப் பொறுப்புகள் முழுவதையும் நன்கு நிறைவேற்ற, அதனுடன் சேர்ந்த கல்லூரிகளின் எண்ணிக்கை, மிஞ்சிப்போனால் 30 அல்லது 40-க்கு அதிகமாக இருக்கக்கூடாது என்று கஜேந்திர கட்கர் குழு பரிவுரை தந்துள்ளது. எனவே, தமிழ்நாட்டில் மேலும் ஒன்று அல்லது இரண்டு புதிய பல்கலைக் கழகங்களை ஏற்படுத்த வலுவான நியாயம் உள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள 178 கல்லூரிகளில் 51 கல்லூரிகள் அரசால் நேரடியாக நடத்தப்படுகின்றன. ஏனைய 127 கல்லூரிகள் மானியம் பெறும் தனியார் கல்லூரிகளாகும். 1973-74-ஆம் ஆண்டில் கல்லூரிக் கல்விக்கான மொத்த வரவு-செலவுத்திட்ட ஒதுக்கமாகிய ரூ. 11.28 கோடியில் ரூ. 3.51 கோடி தனியார் கல்லூரிகளுக்கு உதவி மானியமாகச் செலவிடப்பட்டது. 1973-74-ஆம் ஆண்டில் 51 அரசுக் கல்லூரிகளில் சுமார் 51,000 மாணவர்கள் பயின்றனர். மானியம் பெறும் 127 கல்லூரிகளில் 1,45,000 மாணவர்கள் பயின்றனர்.

அரசாங்கக் கோட்பாடான ''சமூக நீதியை'' செயல்படுத்து

வதில் அரசுக் கல்லூரிகளுக்கு முக்கிய பங்கு உண்டு. பள்ளிப் படிப்புக்கு மேலும் கல்வி கற்க விருப்பமுள்ளவர்கள் அனைவரும் தனியார் கல்லூரிகளில் சேர்ந்து படிக்க இயலாது போகலாம். தனியார் நிறுவனங்களில் ஏற்படும் கல்விச் செலவைக் கொடுக்க இயலாதவர்களும், சமுதாயத்தில் சமூக, பொருளாதார, கல்வித் துறைகளில் பின் தங்கிய பிரிவுகளைச் சார்ந்தவர்களுமான, மாணவர்களுக்கு அரசுக் கல்லூரிகள் இடம் கொடுத்து கல்லூரிக் கல்வி பெற உதவுகின்றன.

இம்மாநிலத்தில் 1973-74-ல் அரசுக் கல்லூரி மாணவர் ஒருவரிடமிருந்து கிடைக்கும் வருவாய், செலவைவிட மிகக் குறைவாகவே உள்ளது என்பதைப் பின்வரும் புள்ளி விவரம் காட்டும்;

| | கல்லூரி புகுமுக வகுப்பு | |
|---|---|---|
| | கலை | அறிவியல். |
| (1) | (2) | (3) |
| ஆண்டொன்றுக்கு ஒரு மாணவருக்கு ஆகும் செலவு (ரூபாய்) | 380 | 500 |
| ஆண்டொன்றுக்கு ஒவ்வொரு மாணவரிடமிருந்தும் கிடைக்கும் கட்டணம் (ரூபாய்). | .. | .. |

| பட்ட வகுப்பு | | பட்ட மேற்படிப்பு | |
|---|---|---|---|
| கலை | அறிவியல் | கலை. | அறிவியல். |
| (4) | (5) | (6) | (7) |
| 410 | 600 | 775 | 11,20 |
| 183 | 183 | அரசுக் கல்லூரிகளில் ரூ. 250 தனியார் கல்லூரிகளில் ரூ. 300-லிருந்து ரூ. 360 வரை | |

1974-75-ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட புதிய துறைகளும் சிறப்புப் பாடங்களும் துவக்கப்படவிருக்கின்றன :—

வரும் ஐந்தாவது திட்டக் காலத்தில் அரசுக் கல்லூரிகளில் கல்வித்தர மேம்பாடு குறித்து நாட்டம் செலுத்துவதே முதன்மையான பணியாக இருக்கும். இம்மாநிலத்தின் முதன்மையான இரண்டு அரசுக் கல்லூரிகளான மாநிலக் கல்லூரியையும், ராணி மேரி கல்லூரியையும் பட்ட மேற்படிப்பு அளவில் குறிப்பிட்ட பாடத்துறைகளில் சிறப்புக் கல்வி தரும் நிலையங்களாக மேம்படுத்துவது பற்றி அரசு தீவிரமாக ஆய்வு செய்து வருகிறது.

அறிவியல் கல்வியை வளர்க்கும் பொருட்டு அரசுக் கல்லூரிகளில் உள்ள ஆய்வுக்கூட வசதிகள் பெருக்கப்படும். அதிக விலையுள்ள பாடப் புத்தகங்களை வாங்க இயலாத மாணவர்கள் பயன்படுத்துவதற்காக அரசுக் கல்லூரிகளில் தமிழ்ப் பாடப் புத்தகங்கள் உட்பட, அனைத்துப் பாடப் புத்தகங்களும், பொது அறிவிற்கான புத்தகங்களும் சேமித்து வைத்து வழங்கப்படும். அரசுக் கல்லூரிகளில் மாணவர்கள் வசதிக்காக உணவருந்தும் இடங்கள், சிற்றுண்டிச் சாலைகள், சைக்கிள் நிறுத்துமிடம் போன்றவற்றை அமைக்கவும் தாராளமாக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

அரசுக் கல்லூரிப் பணியாளர்களுக்கு வீடுகள் கட்டித்தர 1974-75-ல் ரூ. 4 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. விளையாட்டுத் திடல்களைப் பேணி மேலும் வசதிகளைச் செய்வதற்கும் விளையாட்டுக்கான வேறு வசதிகளின் வளர்ச்சிக்கும் செலவிட நிதி ஒதுக்கப்படும்.

1974-75-ல் மேலும் ஒரு அரசுக் கல்லூரியைத் தொடங்குவதற்கும், புதிய தனியார் கல்லூரிகள் இரண்டினுக்கு அரசு மானியம் அளிக்கத் தொடங்குவதற்கும் 1974-75 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் படிப்படியாகச் செய்யப்பட்டு வருவது போல், 1974-75லும் அரசுக் கல்லூரிகளில் புதிய பட்டப் படிப்புப் பாடமுறைகளும், புதிய பட்ட மேற்படிப்புப் பாட முறைகளும் தொடங்கப்படும்.

பகுதி நேரக் கல்வி வசதியை அனைவருக்கும் அளிப்பதற்குத் தற்போது முதன்மை அளிக்கப்பட்டு வருகிறது. இந்நோக்கத்துடன் மாலை நேர வகுப்புக்களும், அஞ்சல் முறைப் பாடப் பயிற்சிகளும் நடத்தப்படுகின்

றன. கடந்த ஆண்டில் மாலை நேரக் கல்லூரி வகுப்புகளில் பயின்ற மாணவ்ர்களின் மொத்த எண்ணிக்கை 8,800 ஆகும். 1974-75-ல் மாலை நேர பட்டப்படிப்பு வசதிகளும், பட்ட மேற்படிப்பு வசதிகளும் விரிவாக்கப்படும். அஞ்சல் முறையில் கல்லூரி வகுப்பு நடத்திட மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு அரசு நிதியுதவி அளித்துள்ளது. இந்த அஞ்சல் வழிப்படிப்பு மாணவர்களின் பேராதரவைப் பெற்றுள்ளது மகிழ்ச்சிக்குரியதாகும்.

### படிப்புதவித் தொகைகளும், பயிற்சி உதவித் தொகைகளும்

கல்லூரிப் புகுமுகப் படிப்பு அளவில் இலவசக் கல்வி அளிக்கும் ஒரு சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். இத்திட்டத்தினால் அரசுக்கு ஆண்டுதோறும் ரூ. 2 கோடி செலவாகிறது. வேறு பல திட்டங்களின் கீழும் படிப்புதவித் தொகைகளும், பயிற்சி உதவித் தொகைகளும் அளிக்கப்பட்டு வருகின்றன.

அரிசன மாணவர்களும், பழங்குடி மாணவர்களும், பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களும் அரிசன நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆகிய துறைகளிடமிருந்து படிப்புதவித் தொகைகள் பெற்று வருகின்றனர்.

படிப்புதவித் தொகைத் திட்டங்களில் கல்லூரிக் கல்வி இயக்குநர் பொறுப்பில் உள்ளவற்றிற்கு மட்டும் 1974-75-ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு சுமார் ரூ. 1.24 இலட்சமாகும்.

தாய்மொழியைப் பயிற்றுமொழியாகப் பின்பற்றும் நடைமுறை, கல்விச் சீரமைப்புக்கு உகந்ததாக இருப்பதோடல்லாமல், சமுதாய மாற்றத்திற்கும் முன்னேற்றத்திற்கும் உறுதுணையாக விளங்கும் என்றும், அது சமுதாயத்தின் பின்தங்கிய பிரிவினர் கல்வி வசதி பெற வகை செய்யும் என்றும் நாடெங்குமுள்ள கல்வித் துறை வல்லுநர்கள் எடுத்துக் காட்டி வந்துள்ளார்கள். அவ்வாறே, அரசுக் கல்லூரிகளில் தமிழ் மூலமாகவும் பாடம் கற்பிப்பதற்கான வசதிகளை அரசு அளித்து வந்துள்ளது. 1973-74-ல் அனைத்து அரசுக் கல்லூரிகளிலும், மானியம் பெறும் கல்லூரிகளிலும் தமிழ்ப் பாடமொழி வகுப்புகளில் பயின்ற மாணவர்களின் எண்ணிக்கை வருமாறு:—

| | |
|---|---|
| புகுமுக வகுப்பு | -18,355 |
| பட்டப்படிப்பு வகுப்பு | -18,693 |
| மொத்தம் | 37,048 |

பி.ஏ., பி.எஸ்சி., பட்டப் படிப்பு வகுப்புகளில் தமிழ் மொழி மூலம் பாடம் பயில விழையும் மாணவர்களுக்கு ஊக்கமளிக்க, அரசுக் கல்லூரிகளில் படித்தாலும் சரி அல்லது தனியார் கல்லூரிகளில் படித்தாலும் சரி, மாணவருக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 180 படிப்புதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. கல்லூரிகள் அனைத்திலும் புகுமுக வகுப்பில் தமிழில் பயிலும் மாணவர் ஒவ்வொருவருக்கும் புத்தகப் படியாக ரூ. 50 கொடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தால் அரசுக்கு ஆண்டுதோறும் சுமார் ரூபாய் 40 இலட்சம் செலவாகிறது. இந்தத் திட்டம் கல்வி வளர்ச்சியிலும் சமூக வளர்ச்சியிலும் நல்ல பலனைத் தந்துள்ளது.

### வரலாற்று ஆராய்ச்சியை வளர்த்தல்

1973-74-ல், வரலாற்று ஆராய்ச்சிக் குழுவொன்றை அரசு ஏற்படுத்தி, பட்ட மேற்படிப்பு நிலை ஆராய்ச்சி நடத்துவதற்காக உதவித் தொகை அளிக்கும் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. இந்த ஆண்டில் வழங்கப்பட இருக்கும் 4 படிப்புதவித் தொகைகளுக்கு 700-க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் வந்ததுள்ளன. அவற்றுள் தகுதியான விண்ணப்பதார்கள் அடுத்த சில மாதங்களுக்குள் தெரிந்தெடுக்கப்படுவார்கள். அரசு இக்குழுவை ஏற்படுத்தியதும், படிப்புதவித் தொகைகளை அளித்ததும் பரவலாக வரவேற்கப்பட்டுள்ளன.

## சட்டக் கல்லூரி

சட்டக்கல்லூரி மாணவரின் எண்ணிக்கை 1968-69-ல் 1,045 ஆக இருந்தது. 1973-74-ல் இது சுமார் 2,527 ஆக (முறையான பட்டப்படிப்பு வகுப்புகளில் 1,830, மாலை நேர பட்டப்படிப்பு வகுப்புகளில் பாட முறைகளில் 610, எம்.எல். வகுப்புகளில் 87) உயர்ந்துள்ளது. சட்டப் படிப்பில் சேர்வதற்கான ஆர்வத்தை நிறைவு செய்யும் பொருட்டு மாலை நேர வகுப்புகள் 1966-67-ல் தொடங்கப்பட்டன. மாலை நேரக் கல்லூரி மாணவர்களுக்காகப் பட்ட மேற்படிப்பு வகுப்புகளும் (எம்.எல்) 1969-70-ல் தொடங்கப்பட்டன.

### முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி இலவசக் கண் சிகிச்சை முகாம்கள்

முதலமைச்சர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் அன்பளிப்பாக 1972-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் மூன்றும் நாள் தொடங்கப்பட்ட முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி இலவசக் கண் சிகிச்சை முகாம் மூலமாகக் கண் படலத்தினால் பார்வை இழந்த எல்லா மக்களுக்கும் சிகிச்சை அளிக்கபட்டு வருகிறது.

தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு மையங்களில் இதுவரை 119 கண் சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டன. அந்த முகாம்களில் கண் படல அறுவை சிகிச்சை செய்துகொண்டவர்கள் 62,354 பேர்.

கண்நோய்களுக்கு சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை 4,75,789 பேர்.

கண் பார்வை பரிசோதனை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 917 பேர்.

தேவையானவர்கள் அனைவருக்கும் இலவச மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்பட்டன.

இவை தவிர கோவை மருத்துவக் கல்லூரியிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத் தலைமையிட மருத்துவமனையிலும் உள்ள தற்காலிக கண் மருத்துவமனைகளில் முறையே 1,999 பேருக்கும், **579** பேருக்கும் கண்படல அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டன.

1974–75-ஆம் ஆண்டிலும் எல்லா மாவட்டங்களிலும் கண் சிகிச்சை முகாம்கள் தொடர்ந்து நடத்தப்படும்.

# தொழில் நுட்பக் கல்வி

தொழில் நுட்பக் கல்விக்காக 1972-73-ல் ரூ. 4.04 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டதற்கெதிராக 1974-75-ல் ரூ. 4.97 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத்துறையின் நிர்வாகத்தில் ஏழு பொறியியற் கல்லூரிகளும், 35 பல்தொழில் நுட்பப் பயிலகங்களும் (மூன்று மகளிர் பயிலகங்களும், ஐந்து தனித்தொழில் பயிலகங்களும் உட்பட) 14 தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகளும் உள்ளன. இதுவரை தொழில் வணிகத்துறை இயக்குநரால் நிர்வகிக்கப்பட்டு வந்த மூன்று கலைத் தொழில் பயிலகங்கள் 1-8-73 முதல் தொழில் நுட்பக் கல்வி இயக்கத்திற்கு மாற்றப்பட்டுள்ளன.

தற்போதுள்ள தொழில் நுட்பக் கல்வி பயிலகங்களின் எண்ணிக்கை, இன்னும் பல ஆண்டுகளுக்குத் தொழில் சம்பந்தமான தேவையை நிறைவு செய்யப் போதுமானதாக இருப்பதால் இவ்வெண்ணிக்கையை அதிகப்படுத்துவதோ அவற்றில் சேர்க்கும் மாணவர் எண்ணிக்கையை உயர்த்துவதோ, அவசியமில்லையென்று 1966-ஆம் ஆண்டில் அனைத்து இந்திய மட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. அதற்கிணங்க நம்து மாநிலத்தில் தொழில் நுட்பக் கல்வி பயிலகங்களின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்படவில்லை.

1973-74-ஆம் ஆண்டில் பொறியியற் கல்லூரிகளில் 1,832 மாணவர்களும், பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் 5,034 மாணவர்களும் சேர்க்கப்பட்டனர்.

இருக்கின்ற வசதிகளைச் சீர்செய்து ஒருமுகப்படுத்துவதிலும், பயிற்றுமுறை, ஆராய்ச்சி ஆகியவற்றின் தரத்தில் மேம்பாடு அடைவதிலும், கடந்த சில ஆண்டுகளில் அதிகக்கவனம் செலுத்தப்பட்டது. அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்கவும், தொழில்களின் பல்வேறு தேவைகளை நிறைவு செய்யவும் தற்போதுள்ள பட்ட வகுப்புகளிலும் 'டிப்ளமோ' வகுப்புகளிலும் சிறப்புப்பாடங்களைக் கொண்ட பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**முதுநிலை பட்ட வகுப்பு நிலை**

| | |
|---|---|
| 1 நகர்ப்புறப்பொறியியல் ... (Urban Engineering)<br>2 கணிப்புப் பொறி அறிவியல். (Computer Science) | பொறியியற் கல்லூரி, கிண்டி. |
| 'டிப்ளமா' வகுப்புகள், | |
| தொழில் மின்னணுவியல் ... (Industrial Electronics) | நாச்சிமுத்து பல்தொழில் நுட்பப் பயிலகம், பொள்ளாச்சி. |
| விருப்பப் பாடங்கள், மின்னணுவியல் ; இயக்கிகள் பின்னுதல் (Motor Winding) மற்றும் நீரேற்றும் கருவி பழுது பார்த்தல் (Pumpset Repairs) | அரசினர் தொழில் நுட்ப உயர்நிலைப்பள்ளி, தூத்துக்குடி அரசினர் பல்தொழில் நுட்பப் பயிலகத்துடன் இணைக்கப்பட்டது. |
| வரைபட வரைவாளர் சான்றிதழ் வகுப்பு (Certificate Course in Draughtmanship) தானியங்கிப் பொறியியல் (Automobile Engineering) | அரசினர் தொழில்நுட்ப உயர்நிலைப்பள்ளி, நாகப்பட்டணம். வலிவலம் தேசிகர் பல்தொழில் நுட்பப் பயிலகத்துடன் இணைக்கப்பட்டது. |

1974-75-ல் தற்போது கிண்டி பொறியியற் கல்லூரியுடன் இணைக்கப்பட்ட அடிப்படைப் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனத்திலுள்ள ஐ.பி.எம். 1630 என்ற கணிப்புப் பொறியையும், சென்னை இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னலஜியிலுள்ள (Indian Institute of Technology) கணிப்புப் பொறியையும் இணைக்க ஒரு தொடர்புச் சாதனத்தை ரூ. 12 இலட்ச மதிப்பீட்டில் நிறுவத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஏழை மாணவர்களுக்குப் புத்தகங்களைக் கடனுகக் கொடுத்து உதவுவதற்காக மாநிலத்திலுள்ள ஒருசில தொழில் நுட்பப் பயிலகங்களில் புத்தக வங்கிகள் ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்நூல்களை அம் மாணவர்கள் கல்வி ஆண்டு முழுவதற்கும் படிப்பதற்காக அவர்களிடமே வைத்துக் கொள்ளலாம்.

வரப்போகும் திட்டக் காலத்தில் கிண்டி பொறியியற் கல்லூரியை முன்னேறிய மேற்படிப்பு மையமாக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்தகைய முடிவைக் கருத்தில் கொண்டு, 'கோட்பாடு-செயல்முறை இயங்கு இயல்' துறை ஒன்றும், இயந்திரத் துணைக் கருவிகள், கட்டட இயக்கவியல், நிலமின் கட்டுப்பாடு, ஒருங்கிணைந்த சுழற்சிகள் ஆகியவற்றிற்காக ஆய்வகங்களும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தொழில் நிறுவனங்களுக்கு, அவற்றின் தொழில் வளர்ச்சியில் ஏற்படும் தொழில் நுட்பச் சிக்கல்களைத் தீர்வு செய்யும் பணிகளை ஏற்றுக் கொள்ளும் 'பொறியியல்-ஆலோசனை' அமைப்புகளிலும், ஆராய்ச்சி அமைப்புகளிலும் அதிகக்கவனம் செலுத்தப்படும். 'டாக்டர்' பட்ட நிலையில் ஆராய்ச்சிகளுக்கான வசதிகள் விரிவுபடுத்தப்படும்.